# இலக்கு

# ELAKKU



**STUDENTS' UNION**
**FACULTY OF COMMERCE & MANAGEMENT**
**EASTERN UNIVERSITY**
**SRI LANKA**
**1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. Soundaralingam.
E.U.S.L

# ELAKKU

இதழ் - 1

பொது சன நூலகம்
04 OCT 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# இலக்கு

ஆசிரியர் :

செல்வரெத்தினம் ஜெயபாலன்

820 (P) N

மாணவர் அவை:
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Elakku
July - 1998

| | | |
|---|---|---|
| Published by | : | Student Union - 1998<br>Faculty of commerce & Management<br>Eastern University - Sri Lanka. |
| Pages | : | 120 |
| Copies | : | 500 |
| Copyright | : | © |
| Printers | : | |

Eastern Graphics
205/2, Bar Road,
Batticaloa,
Sri Lanka.

Rs. 100/=

இலக்கு

| | | |
|---|---|---|
| ஆடி | : | 1998 |
| வெளியீட்டுக் குழு | : | மாணவர் அவை - 1998<br>வணிக முகாமைத்துவ பீடம்,<br>கிழக்குப் பல்கலைக் கழகம். |
| பக்கங்கள் | : | 120 |
| பதிப்புரிமை | : | © |

ஈஸ்ரன் கிராபிக்ஸ்
205/2, பார் வீதி,
மட்டக்களப்பு,
இலங்கை.

விலை.100/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபவேந்தர் அவர்களின் ஆசிச் செய்தி

கிழக்குப்பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட மாணவர்கள் அவையினால் வெளியிடப்படும் 'இலக்கு' எனும் சஞ்சிகைக்கு இவ்வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இச்சஞ்சிகையினை வெளிக்கொணர்வதில் தமது படிப்புக் கடமையுடன் மேலதிகமாக நேரத்தினை செலவழித்து உறுதுணையாக உதவுகின்ற இவ்வருட மாணவர் அவையினருக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சஞ்சிகைகள் வெளிவருவது பல்கலைக்கழகத்தின் ஓர் தேவையாகவும், உயிர் நாடியாகவும் காணப்படுகின்றது. இது மாணவர்களின் திறமைகளை ஏனையவர்கள் விளங்கிக் கொள்வதற்கும் ஒரு பாதையாக அமையும்.

கிழக்குப் பிராந்தியத்திற்கும் முழு இலங்கைக்கும் பல்லாயிரக்கணக்கான பட்டதாரி மாணவர்களை உருவாக்கித் தந்து கல்வித்துறையில் வளர்ச்சிக்கு அரிய சேவையாற்றி வரும் கிழக்குப் பல்கலைக்கழகமானது சமூகத்திற்கான சேவைகளில் பட்டதாரி மாணவர்களை மட்டும் உருவாக்குவது தமது ஒரே பணி எனக்கருதாமல், மாணவர்களிடையே காணப்படும் பல்வேறு திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிக்கொணர்ந்து சகல துறைகளிலும் சமூகத்திற்கு பயனுடைய பிரஜைகளை உருவாக்குவதிலும் தங்கியுள்ளது என்பதன் வெளிப்பாடே இச் சஞ்சிகையின் வெளிவருகையாகும். சஞ்சிகைகள் மாணவரிடையே மறைந்துள்ள பல ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு துணை புரிகின்றன. பல வடிவங்களில் மாணவரிடையே உள்ள ஆற்றல்கள் எழுத்து வடிவம் பெற்று ஏனையவர்களை மகிழ்வூட்டுவதற்கும் அவர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கும் அடித்தளமாக அமைகின்றன. இத்தேவையினை உணர்ந்து இதற்கான ஓர் முயற்சியினை இம்மாணவர் அவை எடுத்துள்ளது என்பதில் நான் பெருமையடைகின்றேன்.

வருங்காலங்களிலும் மாணவர் அவைகள் இதனைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் எனக் கூறிக் கொள்வதுடன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பாக வர்த்தக முகாமைத்துவ பீட மாணவர் அவையினை வாழ்த்துவதோடு இம்முயற்சி வெற்றியளித்து சிறந்த பயனையும் உங்கள் மத்தியில் கொண்டுவர வேண்டும் என எனது ஆசியினையும் வழங்குகின்றேன்.

'நன்றி'

**ஜீ.எவ். இராசேந்திரம்**
துணை வேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த மாணவர் சமூகத்தினர் தமது கற்கை நெறிக்கான பாடங்களையும் அதில் ஓர் புலமைத்துவத்தினையும் பெற்று விடுவதோடு அவர்கள் தமது நிலைப்பாட்டையும் முற்றும் முழுவதாக பூர்த்தி செய்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டு விட முடியாது. பல்கலைக்கழக குறுகிய வாழ்வுக் காலத்தில் பல்கலைகளையும் தம்மிடையே வளர்த்து, வெளிக்கொண்டு சென்று சமூகத்திற்கு வழங்குவதே சிறப்பானதாகும். இவ்வகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடமானது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பல்வேறு மாணவர் அவைகள் செயற்பட்ட போதிலும், இத்தகையதொரு சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவதில் இவ்வருடத்தில் அமைக்கப்பட்ட இவ்வவையே முதன்மை பெறுகின்றது. இம்மாணவர் அவையின் இக்கன்னி முயற்சியானது இவ்வருடத்துடன் மட்டும் முடிவு பெறாமல் தொடர்ந்து வரும் காலங்களிலும் தொடர முதலில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது மட்டுமன்றி இவ்வருட இம்மாணவர் அவையில் முயற்சியினையும் பாராட்டுகின்றேன்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி வரும் சமூகமானது கல்வித்துறையில் தமக்கு திறமை உள்ளது என்பதனை நேரடியாக வெளிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் பலவுள. ஆனால் அவர்களிடையே பல்வேறு துறைகளில் இலை மறை காய் போல் காணப்படும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு ஓர் உந்து களமாக இத்தகைய சஞ்சிகைகளின் வெளிவருகை அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. மாணவர்களின் இச்சஞ்சிகை வெளியீடலானது, மாணவர்களின் எண்ணங்கள், உணர்வுகள், திறமைகளை வெளிக்கொணர்வதற்கும், முரண்பாடுகளைக் களைந்து புரிந்துணர்வை ஏற்படுத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்பாடுகளில் ஓர் அணியாக செயற்பட்டு தமது நோக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் வழிபுரிவதாகக் காணப்படும்.

இத்தகையதோர் முயற்சிகளை எடுத்த கிழக்குப்பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட மாணவர் அவையினருக்கு வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி என்ற வகையில் பீடத்தின் சார்பாக இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரு மகிழ்வெய்துகிறேன். என் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நன்றி

**திருமதி. ஜனனி ரகுராகவன்**
**பீடாதிபதி**
**வர்த்தக முகாமைத்துவ பீடம்.**
**கிழக்குப்பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் வாழ்த்துச் செய்தி

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் 1987 / 1988 கல்வி அண்டில் வர்த்தக முகாமைத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை பல மாணவர் ஒன்றியங்கள் இருந்தும் கூட ஏனோ பீட மாணவர் ஒன்றியத்தின் சார்பில் மலர் ஒன்றினை வெளியிடாதது பெருங்குறையாக இருந்து வந்தது. இந்தக் குறையினை நீக்கும் முதல் முயற்சியாக எமது ஒன்றியம் இக்கல்வி ஆண்டில் 'இலக்கு' எனும் மலரினை வெளியிடுவதில் மனநிறைவு கொள்கின்றது.

இன்றைய முன்னேறி வருகின்ற உலகின் கல்விக் கொள்கையில் தாய் மொழிக் கல்வியின் அவசியமும் அதனுடன் தொடர்புபட்ட வகையில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவமும் நன்கு உணரப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ், ஆங்கில மொழிமூலம் மாறி வருகின்ற பொருளாதார முகாமைத்துவ, வர்த்தக, கணணி மற்றும் தொடர்பாடல் போன்ற துறைகளில் எமது பீட மாணவர்களினது எழுத்தாற்றலையும், ஆய்வு நிலைப்பட்ட திறனையும் வெளிக்காட்ட 'இலக்கு'களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

எமது ஒன்றியத்தின் மலர் வெளியீட்டு முயற்சிக்கு சிறந்த அறிவுரையும் ஊக்கமும் வழங்கிய வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதியும் எமது ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளருமாகிய திருமதி. ஜனனி ரகுராகவன் அவர்களுக்கும் துணைத்தலைவர்களுக்கும் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி எமது முயற்சிக்கு உதவிய விரிவுரையாளர்களுக்கும் ஒன்றிய உறுப்பினர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது மேலான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்வரும் கல்வி ஆண்டுளில் வரப்போகின்ற மாணவர் ஒன்றியங்கள் நாம் விட்டுச் செல்கின்ற 'இலக்கு' வெளியீட்டுப் பணியினைத் தொடர்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

'நன்றி'

கனகசுந்தரம் பிரபாகரன்
தலைவர்
மாணவர் அவை
வர்த்தக முகாமைத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் பேனாவில் இருந்து

கிழக்குப் பல்கலைக்கழகம் கல்லூரியாக இருந்து பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டு பதினொரு ஆண்டுகள் நிறைவுற்று பன்னிரெண்டாவது ஆண்டின் நடுப்பகுதியில் காலடி பதிக்கின்றது. பதினொரு கல்வியாண்டுகள் தாண்டப்பட்ட நிலையில் பன்னிரெண்டாவது கல்வியாண்டுக்கான (97 / 98) மாணவரவை செயற்குழுவின் செயலாளராக செயலாற்றுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். எமது அவை உருவாக்கப்பட்டதில் இருந்து பலதுறைகளிலும் செயலாற்றினாலும் மாணவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வரக்கூடிய வகையில் எந்த வெளியீடுகளையும் மேற்கொள்ளத் தவறியமை கவலைக்குரியதே. இக்குறை இவ்வாண்டின் செயற்குழுவின் முயற்சியால் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் 'இலக்கு' ஆண்டுச் சஞ்சிகையின் கன்னி மலர் மூலம் தீர்க்கப்படுவது எமது செயற்குழுவிற்கு மட்டுமல்ல, முழு வர்த்தக முகாமைத்துவ பீடத்திற்குமே பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். இவ் இலக்கு மாணவர்களதும் விரிவுரையாளர்களதும் பல தரமான ஆக்கங்களையும் சுமந்த முதல் பிரசவம். இனி வரும் காலங்களிலும் மாணவரவையைப் பொறுப்பேற்கும் உறுப்பினர்கள் இலக்கு இனிதே மலர ஆவணை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு இலக்கின் மலர்வுக்கு உரமிட்ட அனைவருக்கும் நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன்.

'நன்றி'

சித்திரவேல் கணேஸ்
செயலாளர்
மாணவர் அவை
வர்த்தக முகாமைத்துவ பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதய அறைகளில் இருந்து

கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடமானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்தத்தினை பூர்த்தி செய்தும் கூட அதன் மாணவர் ஒன்றியத்தின் சார்பில் ஒரு சஞ்சிகையும் வெளிவராதது பெருங்குறையாக இருந்து வந்துள்ளது. இந்த நீண்ட நாள் வழுவை பழுவாக நினைக்காமல் உங்கள் மத்தியில் இலக்கு எனும் சஞ்சிகையினூடாக தூரநோக்கான சிந்தனைகளை பல்வேறுபட்ட படைப்பாளிகளின் ஆற்றல்களை ஒன்று திரட்டி உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மட்டில்லா ஆனந்தம் அடைகின்றேன்.

பரந்து கிடக்கும் உலகச் செயற்பாடுகளை ஒரு கிராமமாக நோக்கும் வர்த்தக உலகின் மாற்றங்களை அத்துறையினருக்கும் அத்துறைகளில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் வழங்குவதனூடாகவே இன்றைய வணிக உலகினை புரிந்து கொள்வதுடன் அதனுடன் இணைந்து செல்லவும் முடியும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடே எமது 'இலக்கு'.

இலக்கின் பரந்துபட்ட பார்வையில் வணிக முகாமைத்துவ, பொருளியல், தகவல் தொழில்நுட்பக் கருத்துக்கள் மாத்திரமன்றி பல்கலைக்கழக வாழ்க்கையினை பூர்த்தி செய்து எங்களை வேதனையுடன் விட்டுச் செல்லும் இறுதி வருட மாணவர்களின் விலாசங்களையும் 1ம், 2ம், 3ம் இறுதி வருட மாணவர்களின் குழுப்படங்களையும் சேர்த்துக் கொண்ட இலக்கு அதற்கென்று ஒரு தனித்துவத் தன்மையைக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இது எமது மிகவும் குறுங்காலமுயற்சி. இனிவரும் காலங்களில் சஞ்சிகை வெளியீட்டினுடைய சகல செயற்பாடுகளையும் இலகுவான முறையில் திட்டமிட்டு மாணவர்கள் அனைவரினதும் உதவியைப் பெற்று இரண்டாம் தவணைக்காலத்திலையே சஞ்சிகையை வெளிக்கொனருவதன் மூலம் கடைசி நேரத்தில் இடம்பெறும் இடர்பாடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதனை எனது அனுபவத்தின் ஊடாக உங்களிடம் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மேலும் எமது சங்கத்துக்கென ஒரு தனியான இலட்சினை ஒன்று தயாரிக்கப்படவேண்டியுள்ளதும் ஒரு குறைபாடே. இனி வரும் காலத்தில் செயற்பாடுகள் மேலோங்க வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றேன்.

**'நன்றி'**

**செல்வரெத்தினம் ஜெயபாலன்**
**இதழாசிரியர்**
**மாணவர் அவை**
**வ.மு.பீடம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கின் உள்ளே

01.பொருளாதார அபிவிருத்தியில் அரசின் பங்கு.......................................01 - 12

02.வேலைத்தள வாழ்க்கைத்தர முறை.......................................13 - 18

03.சமநிலை தேசிய வருமானம்.......................................19 - 29

04.திருக்குறலில் காணப்படும் பொருளியல் கருத்துக்கள்.......................................30 - 38

05.குழுச் செயற்பாடு.......................................39 - 43

06.PERSONALITY AND SPEAKING.......................................44 - 46

07. பண வீக்கமும் அரசிறையின் தாக்கமும்.......................................47 - 51

08.இலத்திரனியல் காசு கொடுப்பனவு முறை.......................................52 - 55

09.The stregic impact of the internet in a Given Industry.......................................56 - 62

10.காசுப்பாய்சல் கூற்று இலங்கைக் கணக்கீட்டு நியம.......................................63 - 68

11.வெளிநாட்டு நேரடி முதலீடும் 3ம் மண்டல நாடுகளில் அதன் தாக்கமும்.69 -72

12.பொருட்கள் சேவைகள் மீதான வரி ஓர் அறிமுகம்.......................................73 - 80

13.நவீன தொடர்பாடல் தொழி நுட்பத்தில் இன்ர நெற்.......................................81 - 86

14.வேலையின்மையும் இலங்கையும், அதன் அண்மைக்கால போக்குகளும்...87 - 92

15. முடிவுகளைத்தேடி இது என்குரல் அல்ல நண்பனின் குரல்.......................................93 - 93

16. விளையாட்டுச் செய்தி.......................................94 - 96

- புகைப்படங்கள், விபரங்கள்.
- விளம்பரங்கள்
- நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDENT`S UNION - 1998

**Faculty of Commerce and Management**
**Eastern University Sri - Lanka.**

## Seated (Left to Right)

**Mr.K.Kokularajan (Junior Treasurer), Mr.S.S.Ganeshan (Secretary), Prof, G.F.Rajerderam (Vice.Chancellor) Mrs.Janani Raguragavan (Dean Commerce and Mangment,SemorTreasurer) Mr.K.Pirabaharan (President), Mr.S.Jayapalan(Editor)**

## Standing (Left to Right)

**Miss.N.Suthajini (Committee Member), Mr.S.Kangatharan (Vice President), Mr.P.Sivakanthan (Committee Member), Mr.P.Sanmuganathan (Committee Member), Mr.S.Lingeswarakumar (Committee Member).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தியில் அரசின் பங்கு

திரு. குமாரவேலு தம்பையா
விரிவுரையாளர்
பொருளியல் துறை
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தியில் அரசின் பங்கு

# THE ROLE OF STATE IN ECONOMIC DEVELOPMENT

## அறிமுகம் :

இன்றைய உலகளாவிய பொருளாதாரத்தில் ஒரு அரசின் செயற்பாட்டு ரீதியான தொழிற்பாடானது எவ்வகையில் அதிகரித்து வந்துள்ளது என்பது மிகவும் சுவாரசியமான நீண்ட நெடும் விவாதமாக உள்ளது. உலகில் இன்று காணப்படும் நவீன முதலாளித்துவ தன்மை கொண்ட நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியோ அன்றேல் அவற்றில் இருந்து சற்று வேறுபட்ட வகையில் காணப்படுகின்ற மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியோ அல்லது இவை இரண்டிலும் இருந்து வேறுபட்ட வகையில் அமைந்துள்ள புதிய கைத்தொழில் மய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியோ சரி அரசின் பங்கு பற்றுதல் இன்றி இடம்பெறவில்லை என்பதை அடித்துக் கூறலாம். எவ்வாறாயினும் இத்தகைய நாடுகளின் வரலாற்றுப் பின்னணியை அலசி ஆராயும் போது பல்வேறுபட்ட காலப்பகுதியில் வெவ்வேறுபட்ட முறையில் பொருளாதார அபிவிருத்தி மீது அரசின் ஈடுபாடும் அதன் அதிகரித்துச் செல்லும் போக்கும் வளர்ச்சி பெற்றுவந்துள்ளதை காணமுடியும். இக்கட்டுரையானது உலக பொருளாதாரத்தின் வரலாற்றுப் பின்னணியில் நின்று நோக்கும் போது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மீது அரசு கொண்டிருந்த பங்கை பரந்துபட்ட அனுபவங்களின் அடிப்படையிலும் நோக்குவதாக உள்ளது.

அடம்சிமித் கால கோட்பாட்டு ரீதியான பொருளாதாரப் பங்களிப்பானது வணிகவாத பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையீட்டைப் புறக்கணித்த ஒரு தனியார் துறைப் பொருளாதாரமாக அல்லது தலையிடாத் தன்மை கொண்ட ஒரு தூய சந்தை முயற்சிப் பொருளாதாரமாக காணப்பட்டது. எவ்வாறாயினும் இவ்வாறான பொருளாதாரங்களில் கூட வரையறைகளின் மத்தியில் பொருளாதார அபிவிருத்திக்கு அரசின் பங்கு அவசியம் என்பது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தது. இதன் பின் பழம் பொருளியலாளர் கால சுதந்திர சந்தை முயற்சி பொருளாதார நடவடிக்கைகளில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்தல், வரிச்சேகரிப்பு, பொதுவானதும் அவசியமானதுமான சமூக சேவைகளை நாட்டிற்குக் கிடைக்கச் செய்தல் போன்றன தொடர்பாக மிக குறைந்த அளவிலான அரச தலையீடு அவசியமானது என வலியுறுத்தப்பட்டு இருந்தது. இவ்வாறான ஒரு ஆரம்பத்தின் ஊடாக படிப்படியாக வளர்ச்சியடைந்த உலகப் பொருளாதார வளர்ச்சியூடாக அவ்வப்போது அரச செயற்பாட்டின் தன்மையும் அவற்றில் காணக்கூடியதாக இருந்தது. காலனித்துவ குடியேற்றத்தின் ஆரம்பமும் அதன் விரிவாக்கத்தின் காரணமாகவும் தூய்மையான முதலாளித்துவ முறைக்குப் பதிலாக காலனித்துவத்திற்குட்பட்ட நாடுகளில் கலப்பு முறை சார்ந்த பொருளாதாரத்தின் இருப்பும் அதன் வளர்ச்சியும் மென்மேலும் பொருளாதார நடவடிக்கைகளில் அரச செயற்பாட்டின் ஈடுபாட்டை அதிகரித்து வந்துள்ளதைக் காணலாம். காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடுகளில் சமூக பொருளாதார நடவடிக்கைகளை விரிவாக்கவும், அவ்வப்போது பொருளாதாரத்தை தேக்க நிலையினின்று மீட்டெடுக்கவும் அரச பங்கு பற்றுதல் இருந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. காலனித்துவ கால அபிவிருத்திச் செயற்பாடுகளை உற்று நோக்கும் போது தனியார் துறையின் ஊடாக வெளிவாரி முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்ட அதே சமயம் அரசு சார்பு ரீதியான பங்களிப்பினை சமூக மேந்தலைகள் மீது கொண்டிருந்தன. இவ்வாறான சமூக மேந்தலைகளில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சக்தி வினியோகம் முக்கியமானவையாகும். முதலாளித்துவம் அல்லது தனியார் துறை இத்தகைய துறைகளில் நாட்டம் செலுத்தாமைக்கு காரணம் இவை ஆபத்து நிறைந்தவையாக இருப்பதுடன் குறைந்த அளவான இலாப எல்லையை நீண்ட காலத்தில் மாத்திரமே பெறக்கூடியதாக இருப்பதும் ஆகும். மறுபுறத்தில் பொதுத்துறை சார்பான கண்ணோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சமூக மேந்தலைச் செலவீனங்கள் ஒரு பொருளாதாரத்தின் சமூக அபிவிருத்திக்கான தேவைப்பாட்டின் அவசியத்தை வேண்டி நிற்கின்றன. அதே சமயம் பொருளாதாரம் ஒன்றில் சமநிலை வளர்ச்சியைப் பேணவும், துறைகளிடையே சரியான வகையில் சேவைகள் பகிர்ந்தளிக்கப்படவும், இதன் காரணமாக மொத்தக் கேள்வி மொத்த நிரம்பல் என்பன ஏற்றத்தாழ்வின்றி செயற்படவும் அவசியமானது எனக் கருதப்படுகின்றது.

சந்தைப் பொருளாதாரங்களில் துரித வளர்ச்சியும் படிப்படியான அரச செயற்பாட்டின் ஈடுபாடும் பல்வேறுபட்ட மாற்ற சூழ்நிலைகளைத் தோற்றுவித்தமையினால் அரச செயற்பாடுகளின் எழுச்சியானது சந்தைத் தோல்வி ஒன்று ஏற்பட வழிவகுத்தது. இவ்வாறான சந்தைத் தோல்வி ஒன்று எற்பட்டதன் பின்னர் அதன் தொடர்ச்சியாக கெய்ன்சியப் புரட்சியும் ஏற்பட்டது. 1929களின் உலக பெருமந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கென்சியப் பொருளாதாரப் புரட்சியானது பொருளாதார நடவடிக்கைகளிலும் அபிவிருத்தி செயன்முறையிலும் அரசுகள் ஈடுபட வேண்டும் என்பதை மிகவும் இறுக்கமான முறையில் வலியுறுத்தி இருந்தது. இந்நிலமையானது அரச நடவடிக்கைகள் தொடர்பாக பொருளாதாரத்தில் பல்வேறுபட்ட விரிவான பல மாற்றங்களை உட்படுத்தியதோடு அபிவிருத்தியில் மிகப்பெரிய அளவில் அரசாங்கத்தின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்து இருந்தது. கெய்ன்சிய வாதத்தின் பிரகாரம் சந்தை முயற்சிப் பொருளாதாரங்களில் கூட முழுப் பொருளாதார நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் அரசாங்க செயற்பாடு அவசியமானது என்பது வலியுறுத்தப்பட்டது. இக்கால கட்டத்தில் உலக பொருளாதாரத்தின் ஒரு புறத்தில் நாணயக்கொள்கை, நிதிக்கொள்கை என்பவற்றின் ஊடாகமுதலாளித்துவப் பொருளாதாரங்கள் பணவீக்கமற்ற நிறைதொழில் மட்டத்துடன் கூடிய பொருளாதார அபிவிருத்திக்கான உறுதிப்பாட்டை ஏற்படுத்த அரசாங்கங்கள் முயற்சித்த வேளை மறுபுறத்தில் கென்சியப் பொருளாதாரத்தை அடியொற்றி ரஷ்யா உட்பட்ட மேற்கத்தேயப் பொருளாதாரங்கள் உலக பொருளாதாரத்தின் பெரும் பகுதியை தனது சக்திக்குட்படுத்தியதோடு முழுவதும் அரசாங்கத்திற்குட்பட்ட மத்திய திட்டமிடலை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் இணைந்தன. குறிப்பாக, உறுதியான பொருளாதார வளர்ச்சி, மூலவள அசைவு, உச்சமட்ட மூலவளப்பயன்பாடு, அதிகரித்துச் செல்லும் கைத்தொழில் வளர்ச்சி என்பவற்றின் பொருட்டு, மத்திய திட்டமிடல் பொருளாதாரங்களில் அரசாங்கச் செயற்பாடுகள் காணப்பட்டன. கீழைத்தேச மூன்றாம் உலகப் பொருளாதாரங்களில் இரண்டாம் உலகப் போருக்கு சற்று முன்னதாக அதாவது சந்தைப் பொருளாதாரம் தோல்வி அடைந்த அதேசமயம் காலனித்துவத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்டங்கள் இந் நாடுகளில் வெற்றி அடைந்தன.

இந்நிலமைகள் மூன்றாம் மண்டல நாடுகளில் இரண்டு வேறுபட்ட மாதிரிகளைத் தோற்றுவித்து இருந்தன. ஒன்று காலனித்துவ முறையில் இருந்து மாறுபடாத அதே மாதிரியான சந்தைப் பொருளாதாரங்களுடன் இணைந்த ஓரளவு அரசாங்க செயற்பாட்டுடன் கூடிய பொருளாதாரமுறைகள், இரண்டு காலனித்துவ முறையைப் பின்பற்றாத பொதுத்துறை, தனியார் துறை இரண்டையும் இணைத்த வகையிலான அரச செயற்பாடுகள் அதிக அளவில் காணப்படக்கூடியதான கலப்புப் பொருளாதார முறை எவ்வாறாயினும் பெரும்பாலான மூன்றாம் மண்டல நாடுகளில் முதலாளித்துவ சந்தை அமைப்பையும் சமதர்ம திட்டமிடலையும் இணைத்த வகையிலான கலப்புப் பொருளாதாரங்களே அதிகம் காணப்பட்டன. இந் நாடுகளில் கூட அரசின் செல்வாக்கு அதிக அளவில் காணக்கூடியவாறான பொதுத்துறை நடவடிக்கைகளே அதிகம் காணப்பட்டன. இத்தகைய நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் பொதுவான பொருளாதார நடவடிக்கைகள் மீதும் சிறப்பாக முழு பொருளாதார அபிவிருத்தி மீதும் முழு மையத்தை அல்லது அதி கூடிய பலத்தை கொண்டிருந்ததை அவதானிக்கலாம். குறிப்பாக பிரதான கொள்கைகள் என்ற அடிப்படையில் நாணய இறைக் கொள்கைகளும் நிதி சார்ந்த சட்டமுறைக் கொள்கைகளும் (நாணயமாற்றுவீதம், கூலி, விலைமட்டம், கைத்தொழில் அனுமதி, குடிவரவு, குடிஅகல்வு தொடர்பான சட்டங்கள்) இவற்றை விட பொதுவான கொள்கைகள் என்ற அடிப்படையில் சந்தைச் சபைகள், பொதுப்பயன்பாட்டு மையங்கள், ஆராட்சி நிறுவனங்கள் என்பனவும் அரச ஏற்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவை தவிர தேசிய மயமாக்கல் கொள்கை, வெளிநாட்டு உதவி தொடர்பான கொள்கை, தனியுரிமை தொடர்பான சட்டங்களை இயற்றுதல், நிலச்சீர்திருத்தம், வருமான மறு பங்கீடு, சமூக மறுமேந்தலை அபிவிருத்தி, வறுமையை ஒழித்தல் என்பன தொடர்பான தேசியக் கொள்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்தல் என்பவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றன.

பொதுவாகவே 1950 களின் பின்னரான அபிவிருத்தி பற்றிய புதிய சித்தாந்தங்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் சரி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் சரி பொருளாதார அபிவிருத்தியில் அரச பங்களிப்பு தொடர்பாக ஒரு புதிய பரிமாணம் ஏற்படுத்தி இருந்ததை மறுக்க முடியாது. சிறப்பாக மூன்றாம் மண்டல நாடுகளில் காலனித்துவ ஆட்சியின் போது அந்த அந்த நாடுகளின் அரசும் அவற்றின் கலாசாரமும் செல்வாக்கு செலுத்திய போதும் இவை எல்லாவற்றிற்கு மேலாக மேற்கத்தேய நாடுகளின் ஊடுருவலும் அவற்றின் மேலோங்கிய செல்வாக்கும் அதிக அளவில் ஆக்கிரமித்து இருந்தமை வெளிப்படை. ஆனால் 50களின் ஆரம்பத்தில் இருந்து அநேக குடியேற்ற நாடுகள் சுதந்திர அரசுகள் ஆகியதைத் தொடர்ந்து குடியேற்ற நாாடுகளில் மேலைத்தேச நாடுகளின் நேரடியான ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக சுதந்திர அரசுகளின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது. இம் மூன்றாம் மண்ட்ல நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான பிரச்சனைகள் மிகவும் சிக்கல் வாய்ந்தவையாகவும் அதிக அளவில் சமூக அரசினைப் பிணைத்துக் கொண்டு காணப்பட்டன. சிக்கல் வாய்ந்த இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இந் நாடுகளின் அரசுகளை சீரான முறையில் ஒழுங்கு படுத்தப்பட்ட அமைப்புக்களாக வகுத்துக் கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. எவ்வாறாயினும் ஏற்கனவே விவாதிக்கப்பட்டதைப் போல் இந் நாடுகளில் முதலாளித்துவத்தையும் சமதர்மத்தையும் இணைத்த வகையிலான அபிவிருத்திப் போக்கும் திட்டமிடல் போக்கும் உறுதியாக இந் நாடுகளின் அரசினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

## அ) நிறுவன ரீதியான கட்டமைப்பில் எற்படும் மாற்றம்:

ஒரு நாட்டின் முழு அபிவிருத்தி சார் செயற்பாட்டிலும் பொருளாதார அபிவிருத்தியையும் திட்டமிடலையும் முன்னெடுத்துச் செல்வதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் நிறுவன ரீதியான அமைப்புக்களில் மாற்றத்தைக் கொண்டு வருவதோடு பொருளாதார சமூக அபிவிருத்திக்கு இந்நாடுகளில் தடையாக இருக்கக் கூடிய பல்வேறு சமய, மரபு சார் தடைகளை வெற்றி கொள்ள செய்வதாக இருக்கும். அபிவிருத்தியில் ஏற்படக் கூடிய படிமுறை மாற்றங்களானவை கலாசார பண்பாட்டியல் ரீதியாக மக்கள் கொண்டிருக்கக் கூடிய சாதகமான நம்பிக்கைகள், விழுமியங்கள், கொள்கைகள் என்பவற்றை வளப்படுத்தும் அதே சமயம் இன, மத, மொழி, சாதி அடிப்படையிலான வேறுபாடுகளைக்களைய வழிவகுக்கும். இவ்வாறான மாற்றங்கள் ஒரு சமூகத்தில் அல்லது கலாசாரத்தில் புரட்சிகர மாற்றங்களுக்குக் கூட வழி விடுவதாய் அமையும். இம்மாற்றங்களை ஏற்படுத்துவதில் வெவ்வேறு வகைப்பட்ட நிறுவன ரீதியான புதிய அமைப்புக்கள் மூலமோ அன்றேல் ஏற்கனவே அந்நாடு கொண்டுள்ள அமைப்புக்களில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் மூலமோ செய்ய வேண்டி ஏற்படும். ஐரோப்பிய படிப்பினைகளும் அதற்கும் மேலாக ஏனைய விருத்தியடைந்த நாடுகளின் செயல் ரீதியான அனுபவமும் சாதகமான சமூக மாற்றங்கள் அபிவிருத்திக்கு முண்டு கொடுப்பதிலும் அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவதில் நிறுவன அமைப்புக்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருப்பதையும் காண முடியும்.

இந் நிறுவன ரீதியான மாற்றங்கள் பொருளாதார நோக்கில் பார்க்கும் போது தனித்து சமூக, கலாசார, பண்பாட்டியல் மாற்றங்களுக்கு புறம்பாக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதில் தனித்துவம் பெற்றுள்ளன. மூலதன ஆக்கத்திறனை அதிகரித்தல், தொழில்நுட்பத்தில் துரித மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பவற்றிற்கு நிறுவன கட்டமைப்புக்கள் வழிவகுத்துள்ளன. பொருளாதார காரணங்களுக்கு புறம்பாக பொருளாதாரமற்ற காரணிகளும் (Non Economic Factors) முக்கியமானவை. சமய ரீதியான சிந்தனைகளில் ஏற்படும் மாற்றம், அரசியலில் துரித வளர்ச்சி போன்றவை இவற்றில் முக்கியமானவை. எனவே பொருளாதார காரணிகளும் பொருளாதாரம் அற்ற காரணிகளும் இணைந்த வகையிலேயே பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றினை துரிதப்படுத்தவும் விரைவாக்கவும் உதவுகின்றது. அதே சமயம் பல்வேறு பொருளாதார முயற்சிகளில் தொழிற்பிரிப்பை ஏற்படுத்துதல், வர்த்தக நடவடிக்கைகளில் வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகியன நிறுவனங்கள் சுதந்திரமாக இயங்கவும் வழிவகுப்பதாய் இருக்கும். நிறுவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான மாற்றங்கள் மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ தமது இலக்குகளுக்கு புறம்பான வகையில் இணை காரணிகளிலும் மாற்றத்தைக் கொண்டு வரும் உதாரணமாக சமூக சிந்தனைகளில் நிறுவனங்கள் ஏற்படுத்தும் மாற்றம் சமூகத்தில் உள்ளவர்களுக்கு புதிய சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க உதவலாம்.

## ஆ) ஒழுங்கமைப்பிலான மாற்றங்கள்:

ஒரு பொருளாதாரத்தின் செயற்பாடுகளில் அரசானது அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்கும் உரிய ஒழுங்கமைப்பைச் செய்ய வேண்டியது ஒரு பிரதான கடமையாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உற்பத்தி, காரணி, பொருட் சந்தைகளை அமைப்பதிலும் ஒழுங்கு படுத்துவதிலும் விரிவாக்கம் செய்வதிலும் அரசு பெரும் பங்காற்ற வேண்டியுள்ளது. குறிப்பாக சந்தை நடவடிக்கை தொடர்பாடல், போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்தல், ஒழுங்கமைக்கப்பட்டதும் விரிவாக்கப்பட்டுமான அடிக்கட்டுமான வசதிகளை பெருக்குதல் ஆகியன ஒரு அரசின் பிரதான செயற்பாடாக உள்ளது. ஏனெனில் தனியார் திறமைமிக்க சந்தைகளை ஆரம்பிப்பதற்கும் அவை ஒரு பொருளாதாரத்தில் துரிதமான செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டியது அவசியம். மறுபுறத்தில் அரசின் நிதிச் சந்தை நடவடிக்கைகளையும்அவற்றோடு தொடர்புடைய நிறுவன ரீதியான அமைப்புக்களையும் ஒழுங்கமைப்பதன் மூலம் விவசாயம், கைத்தொழில், சேவைத்துறைகளின் வளர்ச்சிக்கும் ஒருங்கிணைப்பிற்கும் உதவக்கூடியதாக இருக்கும். வளர்முக நாடுகளில் விருத்தி செய்யப்படவேண்டிய நிதிநிறுவனக் கட்டமைப்புக்கள் அபிவிருத்திக்கு உதவக் கூடியவாறு கூட்டுறவு வங்கிகள், அடைமான வங்கிகள், கைத்தொழில் வங்கிகள், முதலீடு சார்ந்த வங்கிகள், கூட்டுத்தாபனங்கள் என பலவகையில் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவைகள் உள்ளது.

காரணிச்சந்தையும் விசேடமாக ஊழியச் சந்தையை ஒழுங்குபடுத்தும் பாரிய பங்கு வளர்முக நாடுகளில் அரசாங்கத்தையே சார்ந்துள்ளது. அரசாங்கமானது உற்பத்தித் திறன் தொழில்நுட்ப திறன் என்பவற்றை வளர்த்தெடுக்கத்தக்க வகையில் ஊழியச் சந்தையை ஒழுங்குபடுத்தி முகாமை செய்தல் அவசியமாகும். குறிப்பாக சட்டதிட்டங்களை வகுப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கான கூலி மட்டம், வேலை நேரம், சமூக நல கொடுப்பனவுகள், இழிவுக்கூலி, தொழிற்சங்க ஒழுங்குபடுத்தல், வேலைகொள்வோர் தொழிலாளர் உறவு என்பவற்றை சீர் செய்யலாம். இவற்றைச் செய்வதன் மூலம் விளைதிறனையும் வினைதிறனையும் அதிகரிக்கச் செய்வதோடு உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிக்கும் வாய்ப்பும் உண்டாகும். மூன்றாம் மண்டல நாடுகளைப் பொறுத்தவரை ஒழுங்குபடுத்தப்படாத பெருமளவான ஊழியம் கிராமியத் துறை சார்ந்த விவசாய முயற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதோடு அவை கீழ் உழைப்பு, மறைமுக வேலையின்மை ஆகியவற்றுக்கு உட்படுவதாக காணப்படுகின்றது. இந்நிலமையானது கிராமத்திலிருந்து தொழில்நகர்வு ஏற்பட உதவுவதுடன் பல்வேறு தேவையற்ற சமூக அரசியல் பிரச்சனைகளுக்கும் வழிவகுக்கிறது. இதனால் அரசாங்கமானது நகரத்தை நோக்கி நகர்கின்ற கிராமிய ஊழியத்தை சரிவர ஒழுங்கமைப்பதற்கும் தொழில்சார் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் இலகுவில் கிடைக்கச் செய்வதற்கும் கிராமியத் துறையையும் நகரத்துறையையும் ஒழுங்கமைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

## இ) சமூக பொருளாதார மேந்தலைகள்:

காலனித்துவத்திற்கு பின் அரசியல் விடுதலை பெற்ற அநேக வளர்முக நாடுகளில் சமூக பொருளாதார மேந்தலைகள் தொடர்பான அபிவிருத்தி முயற்சிகளும் திட்டமிடல் நடவடிக்கைகளும் பெரும்பாலும் அரச செயற்பாட்டின் கீழ் கொண்டிருந்தமையைக் காண முடியும். கீழ் மட்ட மக்களினது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பொதுவாக, ஒரு நாட்டின் முழு அபிவிருத்திக்கும் வழிவகுக்கக் கூடிய அவசியமான சேவைகளை அரசு செய்ய எத்தனித்துள்ளது. பெருந்தெருப் போக்குவரத்து, புகையிரத போக்குவரத்து தொலைத்தொடர்பு, நீர்ப்பாசன வேலைகள், மின்சக்தி, நீர்விநியோகம், வீடமைப்பு ஆகியன அரச செயற்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் உள்ள பிரதான பொருளாதார மேந்தலைகளாகும். நீண்ட கால முதலீடுகளையும் பெரிய அளவிலான மூலதன திரட்சியையும் உள்ளடக்கியுள்ள இப்பொருளாதார மேந்தலைகள் உடனடியாக இலாபத்தை தராதவாறு ஆபத்து மிக்கனவாய் உள்ளமையினால் தனியார் துறையினர் இதில் ஆர்வம் காட்டுவது கிடையாது. இதனால் பொதுப்பயன்பாட்டுக்குரிய இச்சேவைகளை அரசு தனது முழுப்பங்கையும் பலத்தையும் பயன்படுத்தி தொழிற்படுத்தி வருகின்றது. இவற்றை அபிவிருத்தி செயன்முறையில் அரசாங்கம் ஒன்று முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றுவதற்கும் விருத்தி செய்வதற்கும் முயற்சிக்கின்றது. முக்கியமாக இத்தகைய மூன்றாம் மண்டல வளர்முக நாடுகளில் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்துவது அவசியமாகும். சிறிய, பெரிய நீர்ப்பாசன வேலைகள், அணைகட்டுதல், நீர்ப்பாசன வாய்க்கால்களை அமைத்தல், புதிய நீர்ப்பாசன செயற்திட்டங்களை நிறுவுதல் போன்றவற்றை சொந்தமாக்கி இயக்கி தொழிற்படுத்தும் நடவடிக்கைகள் அரசினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. (Owned and operated by state)

சமூக மேந்தலை அபிவிருத்தி தொடர்பாக உலக நாடுகள் யாவற்றிலும் அரச செயற்பாட்டின் கீழ் இடம்பெறும் ஒரு அபிவிருத்தி முயற்சியாக கல்வி காணப்படுகிறது. கல்வியின்றி பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியாது என பல பொருளியல் அறிஞர்கள் வாதிடுகின்றனர். An International Economy (P.186) என்ற நூலில் மிர்டார் என்பவரும் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார். 'To start and national development programme while leaving the population largly illiterate seems to me to be futile" ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு அளவு ரீதியான ஊழியர் மாத்திரமன்றி தர ரீதியான ஊழியரும் அவசியம் என்பதை பல பொருளியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். கல்வியற்ற நிலையில் ஒரு ஊழியரினால் தொழில்நுட்ப ரீதியாகவோ விளை, வினைதிறன் ரீதியாகவோ உற்பத்தியை அதிகரிக்க முடியாது. எனவே ஒரு நாட்டுக்குத் தேவையான எல்லோருக்குமான பொதுக் கல்வியை வழங்க வேண்டிய ஒரு கடப்பாடு அரசுக்கு உண்டு. இது அரசினால் செய்யக்கூடிய ஒன்று. ஒரு நாட்டின் ஆரம்பக் கல்வி உயர் கல்வி வரையான பெருமளவான மனித வளங்களும் பௌதிக வளங்களும் தேவைப்படுவதனால் அவற்றை அரசே செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் ஆசிரியர் தொடக்கம் ஆய்வாளர் வரை தொழில்நுட்பவியலாளர் தொடக்கம் உயர் விஞ்ஞானி வரை ஒரு நாட்டுக்குத் தேவையான பயிற்சி ரீதியான, நுட்ப ரீதியான அறிவு போன்றவற்றையும் அவற்றுக்குத் தேவையான நிறுவன ரீதியான அமைப்புக்களையும் அரசே முன்னின்று ஒழுங்குபடுத்த வேண்டும். உண்மையில் வேக வளர்ச்சி அடிப்படையிலான விரைவுபடுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சியை மூன்றாம் மண்டல வளர்முக நாடுகளில் ஏற்படுத்துவதில் நேரடியானதும் கணிசமானதுமான பங்களிப்பை கல்வி கொண்டுள்ளது.

சமூக மேந்தலை அபிவிருத்தியில் அரசு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டிய மற்றொரு அபிவிருத்தி பிரிவாக பொதுச் சுகாதாரம் காணப்படுகிறது. கல்வியினூடாக ஊழியத்தினது உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டுமாயின் ஒவ்வொரு நாடும் சுகாதார நடவடிக்கைகளில் அதிகளவு ஈடுபாடும் அக்கறையும் செலுத்த வேண்டியது அவசியம். சுகாதாரத்திலான துரித முன்னேற்றம் சூழலியல் பாதுகாப்பை விருத்தி செய்ய வேண்டியதுடன் கிராமம், நகரம் ஆகிய இரு மட்டங்களிலும் அவற்றை பரவலாக்கம் செய்ய வேண்டிய தேவையும் உள்ளது. சுத்தமான நீர் விநியோகம் வசதியுள்ள வீடமைப்பு, சமூக மட்டத்தில் ஏற்படக்கூடிய தொற்றுநோய்களை தடுத்தல், சூழல் மாசடைதலை தடுத்தல், எல்லா மட்டங்களிலும் மருந்து வகைகளையும் சுகாதார சேவைகளையும் கிடைக்கச் செய்தல், தாய் சேய் நலனைப் பேணுதல், சுகாதார கல்வி, குடும்பத் திட்டமிடுதல் என்பவற்றுக்கான வசதிகளை அதிகரித்தல், மருத்துவம் சுகாதாரம் சம்பந்தப்பட்ட எல்லாவகையான பயிற்சிகளையும் வழங்குதல், போன்ற நடவடிக்கைகள் மூலம் திறம்பட அரசொன்று பங்குபற்றுவதனூடாக சமூக மேந்தலை அபிவிருத்தியைத் தூண்ட முடியும். அரசு ஒன்றே பொதுச் சுகாதார அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும் என்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் கற்பிக்கப்படுகின்றது.

**ஒன்று:** பொருளாதார அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் பொருட்டு ஊழியத்தின் உற்பத்தித் திறனையும் வினைதிறனையும் ஏற்படுத்துவ்தற்கும் பொதுச் சுகாதார வசதிகளை விருத்தி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டு:** தாய், சேய் மரணத்தைக் குறைப்பதன் மூலம் நிலையான தன்மையில் சனத்தொகை வளர்ச்சியை பேணக்கூடியவாறு குடும்பத் திட்டமிடலை மேற்கொள்வதற்கு பொதுச்சுகாதாரத்தை அரசு விருத்தி செய்ய வேண்டும்.

பொதுவாக வளர்முக நாடுகளில் குடும்பத் திட்டமிடல் இன்று அரசினால் ஒழுங்குபடுத்த வேண்டியதும் செய்யப்பட வேண்டியதுமான கட்டாயக் கடமையாக உள்ளது. ஏனெனில் இந்நாடுகளில் ஒப்பீட்டு ரீதியாக பிறப்பு வீதம் உயர்நிலையிலும் இறப்பு வீதம் கீழ் நிலையிலும் காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலை பொருளாதாரத்திற்கு சுமையாக அமைவதனாலும், அது பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாகவும் அமைவதனால் இந் நாடுகளில் சுகாதார நடவடிக்கைகளையும் குடும்பத்திட்டமிடல் நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டியது அரசின் பிரதான கடமையாக உள்ளது. இதன் பொருட்டு குடும்பத் திட்டமிடல் தொடர்பான கல்வியை வழங்குதல், பொதுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிராமிய மட்டத்தில் சனத்தொகை அதிகரிப்பின் கடினத்தன்மையை உணரச் செய்தல் குடும்பத்திட்டமிடலுடன் தொடர்பான பயிற்சிகளையும் ஆராட்சிகளையும் ஊக்குவித்தல், குடும்பத் திட்டமிடலுக்குத் தேவையான நிதிசார் நடவடிக்கைகளை வழங்குதல், பல்வேறு விதமான சமய, சமூக கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து குடும்பத் திட்டமிடலின் அவசியத்தை வலியுறுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வது அவசியமானதாகும்.

## ஈ) விவசாய அபிவிருத்தி:

மூன்றாம் மண்டல வளர்முக நாடுகளில் தனியானதும் மொத்த தேசிய வருமானத்தில் அரைப்பங்கிற்கு மேற்பட்ட செல்வாக்கினை கொண்ட ஒரு துறையாகவும் விவசாயம் காணப்படுகின்றது. உணவுத்தேவை, நிலப்பயன்பாடு, வேலைவாய்ப்பு, மொத்த வருமானம் என்பவற்றில் கணிசமான சார்பளவு முக்கியத்துவத்தினை இவ் விவசாயத்துறை கொண்டுள்ளது. எவ்வாறாயினும் உற்பத்தித் திறன், ஏக்கருக்கான தலா வெளியீடு, நிலஉடைமை, படுகடன் வசதிகள், தொழில்நுட்பப் பிரயோகம் என்பவற்றைப் பொறுத்தவரையில் அதிக இடர்களையும், பிரச்சனைகளையும் கொண்டதாக விவசாயத்துறை காணப்படுவதுடன் சரிவர ஒழுங்கு படுத்த வேண்டிய அவசியத்தையும் கொண்டுள்ளது. மறுபுறத்தில் விவசாயம் செய்வோரைப் பொறுத்தவரை கல்வி அறிவின்மை, குறைந்த அளவான நுட்ப அறிவு, வறுமை, மரபுரீதியான தொழில் பயிற்சி என்பன காரணமாக இவர்களது விளைதிறனும் வினைதிறனும் குறைவாக இருப்பதனால் அறிவு, நுட்பரீதியாக ஒழுங்கு படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இவற்றை சரிவரவும், சீராகவும், படிமுறையாகவும் செய்வதற்கும் அவற்றிற்கு தேவையான நிறுவனக்கட்டமைப்பை உருவாக்கவும் நவீன விவசாய முறையை உருவாக்கி விவசாய அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் அரசின் செயற்பாடுகள் அவசியமாக உள்ளது. அவற்றிற்கு தேவையான நிறுவனக்கட்டமைப்பை உருவாக்கவும் நவீன விவசாய முறையை உருவாக்கி விவசாய அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் அரசின் செயற்பாடுகள் அவசியமாக உள்ளது.

சிறப்பாக வளர்முக நாடுகளின் விவசாய செயற்பாடுகளில் கிராமியத் துறையே பெரும் பங்காற்றுவதனாலும் அத்துறையில் அதிகளவு பிரச்சினைகள் காணப்படுவதனாலும் கிராமியத்துறை விவசாயத்தை விருத்தி செய்யக்கூடிய வகையில் அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டியுள்ளது. இந்திய பொருளியலாளரான சிறீமன் நாராயணன் அவர்கள் விவசாய அபிவிருத்தியின் அடிமட்டத் திட்டமிடல் கிராமியத்துறையிலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டுமென்றும், அவற்றுக்கான நீர்ப்பாசன வசதிகளை உத்தம மட்டத்தில் பயன்படுத்த வேண்டுமென்றும் பல்லின பயிர்ச்செய்கை வசதிகள் அறிமுகப் படுத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிடுகின்றார். மேலும் அரசானது கிராமிய மட்ட பயிர்ச் செய்கை சார்பாக நவீன வசதிகளை விரிவாக்கக் கூடிய வகையில் இரசாயனப் பொருட்கள் உர வகைகள் என்பவற்றைத் தடையின்றி வழங்க வேண்டுமென்றும் மண்பாதுகாப்பு, விவசாயப் பயிற்சி, விவசாய ஆராய்ச்சி ஆகியவற்றை விருத்தி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும் விவசாயத்தோடும் விவசாயம் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை முயற்சிகளது அபிவிருத்தியையும் ஏற்பாடு செய்வதில் எந்தளவிற்கு அரசு ஈடுபடுகின்றது என்பதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. கிராமிய விவசாய அபிவிருத்தியின் வெற்றிக்கு வழிவகுக்கும் இன்னொரு காரணி அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படும் நிலச்சீர்திருத்த முயற்சிகளும் அதற்கான நிறுவன ரீதியான அமைப்புக்களுமாகும். நிலச்சீர்திருத்தத்தையும் அதன் உடமை பகிர்வு என்பவற்றையும் அரசு சரிவர ஒழுங்குபடுத்துமாயின் ஒரு பொருளாதாரத்தில் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு வழிவகுப்பதாக அது இருக்கும்.

## உ) கைத்தொழில் அபிவிருத்தி:

மூன்றாம் உலக நாடுகளில் அரசு முழுமையாக ஈடுபட்டு பொருளாதார அபிவிருத்தியை நிலை நிறுத்த வேண்டிய மற்றொரு செயற்பாடு பொருளாதாரத்தில் கைத்தொழில் மயமாக்கலையும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துவதாகும். பொதுவாக காலனித்துவ கால அரசாங்கங்கள் வளர்முக நாடுகளின் இயற்கை வளங்களின் பெரும்பகுதியை சுரண்டலுக்கு உட்படுத்தியதுடன் எந்த வகையான தயாரிப்புத் தொழில்களிலும் ஆர்வம் காட்டாமல் இருந்தனர். அத்துடன் காலனித்துவத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னரும் முழுமையான கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட முடியாதவாறு பெருந்தோட்டம், சுரங்கம் அறுத்தல் போன்ற முயற்சிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் சுதந்திரத்தின் பின்னர் கைத்தொழில் மயமாக்கலை செய்யத்தக்க வகையில் பொருத்தமான கொள்கைகள் முன்வைக்கப்படாமையால் தொடர்ந்தும் இந்நாடுகள் குறைவிருத்தி நாடுகள் என்ற அந்தஸ்திலேயே காணப்பட்டன. இந்நாடுகளில் காணப்பட்ட தனியார் துறையினரும் தயாரிப்புத் தொழில்களில் ஈடுபடக் கூடிய வசதியில்லாது சிறிய கைத்தொழில் முயற்சிகளிலும் உள்நாட்டு நுகர்வுக்கு அவசியமான கைத்தொழில் பொருள் உற்பத்தியிலேயே ஈடுபட்டன. ஆனால் இந்நாடுகளின் கைத்தொழிலில் துரிதப்படுத்திய அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் இரும்பு, உருக்கு, உரம், இரசாயனம் இயந்திர உற்பத்தி ஆகியவற்றிலும் இவற்றுக்கு தேவையான பாரிய முதலீட்டினாலுமே செய்ய முடியும். எனவே கைத்தொழில் அபிவிருத்தியில் பொதுத்துறையையும், தனியார் துறையையும் இயலுமான வரையில் ஈடுபடுத்தவும் அவர்களது செயற்பாடுகளை உரிய முறையில் முன்னெடுத்து செல்வதற்கும் அரச செயற்பாடு அவசியமானது என்பது செயல் ரீதியாக உணரப்பட்டுள்ளது. மறுபுறத்தில் ஏற்றுமதியை ஊக்குவிக்கக் கூடிய வகையிலும் இறக்குமதிப் பதிலீட்டை செயற்படுத்தக் கூடிய வகையிலும் கொள்கை அடிப்படையிலும் வகுக்கும் கொள்கைகளை பன்முகப்படுத்தப்பட்ட வகையிலும், கைத்தொழில் பிரதேசங்களை இனம்காணக்கூடிய வகையிலும் உருவாக்க வேண்டியது அவசியமாகும். இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்தி மீது அரச செயற்பாடுகள் அதிக அளவில் இடம்பெறும் போது அது உள்நாட்டு வளங்களை விருத்தி செய்ய உதவுவதோடு பெருமளவில் வேலைவாய்ப்புக்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதாகவும் காணப்படும். மறுபுறத்தில் அரசு மென்மேலும் தனியார்துறை கைத்தொழில்கட்கு ஊக்குவிப்பும் உதவியும் வழங்குவதன் மூலம் அவற்றையும் விருத்தியடையச் செய்யலாம். குறிப்பாக மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய உதவுதல், கைத்தொழில் உற்பத்திக்கு தேவையான சாதனங்களை வழங்குதல், வரி விடுகை, வரிச்சலுகை என்பவற்றை வழங்குதல், அடிக்கட்டுமான வசதிகளை வழங்குதல் ஆகியன தனியார் துறை கைத்தொழில்கட்கு அரசு செய்து கொடுக்க வேண்டிய மிக முக்கிய தேவைகளாக உள்ளன.

## ஊ) நாணய, இறைக் கொள்கை:

பெரும்பாலும் வளர்ந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் அரசு நாணயக் கொள்கையையும், இறைக்கொள்கையையும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் சுய விருத்தியை ஏற்படுத்த உதவியுள்ளதுடன், பொருளாதாரச் செயற்பாடுகட்கும் வழிவகுக்க உதவுகின்றன. இக்கொள்கைகளை அரசு சரிவர நிறைவேற்றுவதன் மூலம் நிதி நாணய சார்பான அபிவிருத்தியைத் தடைப்படுத்தும் காரணிகளை நீக்க உதவுகின்றது. நாணய கொள்கை அபிவிருத்தியை துரிதப்படுத்துவதில் அரசு பிரதான பங்காற்ற வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. குறிப்பாக கடன் வசதியை ஏற்படுத்துதல் பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல், சென்மதி நிலுவையை பேணத்தக்க வகையில் நாணய மாற்று விகிதத்தை சரிப்படுத்துதல், வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்படும் தளம்பல் நிலையை இல்லாமல் செய்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்நடவடிக்கைகளை அரசு ஒன்று செய்ய முற்படும்போது அரசு தானோ அன்றேல் மத்திய வங்கி என்ற அமைப்பு மூலமோ இவற்றைக் கட்டுப்படுத்தி அபிவிருத்திக்கு உதவலாம். எவ்வாறாயினும் முழுமையான இறைக்கொள்கை நடவடிக்கைகளை அரசு மாத்திரமே செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் முழுப்பொருளாதாரத்திலும் உறுதியைப் பேணதக்க வகையில் வருமானமற்ற ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், மூலவளங்களைத் திரட்டுதல், தேவையற்ற பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல், பணவீக்க அமுக்க சூழ்நிலைகளைக் குறைத்தல், வரி, மானியம் சார்பாக உற்பத்திக்குத் தேவையான ஊக்குவிப்புகளைக் கொண்டுவருதல், நீண்ட கால முதலீடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்குதல், சேமிப்பையும் முதலீட்டையும் சீராக அதிகரிக்கச் செய்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான இறைக்கொள்கை கருவிகளை வரவு செலவு திட்டத்தில் வருமான அமைப்பு, செலவீன அமைப்பு, நிதியீட்டக் கொள்கை, வரிக்கொள்கை, பொதுபடுகடன் கொள்கை ஆகியவற்றின் ஊடாக அரசு ஒன்றே முழுமையாக செய்ய வேண்டியுள்ளது. சிறப்பாக வளர்முக நாடுகளின் அரசாங்கங்கள் கடைப்பிடிக்கின்ற குறைநிலை வரவு செலவுத் திட்ட நடைமுறையானது பல வகையில் அந்நாடுகளில் பின்பற்றப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

## எ) வெளிநாட்டு வர்த்தகத்தில் விருத்தியை ஏற்படுத்துதல்:

பொதுவாக வளர்முக நாடுகளில் நீண்ட காலமாக பின்பற்றப்பட்ட காலனித்துவ குடியேற்றவாதக் கொள்கையினால் அந்நாடுகளின் பொருளாதாரமும் சிறப்பாக வெளிநாட்டு வர்த்தகமும் பெரிய அளவில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலமும் வெளிநாட்டு வர்த்தகத்தில் முதனிலைப் பொருட்கள் விவசாயப் பொருட்கள் என்பவற்றை பிரதான ஏற்றுமதி பொருட்களாக இடம்பெறச் செய்வதன் மூலமும் நுகர்வுப் பொருட்கள், கைத்தொழில் பொருட்கள், மூலதனப்பொருட்கள் என்பவற்றைப் பிரதான இறக்குமதிப் பொருட்களாக கொண்டிருக்கச் செய்வதன் மூலமும் வளர்முக நாடுகளில் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஒரு உறுதியற்ற நிலையை அல்லது தேக்க நிலையை உருவாக்க காரணமாக இருந்தன. இக் காலனித்துவவாத கொள்கையினால் ஏற்றுமதியை விட இறக்குமதிகள் அதிகரித்துச் செல்வதற்கும் அது தொடர்ச்சியான சென்மதி நிலுவை பிரச்சினைக்கும் அந்நிலமை காரணமாக அந்நிய செலாவணி நெருக்கடி, பொதுபடுகடன் பிரச்சினை, நாணயமாற்று விகிதத்தில் உறுதியற்ற தன்மை போன்ற பிரச்சனைகளுக்கும் வழிவகுத்தது. எனவே இவ்வாறான இடர்களைத் தீர்த்து வெளிநாட்டு வர்த்தகத்தில் சாதகமான போக்கினைக் கொண்டிருப்பதற்கும் உறுதியான வெளிநாட்டு வர்த்தகம் இடம் பெறுவதற்கும் அரச பங்களிப்பு அவசியமாகின்றது. இவ்வாறான அமைப்பு ரீதியான பிரச்சனைகளிலிருந்து ஒரு நாட்டின் முழுப்பொருளாதாரத்தையும் மீட்டெடுப்பதற்கு அரசு ஒன்று பல்வேறுபட்ட நாணய. இறைக் கொள்கைகளை பயன்படுத்துகின்றது. சிறப்பாக ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் ஏற்றுமதிகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் இறக்குமதிகளை கட்டுப்படுத்துதல் கடன், காப்புறுதி, போக்குவரத்து, வங்கி வசதிகளை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குதல், வரிவிடுகைகள், வரிச்சலுகைகள் என்பவற்றை அறிமுகப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் வெளிநாட்டு வர்த்தகத்தை அரசாங்கம் பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமான ஒன்றாக மாற்றியமைக்க முடியும். மறுபுறத்தில் இறக்குமதி பதிலீட்டுக்கொள்கை, இறக்குமதி கோட்டா முறை, பல்நாணய மாற்று விகித முறை, மேலதிக கட்டணங்கள் விதித்தல், விலைப்பாதுகாப்பு கொள்கை, ஆகிய பிரமாணங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரசு உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்குவிப்பு வழங்குவதோடு வெளிநாட்டு வர்த்தகத்திலும் சாதகமான போக்கினை ஏற்படுத்தக் கூடிய வகையில் நடந்து கொள்ளலாம்.

**நவீன போக்கு :**

1970களின் பின்னர் ஆசியாவின் கிழக்கு மூலையில் உலகமயமாதலுடன் இணைந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கைத்தொழில் மய நாடுகள் என்ற சித்தாந்தமும் அதன் பின் புதிய ஏற்றுமதி மய நாடுகள் என்ற சித்தாந்தமும் வெற்றிகரமாக செயற்பட தொடங்கின. முன்னையதில் நான்கு வேங்கைகளான கொரியா, தாய்வான், கொங்கொங், சிங்கப்பூர் ஆகியவையும் பின்னையதில் மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, வியட்நாம் ஆகியவையும் தொழிற்படுவதைக் காணலாம். இந் நாடுகள் இவ்வாறான அந்தஸ்தை அடைவதற்கும் அதனூடாக வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்திக்கும் வழிவகுப்பதற்கு அரசு மிகவும் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருப்பதை அவதானிக்க முடியும். அதே சமயம் இந்நாடுகளின் அனுபவத்தின் சாயலிலும் 1980, 1990கள் ஆகிய காலப்பகுதிகளில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றாம் மண்டல நாடுகளில் ஏற்படுத்திய தாக்கத்தின் பின்னணியிலும் அரசும் தனியார் துறையும் இணைந்த வகையிலேயே பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கொரியா, தாய்லாந்து, தாய்வான் ஆகிய மூன்று நாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியை எடுத்து ஆய்வு செய்யும் போது இந்நாடுகளில் அபிவிருத்தி செயற்பாட்டில் அரச ஈடுபாடே பிரதான பங்காற்றி இருப்பதைக் காண முடிகின்றது. மறுபுறத்தில் 1980களிலும் 1990களிலும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வளர்முக நாடுகளில் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கும் அமைப்பு ரீதியான பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கை என்பதை அறிமுகப்படுத்தியது. இக்கொள்கைகளின் பெரும் சந்தை நோக்கிய நகர்விற்கும், பொருளாதார தாராளமயப்படுத்துவதற்கும் சந்தை நட்புக் கொள்கையை பின்பற்றுவதற்கும் முற்பட்டன.

இந்தப் பின்னணியில் இந்நாடுகளில் அரசானது பல்வேறு வகையான கொள்கை மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அபிவிருத்தியில் அதி சிறந்த நிலையை அடைவதற்கும் செயற்திறன் மிக்க அணுகுமுறைகளை பின்பற்றுவதற்கும் முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நாடுகளில் அரசு ஒன்றின் மேலான அபிவிருத்திக் குறிக்கோளாக வரையறுக்கப்பட்ட தேசிய எல்லை ஒன்றிற்குள் தேவையான மூலதனத்தை ஊக்குவித்தலும், விரிவாக்கலும் ஆகும். கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் அபிவிருத்தியைத் திட்டமிடும்போது மூலதனத்திரட்சியை ஏற்படுத்தக் கூடியவாறும் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையையும் ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையையும் உபயோகிக்கக் கூடியவாறும் வடிவமைக்கின்றன.

கிழக்காசிய நாடுகளின் அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் அரசுகள் ஈடுபட்டு வந்துள்ள முறையை பின்வருமாறு எடுத்துக் காட்டலாம்.

1) தனியார்துறை தலையீடு இல்லாத வகையில் சுய அடிப்படையிலான நீண்டகால பொருளாதாரக் கொள்கையை வகுத்தல்.
2) உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனப்பாய்ச்சலை ஏற்படுத்தக் கூடியவாறான பெரிய அளவிலான சீர்திருத்தங்களைச் செய்தல்.
3) மனித வளவிருத்தியின் பொருட்டு முன்னுரிமை அடிப்படையில் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஏற்படுத்துதல்.
4) அமைப்பு ரீதியான மாற்றங்களுடன் இணைந்த வகையில் பொருளாதார வளர்ச்சிக்கான இயல் திறனைக் கூட்டுதல்.
5) ஊழியர் - வேலைகொள்வோர் உறவையும், அரசு - மக்கள் உறவையும் சீர்குலைக்காத வகையில் தேசிய மயமாக்கல், தனியார் மயமாக்கல் கொள்கைகளைப் பின்பற்றல்.

இந் நடவடிக்கைகளின் பொருட்டு ஜப்பான், தாய்வான், கொரியா ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு உயர் பயிற்சி பெற்ற ஆட்களை உருவாக்குவதிலும் செயற்திறன் மிக்க நிறுவனக் கட்டமைப்பை பேணுவதிலும் முன்னுரிமை அளித்தன.

பொருளாதார அபிவிருத்தியில் அரச பங்கு பற்றிய விளக்கங்களில் கீழைத்தேச மேலைத்தேச நாடுகளின் அனுபவங்களில் அவை பல்வேறு சவால்களை எதிர்கொண்டனவாகவே காணப்படுகின்றன. இத்தகைய சவால்கள் ஐரோப்பிய, அமெரிக்க, பிரித்தானிய நாடுகளில் உள்ளார்ந்த, வெளிசார்ந்த காரணிகளில் ஏற்பட்டவையாக காணப்படுகின்றன. அதே சமயம் கொரியா, தாய்வான், கொங்கொங் போன்ற கிழக்காசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் இந் நிலமைகளோடு அரசியல் ரீதியான சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் இந்நாடுகளில் இச்சவால்களை அரசின் முழுமையான பங்களிப்போடு மாத்திரமே வெற்றி கொள்ளக் கூடியதாக இருந்தது.

## முடிவுரை:

அரசு தலையிடா முதலாளித்துவம் அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டின் எச்சசொச்சமான சந்தை முதலாளித்துவம் விரும்பத்தக்க ஒன்றாக இருக்கவில்லை. ஏனெனில் இது சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி சமூக நலன்களுக்கு எதிராகச் செயற்படக்கூடியது. இதே போல மத்திய திட்மிட்ட பொருளாதாரமும் எதேச்சாதிகரமான திறனற்ற முரண்பட்ட நோக்கங்களைக் கொண்டிருப்பதனால் அதுவும் விரும்பக் கூடியதல்ல. ஆகவே சோசலிசம் சார்ந்த சந்தை நோக்கிலான பொருளாதாரமே இன்றைய உலகளாவிய பொருளாதாரச் சூழலுக்கு சிறந்ததாகும். இவ்வாறான சோசலிச சந்தைப் பொருளாதாரம் தனியார் துறை முயற்சிகளை மட்டுமன்றி, அரச, மாகாண, கூட்டுறவு, அரசசார்பற்ற அமைப்புக்களையும் இணைத்து இயங்கக் கூடியதாக இருக்கும். பொதுவாக தனியார்துறை விவசாய, கைத்தொழில் சேவைகள் துறையின் பெரும்பகுதியை பொறுப்பேற்று நடத்தக்கூடிய சிறந்த வசதியைக் கொண்டிருக்கலாம். அதே சமயம் அரசு தன்னிடம் உள்ள வரையறுக்கப்பட்ட மூலவளங்கள், தொழில் ஆற்றல் காரணமாகவும் அரசியல் தலையீடுகள் காரணமாகவும் குறைந்தளவான தொழில் முயற்சிகளையே கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் சமூக நலன் சார்ந்திருப்பது சிறந்தது. தேசிய முன்னுரிமைகளுடன் எப்போது தனியார் முன்னுரிமைகள் அணையத் தவறுகின்றனவோ அப்போது அவ் இடைவெளியை நிரப்புவதற்கு அரச பங்களிப்பு அவசியம் தேவைப்படும்.

அரசு சந்தையினதும் தனதும் சார்பு ரீதியான பங்கு பற்றி தெளிவான விளக்கம் கொண்டிருக்க வேண்டும். அதே நேரம் பொருளாதாரத்தை சிறந்த சமநிலையில் வைத்திருப்பதற்கு தேவையான கொள்கைகளையும் கொண்டிருக்க வேண்டும். சந்தை தானாக சீர்செய்யப்படாதவிடத்து, சந்தையை நிரப்புவதற்கு அரச பங்களிப்பு தேவைப்படும். எனினும் கொள்கைகள் நெகிழ்வுடையதாக இருந்தால் மட்டுமே அரச பங்களிப்பு தாக்கமுடையதாக இருக்கும். கிழக்காசிய நாடுகளின் பொருளாதார வெற்றியின் இரகசியம் இந்த இயலளவே ஆகும். பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு மூலதன, கைத்தொழில் மயமாக்கல், தொழில்நுட்ப மாற்றம், ஏற்றுமதி பன்முகப்படுத்தல், தனியார் மயமாக்கல் என்பவற்றில் அரசு நேரடியாக பங்குபற்றியதாலேயே இந் நாடுகள் திடீர் பொருளாதார வளர்ச்சியை சாதித்துள்ளன. இது தொடர்பாக 1994ம் ஆண்டின் அங்டாட் அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது. சுருங்கக் கூறின் கிழக்காசிய நாடுகளின் வியத்தகு பொருளாதார வளர்ச்சி முற்று முழுதாக சந்தையின் அற்புதமாக இருக்கவில்லை. இங்கு பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதில் இலாப நோக்கம் செயற்பட்டுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. அதே சமயம் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் தலையிடா முதலாளித்துவத்தில் இருந்து விலகி இருந்ததாகவும் கூறமுடியாது. இக்கொள்கைகள் அரச முதலாளித்துவத்தின் ஆதரவுடன் இடம்பெற்றதாக அடித்துக் கூறலாம். மறைமுக காரணங்களால் சமூக நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போதும் அனைவருக்கும் சமூக நீதியின் நியமங்களை உறுதிப்படுத்த வேண்டிய வேளையிலும் சமூகம் சார்ந்த சந்தைப் பொருளாதாரம் அவசியமானதாகும். சமூக நோக்கிலான சந்தைப் பொருளாதாரம் அல்லது சேமநலம் சார்ந்த அரசு என்ற எண்ணக்கரு புதியதொன்றல்ல. பல நாடுகளில் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. சமூக நோக்கிலான சந்தைப் பொருளாதாரத்தில் தனியார்துறை மேலோங்கி இருந்தபோதும் இதன் சமூக நோக்கம் உறுதியான வகையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இவ்வாறான நிலமையின் கீழ் உலகளாவிய பொருளாதாரத்தில் தாராளமயமாதல் உறவுகளையும் தனியார் மயமாக்கல் என்ற சித்தாந்தத்தையும் இந்த சோசலிச சந்தை அரசுகள் தோற்றுவித்துள்ளன. எவ்வாறாயினும் அரச பங்களிப்புடன் கூடிய உறுதியான பொருளாதார அபிவிருத்திக்கு இறுதியான முடிவு யாதெனில் ஒவ்வொரு நாடுகளும் தம்மளவில் கொண்டிருக்கக் கூடிய அரசியல் வலுச் சமநிலையே ஆகும். (It Depends on the Balance of Political Forces in the Country)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHY


1. A Dieter Bos (1991) **Privatization** Theoretical Treatment - Clarendon Press Oxford.

2. Friedrich - Ebert - Stiftung (1988) **Aspects of Privatisation in Sri Lanka.**

3. P. Cook and C. Kirkpatrick (1995) **Privatisation Policy and Performance** Prentic Hall Har vester Wheatsheaf.

4. Ralph Piperts (1997) **Asian Development Styles** Abhinave Publications New Dwlhi.

5. C.D. Foster (1992) **Privatization Pulibic Owner ship And The Regulation of Natural Monopoly** Black Well.

6. Anis Chowdhury and Iyanatul Islam (1993) **The Newly Industrialising Economics of East Asia** Routledge - Lindon.

7. John Kay, Colin Mayer and David Thompson (1986) **Privatization and Regulation the U.K. Experince** Claredon Press Oxford.

8. Debendra Kumar Das (1996) **Economics of Privatization** Deep & Deep Publication New Delhi.

9. Debendra Kumar Das (1994) **Structural Adjustment in the Indian Economy** Deep & Deep Publication New Delhi.

10. Saman Kelegama (1992) **Liberalization and Industrialization the Sri Lankan Exprince of the 1980s** Institute of Policy Studies Sri Lanka.

11. David Dunham (1995) **Economic of Reform and Governance the Scond Wave of Liber alization in Sri Lanka 1989 - 93** Institute of Policy Studies Sri Lanka.

12. J.P.C. Guimaraes (1991) **Industrialization in Sri Lanka What Can Be Learn from NICS** Institute of Policy Studies Sri Lanka.

13. John J. Harter (1988) **Views on Global Economic Development.**

14. World Bank - **Annual Conference of Development Economics.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. Marie Lavigne (1995) **The Economics of Transition** Macmillan Press Ltd.

16. Prof. ADV. De. S. Indraratna (1992) **Essays in Asian Economics** Sri Lanka Institute of Social and Economic Studies - Colombo.

17. Godfrey Gunatilleka (1993) **Development and Liberalization** in Sri Lanka Marga Institute - Sri Lanka.

18. Haward F. Didsbuery. Jr. (1985) **The Global Economy** - World Future Society - America.

19. South Asian Regional Conference (1993) **Economic Growth and Human Development With Equity, Security and Sustainablity National and Regional Perspectives.**

20. Dr. Saman Kelegama (1993) **Privatization in Sri Lanka** - Experience During the Early Years of Implementation.

21. மார்கா நிறுவகம் - (1995) பொருளாதாரக் கொள்கை.

22. மார்கா நிறுவகம் - (1995) கிழக்கு ஆசியாவின் அற்புதம்.

23. Deepak Lal (1992) **Development Economics Vol - IV** The Inter National Libirary Critical Writings in Economics.

24. S.K. Roy Chowdhry, P.R. Shukla (1991) **Encyclopaedia of Economic Development Vol - 2, 3 and 20.**

25. Haward F. (1997) State and Economic Development World Bank Report (1997).

26. சின்னத்தம்பி - எம் (1997) உலக மயமாக்கலும் அதன் விளைவுகளும். பேராசிரியர் தில்லைநாதன் நினைவு மலர்.

27. Shanmugratnam - N. (1996) Privatization, Laissezfaire and the State. some Critical Notes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைத்தள வாழ்க்கைத் தரமுறை

## ( THE QUALITY OF WORKING LIFE )

### அறிமுகம்:-

தொழில் வடிவமைப்பானது அதற்குரிய பொறுப்புக்களை வரையறுப்பதாகவும் குறிப்பிட்ட வேலை நடவடிக்கையினை தீர்மானிப்பதாகவும், அத்தொழிலின் சூழல், உற்பத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்குவதாகவும் இருக்கும் உண்மையில் தொழில் ஒன்றினை வடிவமைப்புச் செய்யும் போதும் இரண்டு பாரிய நோக்கங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதாவது ஒரு புறம் உற்பத்தித் திறனை ( Productivity ) அடைந்து கொள்வதற்கு ஏற்றவாறான தரமான உற்பத்தி செய்முறையை உள்ளடக்குவதும் மறுபுறம் ஆற்றப்படும் தொழில் அல்லது வேலையானது பாதுகாப்பு நிறைந்ததாக இருப்பதுடன் அது தனிப்பட்ட ஊழியர்கள் ஒவ்வொருவருக்குமான தொழில், திருப்தி, ஊக்கம், என்பவற்றை அளிப்பதாக இருத்தலும் அவசியம். இத்தெழில் வடிவமைப்பானது பல்வேறு முறைகள் மூலம் மேற்கொள்ளப்படினும் வேலைத்தள வாழ்க்கைத்தர முறை என்பது சிறந்ததாகக் காணப்படுகிறது.

### வேலைத்தள வாழ்க்கைத் தரமுறை:-

வேலைத்தள வாழ்க்கைத்தரமானது நிறுவன சூழல் முறைகள், வெளியீடுகள் போன்ற அனைத்தையும் மாற்றி அமைப்பதற்கான வாய்ப்பை சகல மட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு வழங்குவதாக உள்ளது. உயர் மட்ட முகாமையிடம் இருந்து உயர்ந்த அர்ப்பணிப்பை இத்திட்ட முறை வேண்டி நிற்பதுடன் கீழ் நோக்கி அதிகாரத்தை கையளிப்பதற்கான அவர்களது விருப்பத்தையும் வலியுறுத்துகிறது.

ஊழியர் பற்றி முகாமை உண்மையான அக்கறையுடன் செயற்படுவதுடன் ஊழியரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப்பாடு பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. திறமையாக அமுல்படுத்தப்படும் வேலைத்தள வாழ்க்கைத் தரமானது நிறுவனம் மீதும், ஊழியர்கள் மீதும் எப்போதும் நீடித்திருக்கின்ற சிறந்த மன உணர்வினை உருவாக்குகிறது.

இதன் முக்கிய நோக்கம் தொழில் நுட்ப தேவைகளிலும் பார்க்க ஊழிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு சூழலை உருவாக்கி அதனூடாக வினைத்திறனை அதிகரித்தலாகும். இத்தகைய வேலைத்தள வாழ்க்கைத்தர அதிகரிப்பு முறையானது பின்வரும் அடிப்படையில் தொழில் வடிவமைப்பை மேற்கொள்கிறது.

1) செயற்பாடுகளுடன் தொடர்புடைய காரணி

அ) முரண்பாடுகளுடன் தொடர்புடைய காரணி
தொழிலை உருவாக்கும் வகையில் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

ஆ) இச்செயற்பாடுகள் ஒரு குறிப்பிட்ட வேகம், செயல் முறை, இடம், திறமை என்பவற்றை கொண்டதாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) பெறுபேறுகளின் ஊடாக தகவல் திரட்டக்கூடிய வகையில் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

ஈ) செயன்முறைப்படுத்தும் நபர்கள் சுதந்திரமாகச் சில தீர்மானங்களை எடுத்து செயற்படுத்தும் வகையில் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

2) தொழிலுடனும் நிறுவனத்துடனும் தொடர்புடைய காரணிகள்.

அ) மேலும் கற்பதற்கும் தன்னை விருத்தி செய்வதற்கும். தகுந்த வாய்ப்புக்களை கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) தொழில் விரும்பத்தக்க அல்லது நலமான எதிர்காலம் காணப்படும் தன்மையை கொண்டிருத்தல் வேண்டும்.

இ) தனி நபர் தமது தொழிலினை பாதிக்கும் நடவடிக்கைகள் பற்றி தீர்மானங்கள் எடுக்கும் வாய்ப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஈ) தொழில் நோக்கங்களும் இலக்குகளும் தெளிவானதாகவும் சவாலானதாகவும் காணப்படல் வேண்டும்.

உ) தேவையான தொழில் மூலகங்கள் தொழில் புரிவோருக்கு கிடைக்கப்பெறுதலை உறுதி செய்தல் வேண்டும்.

3) தொழில் அமைப்புடன் தொடர்புடைய காரணிகள்

அ) தொழிலாளர் தொடர் பாடல் பற்றி நடைமுறைகள் முகாமையாலும் ஊழியரினாலும் இணைந்து அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆ) கொடுப்பனவு நியாயமானதாகவும் அவர்களது செயற்பாட்டிற்கு தகுந்ததாகவும் காணப்படல் வேண்டும்.

இ) ஆளணிக்கொள்கைகள் நியாயமான தன்மை கொண்டதாகவும் தேவையான அளவு கொண்டதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஈ) தொழிற் சூழல் பொருத்தமாக அமைந்திருத்தல் வேண்டும்.

நிறுவனங்களுடன் தொடர்பு பட்ட தீர்மானங்களை எடுக்கும் போது அச்செயல் முறையில் ஊழியரை பங்கு பெறச் செய்யும் ஒரு செயற்பாட்டு முறை வேலைத்தள வாழ்க்கை தரமுறையினை அமுல்படுத்தும் ஒரு வழிமுறையாகும். நிறுவனச் செயற்பாடுகளில் ஊழியரை ஈடுபடுத்தலானது ஒவ்வொரு ஊழியரும் தமது செயற்பாட்டிற்கும் நிறுவனத்திற்கும் தாம் பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்வதற்கும் தம்மை உரிமையாளர்களாகவும் உருவகித்துக்கொள்ளவும் வழியேற்படுகிறது. இம்முறையானது வெற்றிகரமான செயற்பாட்டை மட்டும் நோக்கமாக கொண்டு அமையாது நிறுவனக்கலாசாரத்துக்குள்ளும் முகாமைக்கொள்கைக்குள்ளும் உட்பட்ட ஒன்றாக காணப்படல் வேண்டும். எனவே வேலைத்தள வாழ்க்கைத்தரத்தை பேணப்பயன்படுத்தப்படும் முறைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தரச்சுற்றோட்டக் குழுக்கள் **(QUALITY CIRCLES)**
(2) தொழில் விருத்தி **(JOB ENRICHMENT)**
(3) தொழில் விரிவாக்கம் **(JOB ENLARGEMENT)**
(4) தொழில் சுழற்சி **(JOB ROTATION)**
(5) தன்னிச்சையான வேலைக்குழுக்கள் **(AUTONOMOUS WORK GROUP)**

## 1. தரச்சுற்றோட்டக்குழுக்கள் (QUALITY CIRCLES) :-

தரச்சுற்றோட்டக் குழுவானது சிறு ஊழியர் குழுக்கள் தொழில் தொடர்பான பிரச்சினைகளை இனம் காணவும் அவற்றை தீர்ப்பதற்கும் ஒரு பொது முறைசாரா தலைவரின் கீழ் அடிக்கடி சந்தித்து செயற்படுதலைக்குறிக்கும். இது யப்பானில் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட போது தரக்கட்டுப்பாட்டுக்குழுக்கள் என அழைத்தனர். இதன் நோக்கம் யப்பானில் உருவாக்கப்பட்ட தரம் குறைந்த உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதாகும்.

இதன் முக்கிய அம்சங்களாக,

1. இத்தகைய குழுக்களில் ஊழியர் அங்கத்துவமானது தலைவருக்கும் மற்றவருக்கும் தன்னிச்சையான தன்மையைக்கொண்டிருக்கும்.

2. இத்தகைய குழுக்களின் உருவாக்கமானது உள்ளக ரீதியான பயிற்சியின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தரச்சுற்றோட்டக் குழுக்களில் காணப்படும் முக்கியமான தனித்துவப் பண்புகளாக.

(அ) மக்களை ஒன்றிணைக்கும் தத்துவம்
(ஆ) அங்கத்துவம் தன்னிச்சையானது.
(இ) அனைவரும் பங்களிப்புச் செய்யும் முறை.
(ஈ) குழுவின் ஒரு அங்கத்துவர் மற்றையோரின் வளர்ச்சிக்குதவுதல்.
(உ) செயற்பாடுகள் தனிப்பட்ட முயற்சியில் நடைபெறாது அனைத்தும் குழு முயற்சியாக **(Tearm Effort)** காணப்படும்.
(ஊ) சிருஷ்டிக்கும் **(Creativity)** தன்மையை ஊக்குவிக்கும்.

தரச்சுற்றோட்டக் குழுக்களின் நன்மைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) தனிநபர் விருத்தி
(2) பரஸ்பர நல்லெண்ண விருத்தி
(3) தரவிருத்தி
(4) தொடர்பாடல், நடத்தை விருத்தி
(5) வீண்விரயக்கட்டுப்பாடு
(6) தொழில் விருப்தி
(7) வினைத்திறன் அதிகரிப்பு
(8) பிரச்சினைத் தீர்விற்கான வாய்ப்பு அதிகரிப்பு
(9) ஊழியர் ஈடுபாடு
(10) தொழில் பிணக்கு, வரவின்மை வீதம், வீதம் குறையும்.

இம்முறையை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு கையேடாக பின்வரும் படிமுறைச்செயற்பாட்டைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தகுந்த சூழலை உருவாக்குதல்
(2) தகுந்த ஊழியரையும் இடத்தையும் தெரிவு செய்தல்
(3) நோக்கத்தை வரையறுத்தல்
(4) ஊழியருக்கு நோக்கத்தையும் செயற்பாட்டையும் தெளிவுபடுத்தல்
(5) தன்னிச்சையாக செயற்படக்கூடியவகையில் திட்டத்தை அமுல்படுத்தல்
(6) செயற்பாட்டையும் விலகல்களையும் அவதானித்து தகுந்த நடவடிக்கை எடுத்தல்

## 2. தொழில் விருத்தி (JOB ENRICHMENT):-

தனிப்பட்ட வளர்சியைக் கருத்திற் கொண்டு பொறுப்புக்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதன் மூலம் நிலைக்குத்து ரீதியாக தொழில் ஒன்றினை ஆழப்படுத்துதல் தொழில் விருத்தி எனப்படுகிறது.. அதாவது தொழிலாளர்களுக்கு அவர்களது வேலையில் கூடுதலான பொறுப்புக்களையும் அதற்கேற்ப அதிகாரத்தையும் ஒப்படைத்தலாகும். ஒரு உற்பத்திப் பகுதியில் கடமைபுரியும் தொழிலாளாகள் குறிப்பிட்ட உற்பத்தி செய்முறைக்கு மாத்திரம் அன்றி அந்நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு தேவையான ஏனைய நடவடிக்கைகளுக்கும் அவர்களை பொறுப்பாளிகளாக தொழில் விருத்தி மாற்றுகிறது. அத்துடன் அவர்களது பதிலளிக்கும் பொறுப்பும் **(ACCOUNTABILITY)** அதிகரிக்கிறது.

தொழில் விருத்தியின் அடிப்படையில் தொழில் வடிவமைப்பை நோக்குவோமாயின் இங்கு ஒவ்வொரு தனிப்பட்ட ஊழியரின் திருப்தியே வினைத்திறன் அதிகரிப்பை விட முக்கியமானதாக காணப்படுகிறது. இத்தொழில் விருத்தி கட்டமைப்பானது இரு பெரும் கோட்பாடுகளின் செல்வாக்கிற்கு உட்படுத்தப்படுகிறது.

(1) **Herzberg** இன் ஊக்கப்படுத்தல் சுகாதாரக்காரணிகள் கோட்பாடு.
(2) **Victor vroom** இன் எதிர்பாக்கைக் கோட்பாடு.

**Herzberg** இன் கருத்துப்படி தொழில் விருத்தியை அதிகரிக்ககூடிய பல காரணிகள் காணப்படுகின்றன. இவற்றை ஊக்கப்படுத்தல் காரணிகள் எனக்குறிப்பிடலாம். இக்காரணிகளாக சாதனை. அங்கிகாரம், பொறுப்பு, வேலையில் உயர்வு போன்றன அமையும்.

**Herzbery** தொழில் வடிவமைப்பாளர்களால் மனித தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் தொழில் விருத்திக்கு 7 அடிப்படைகளை குறிப்பிடுகிறார். அவை வருமாறு:

(1) சில கட்டுப்பாடுகளை விலக்கும் அதே சந்தர்ப்பத்தில் பதிலளிக்கும் பொறுப்பை வைத்திருத்தல்.

(2) ஒவ்வொரு தனி மனிதனதும் செயற்பாட்டிற்குமான பதிலளிக்கும் பொறுப்பை அதிகரித்தல்.

(3) ஒவ்வொரு நபரிடமும் முழுமையாக ஒரு வேலை அலகை கையளித்தல்.

(4) ஊழியருக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குதல்.

(5) ஊழியர் செயற்பாடு பற்றி காலத்துக்குக்காலம் மதிப்பீடுகளை மேலதிகாரிகளுக்கு மட்டும் வழங்காமல் ஊழியர்களுக்கும் வழங்குதல்.

(6) புதிய கடினமான செயற்பாட்டை உட்புகுத்துதல்.

(7) ஒவ்வொரு தனி நபரும் நிபுணத்துவம் பெறக்கூடிய வகையில் செயற்பாடுகளை அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Victor vroom** இன் எதிர்பார்க்கை கோட்பாட்டை தொழில் விருத்தியுடன் தொர்பு படுத்தும் போது ஒரு ஊழியர் தான் முயற்சியினை பொறுப்பேற்கும் அதே நேரம் அப்பொறுப்பிற்கும் அவர் பெறும் வெகுமானத்திற்கும் இடையிலான தொடர்பை அறிந்து அவ்வாறு பெறும் வெகுமானம் அவரது தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதா? என கண்டு கொண்டால் அவர் தனது முயற்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவார் என எதிர்பார்க்கலாம். ஆகவே இதன் அடிப்படையில் தொழில் வடிவமைப்போர் ஊழியரின் ஊக்கப்படுத்தல் காரணிகளை அடையாளம் கண்டு அதனை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தொழிலினை வடிவமைப்பதன் மூலம் அவர்களின் செயற்பாட்டினை அதிகரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை ஏற்படுத்த முடியும்.

## 3. தொழில் விரிவாக்கம் (JOB ENLARGEMENT) :-

தொழில் விரிவாக்கமானது தொழில் விருத்தியிலிருந்து வேறுபட்டது. தொழில் விரிவாக்கம் எனும் போது கிடையாக தொழிற் காரணிகளை அதிகரிப்பதாகும். ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட வேலை தொடர்பான அதிகாரங்கள் பொறுப்புக்களை மாத்திரம் அன்றி பல்வேறுபட்ட நடவடிக்கைகளையும் ஒருவருக்கு வழங்கும் போது அது தொழில் விரிவாக்கம் எனலாம். உண்மையில் சிறப்புத்தேர்ச்சி என்ற அணுகுமுறையிலிருந்து ஒரு வித்தியாசமான அணுகு முறையாக அமைகிறது. இங்கு ஒரே மாதிரியான பொறுப்புக்களை ஒப்படைத்தலை விடுத்து வித்தியாசமான வேலைப் பொறுப்புக்களை ஒருவருக்கு வழங்குவதனை இது குறிப்பிடுகிறது. இவ்வகையான அணுகு முறைகளும் கூட தொழிலாளர் தமது வினைத்திறமையினை அதிகரித்துக் கொள்வதற்கும் நிறுவனங்கள் தமது நடவடிக்கையில் தங்கள் குறிக்கோள்களை ஏற்கனவே திட்டமிட்ட கால இடைவெளிக்குள் அடைந்து கொள்வதற்கு இது வழிவகுக்கிறது.

## 4. தொழிற் சுழற்சி (JOB ROTATION) :-

தொழிற் சுழற்சி என்பது தொழிலாளர்களுக்கு தொடர்ந்து ஒரே வகையான வேலையினை வழங்காமல் அவர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் வெவ்வேறு வகையான தொழில்கள் வழங்கப்படுவதைக் குறிக்கும். எனவே அவர்கள் ஒரே வகையான வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனூடாக ஏற்படுகின்ற சலிப்புத்தன்மையை இது நீக்கும் என எதிர்பார்க்கிறது. ஒரு வகையில் சுழற்சி முறையில் வெவ்வேறுபட்ட வேலைகளை தொழிலாளர்களுக்கு வழங்கும் போது அவர்கள் பல்வேறுபட்ட வேலைகளையும் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் அது அவர்களுக்கு ஒரு தூண்டுதலாகவும் அமைகிறது. ஜப்பானிய நிறுவனங்கள் இவ்விதமான தொழில் அல்லது வேலைச் சுழற்சியினை தொழிற்சாலை ஊழியர்களுக்கு மாத்திரமன்றி அலுவலக ஊழியர்களுக்கும் இவ் அணுகு முறையை பயன்படுத்துகிறது. எனினும் கூட இவ்விதமான முகாமைத்துவ அணுகு முறை ஒரு நீண்ட காலத்துக்கு தொடர்ந்தும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவி புரியும் என எதிர் பார்க்க முடியாது.

## 5. தன்னிச்சையான வேலைக்குழுக்கள் (AUTONOMOUS WORK GROUPS) :-

பங்குபற்றல் முகாமைத்துவத்தின் மிகக்கடினமான வடிவமாக இது விளங்குகிறது. அத்துடன் மிகச்சிறப்பு வாய்ந்த விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. பொருள் ஒன்றின் உற்பத்தியுடன் தொர்புபட்ட ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஊழியர்களை ஈடுபடுத்துவதன் மூலம் தன்னிச்சையான வேலைக்குழு நிறுவனம் ஒன்றில் இன்னொரு நிறுவனமாக திகழ்கிறது. குழு அங்கத்தவர்களுக்கு மேற்பார்வையாளர்களும் முகாமையாளர்களும் தமது தொழிற்பாடுகளை கையளித்தல் வேண்டும். திட்டமிடல நடவடிக்கைகளைப் பிரித்தொதுக்குதல், பயிற்சி, தரக்கட்டுப்பாடு, உற்பத்தி ஏனைய நடவடிக்கைகள் யாவும் குழுவின் பொறுப்பாக இங்கு காணப்படுகிறது. சிரேஷ்ட முகாமையாளர்களை வேலைக் குழுக்களுக்கு இது இட்டு வருவதுடன் செயற்பாட்டையும் குழுக்களின் மனவலிமையினையும் முன்னேற்றுவதற்கு அவர்களை பயிற்றுவிப்பாளர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பட வழி வகுக்கிறது. சிறந்த கல்வி ஊட்டல் பயிற்சி, தொடர்ச்சியான அபிவிருத்தி ஆகியவற்றை தன்னிச்சையான வேலைக்குழுக்கள் வேண்டி நிற்கின்றன. பங்குபற்றுபவர்களுக்கு உயர்ந்த திருப்தியையும் பெருமிதத்தையும் இவை வழங்குகின்றன. சகல மட்டங்களிலும் அதிக நெகிழ்வுத்தன்மையும் ஆற்றலையும் இது வளர்க்கிறது கைத்தொழிலில் இயந்திரமயப்படுத்தல் தன்னிச்சையான வேலைக்குழுக்களின் அறிமுகத்திற்கான மிகச்சிறந்த வாய்ப்பாக விளங்குகிறது.

இத்தகைய குழுக்கள் பின்வரும் குணாதிசயங்களைப் பொதுவாகக் கொண்டிருக்கும்.

1. தொழிற் சுழற்சி மூலமாக முழுமையான ஊழிய நெகிழ்வுத் தன்மைக்கு வழிவகுத்தல்.
2. அங்கத்தவர்களுக்கிடையில் பணிகளை ஒதுக்கீடு செய்வதில் குறிப்பிடத்தக்க அளவு சுதந்திரத்தை கொண்டிருத்தல்.
3. பரந்தளவிலான முகாமைத்துவ வழிகாட்டலின் கீழ் தமது உற்பத்தி அட்டவணைகளைத் திட்டமிடுவதில் கணிசமான அளவு சுதந்திரத்தை கொண்டிருத்தல்.
4. தமது ஓய்வு நேரத்தை தாமாகவே ஒழுங்குபடுத்தல்.
5. தமது குழுத்தலைவரை தாமாகவே தெரிவு செய்தல்.
6. குழுத் தீர்மானம் எடுத்தலினால் முழுமையான பங்களிப்பை ஊக்குவித்தல்.

## முடிவுரை:-

வேலைத்தள வாழ்க்கைத்தரமானது எவ்வாறு ஒவ்வொரு ஊழியர்களும் தமது பங்களிப்பு பற்றி உணர்கின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது. பின்வரும் ஆய்வு முடிவுகள் இரு முக்கிய நிலைப்பாடுகளை வேலைத்தள வாழ்க்கைத் தரத்தைப் பற்றி குறிப்பிடுகின்றது.

அ) குறிப்பிடத்தக்க நீண்டகால உற்பத்தி விருத்தி வேலைத்தள வாழ்க்கை தர அதிகரிப்புடன் ஒன்றிணைந்து செல்லுதல் வேண்டும்.

ஆ) அனேகமான மக்கள் எப்போது தமது செயற்பாடுகள் நிறுவனத்தின் வெற்றிக்கு ஒரு பொருள் பொதிந்த முறையில் பங்களிப்பு செய்திருக்கிறது என உணர்கிறார்களோ அப்போதே வேலைத்தள வாழ்க்கை தரமானது வெற்றிகரமானதாக அமைந்துள்ளதனைக் காணலாம்.

மேற்கூறிய முடிவுகள் தொழில் திருப்தியையும் தொழில் கௌரவத்தையும் அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகின்றன. எனினும் இன்று நிறுவனங்களது உட்கட்டமைப்புக்கள் உள்ளக வெளியக சூழல் காரணிகள் என்பன தொழில் வடிவமைப்பில் எந்தளவுக்கு வேலைத்தள வாழ்க்கைத்தர அணுகுமுறை வெற்றியளிக்கும் என்பதை தீர்மானிக்கின்றன. நடைமுறையில் பல எதிர்மறையான முறைகளும் வேலைத்தள வாழ்க்கைத்தரத்தை பேண உபயோகப்படுத்தப்படுகின்றன.

P.THANESWARAN
MANAGEMENT STUDIES
FINAL YEAR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலைத் தேசிய வருமானம்

ஆ. சௌந்தரலிங்கம்
(விரிவுரையாளர்)
பொருளியற்றுறை

## தேசிய வருமானம் - வரைவிலக்கணம்.

ஒரு தேசத்தினுடைய மொத்த வருமானமே தேசிய வருமானம் ஆகும். இன்னும் சிறப்பாகக் கூறினால் குறித்த ஒரு நாட்டில் குறித்த ஒரு காலப்பகுதியில் - பொதுவாக ஒரு வருட காலத்தில் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தின் மொத்தப் பெறுமதியே தேசிய வருமானம் ஆகும். இது அக்காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீட்டின் மொத்தப் பெறுமதிக்கு சமனாக இருக்கும். அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்ய ஏற்பட்ட மொத்த செலவுக்கும் சமனாக இருக்கும்.

## சமநிலைத்தேசிய வருமானம்:

ஒரு பொருளாதாரத்தில் காணப்படும் திட்டமிட்ட செலவீடானது அப்பொருளாதாரத்தின் உண்மையான வெளியீட்டின் பெறுமதிக்கு சமமானதாக அமையும் போது அங்கு தேசிய வருமானமானது சமநிலையில் உள்ளதென்று கூறிக் கொள்ளலாம். இன்னொரு வகையில் கூறினால் தேசிய வருமானமானது தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போக்கினையோ அல்லது குறைந்து செல்லும் போக்கினையோ கொண்டிருக்காத ஒரு நிலையில் தேசிய வருமானம் சமநிலையில் காணப்படுகிறதென்று கூறலாம். அவ்வாறு சமநிலையில் காணப்படும் தேசிய வருமானம் சமநிலைத் தேசிய வருமானம் என்று அழைக்கப்படும்.

### நிபந்தனைகள்

தேசிய வருமானமானது இவ்வாறு சமநிலை மட்டத்தில் காணப்பட வேண்டுமாயின் அதற்கென சில நிபந்தனைகள் காணப்பட வேண்டும்.

அ) பொருளாதாரத்தில் இடம்பெறும் கொள்வனவுகளின் பெறுமதியானது அங்கு இடம்பெற்ற உண்மையான வெளியீட்டிற்கு சமமானதாக அமைய வேண்டும். அதாவது வருமானம், செலவீடு இரண்டும் பொருளாதாரத்தில் சமமானதாக இருக்க வேண்டும்.

ஆ) பொருளாதாரத்தின் உட்பாய்ச்சல்களும், வெளிப்பாய்ச்சல்களும் ஒன்றுக்கொன்று சமமான பெறுமதியுடையதாக இருத்தல் வேண்டும்.

இவ்விரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில்தான் பொருளாதாரத்தில் தேசிய வருமானம் சமநிலை மட்டத்தில் காணப்படும்.

### எளிய பொருளாதாரம்

முதலில் ஒரு எளிய பொருளாதாரமொன்றினை எடுத்து நோக்குவோம். இங்கு வீட்டுத்துறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்துறையும் மாத்திரமே காணப்படுகிறது. இங்கு வீட்டுத்துறை நிறுவனத்துறை என்பவற்றை வேறுபடுத்தி அறிய வேண்டும். பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகள் என்பவற்றின் உற்பத்தி பற்றிய தீர்மானத்தினை நிறுவனத்துறையினர் எடுக்கின்றனர். தமது தீர்மானங்களுக்கேற்ப உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதும் நிறுவனத்துறையினரே. இந்த உற்பத்தி தொழிற்பாட்டுக்கு தேவையான காரணிச் சேவைகளை வழங்குபவர்களாக வீட்டுத்துறையினர் விளங்குகிறார்கள். நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய காரணிகளின் சேவைகளை நிறுவனத்துறைக்கு வழங்கி வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்ற அடிப்படையில் காரணி வருமானங்களை வீட்டுத்துறையினர் பெற்றுக் கொள்கின்றனர். வீட்டுத் துறையினர் இவ்வாறு தாம் பெற்றுக் கொண்ட வருமானங்களை நிறுவனத்துறையினர் உற்பத்தி செய்திருக்கும் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யப்பயன்படுத்துகிறார்கள். இந்த வகையில் வீட்டுத் துறையினர் பெற்றுக் கொள்ளும் காரணி வருமானமானது நுகர்வுச் செலவு என்ற வகையில் நிறுவனத்துறையையே போய்ச் சேர்கிறது. இப்பொழுது அரசாங்கத்துறையோ வெளிநாட்டுத்துறையோ இங்கு இல்லையென்று எடுத்துக் கொண்டால் உற்பத்தி மூலம் பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்ட எல்லா வருமானங்களும் அதாவது தெசிய வருமானமானது வீட்டுத் துறையினருக்கே வழங்கப்படுகிறது. எனவே வீட்டுத் துறையினர் வருமானம் பெறும் அளவானது அப்பொருளாதாரத்தின் உற்பத்திப் பெறுமதிக்கு சமனாகக் காணப்படுகிறது. இந்த நிலை தேசிய வருமானத்தின் சமநிலை மட்டமாக அந்த எளிய பொருளாதாரத்தில் காணப்படுகிறது.

எளிய பொருளாதாரமொன்றில் தேசிய வருமான சமநிலையினை தேசிய வருமானம் = தேசிய செலவு என்ற முதலாவது நிபந்தனையின் கீழ் நோக்குவோம். பின்வரும் அட்டவணையிலிருந்து இதனைக் கண்டு கொள்ளலாம்.

| தேசிய வருமானம் Y | திட்டமிட்ட நுகர்வு C | திட்டமிட்ட முதலீடு I | திட்டமிட்ட செலவு E=C+I |
|---|---|---|---|
| 0 | 30 | 30 | 60 |
| 40 | 60 | 30 | 90 |
| 80 | 90 | 30 | 120 |
| 120 | 120 | 30 | 150 |
| 160 | 150 | 30 | 180 |
| 200 | 180 | 30 | 210 |
| 240 | 210 | 30 | 240 |
| 280 | 240 | 30 | 270 |
| 320 | 270 | 30 | 300 |
| 360 | 300 | 30 | 330 |

இதன்படி 240 என்ற வருமான மட்டத்தில் செலவீடும் 240 ஆக அமைகின்றது. இந்த 240 என்ற வருமான மட்டமே சமநிலைத் தேசிய வருமான மட்டமாகும். இந்த அட்டவணையில் காணப்படும் வேறு எந்த தேசிய வருமான மட்டமும் சமநிலைத் தேசிய வருமான மட்டமாக அமையமாட்டாது. உதாரணமாக 160 என்ற தேசிய வருமான மட்டத்தை எடுப்போம். இங்கு மொத்தச் செலவு 180 ஆக அமைகின்றது. இது சமநிலை இன்மையை வெளிப்படையாகக் காட்டுகின்றது. வருமானத்தை விட செலவீடு அதிகமாகக் காணப்படும் இந்த நிலை பொருளாதாரத்தில் பற்றாக்குறை நிலைமையைத் தோற்றுவித்து விடுகின்றது. நுகர்வோர் அதிருப்தி அடைகின்றனர். இந்த நிலமை நிறுவனங்களை ஊக்குவிக்க அவை உற்பத்தியை பெருக்குகின்றன. எனவே தேசிய வருமானம் அதிகரிக்கும் போக்கு அங்கு காணப்படுகின்றது. மொத்தச் செலவுடன் சமப்படும்வரை தேசிய வருமானம் அதிகரித்துச் செல்லும். இன்னொருவழியிலும் இச்சமநிலையை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய போக்கு இடம் பெறும். எமது உதாரணத்தில் தேசிய வருமானமானது 160 ஆக உள்ள போது மொத்தச் செலவீடு 180 ஆக அமைகிறது. இங்கு பொருளாதாரத்தில் இடம் பெற்ற உண்மையான உற்பத்தியை விட செலவானது 20 இனால் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த மேலதிக 20 ரூபா பெறுமதியான பொருட்கள் நிறுவனங்களின் இருப்புக்களில் இருந்து வழங்கப்படுகின்றது. இந்த நிலை தொடரும் போது நிறுவனங்களின் இருப்புக்கள் குறைவடையத் தொடங்கும். இருப்புக்கள் முடிவடைய முன்னர் நிறுவனங்கள் தமது உற்பத்தியைப் பெருக்குவர். இதனால் உற்பத்தி பெருகி தேசிய வருமானம் அதிகரிக்கத் தொடங்கும். அது மொத்தச் செலவீட்டுக்குச் சமமாகும் வரை அதிகரிக்கும். இவ்வாறு இச் சமநிலையின்மை நீக்கப்படும். தேசிய வருமான சமநிலை 240 என்ற வருமான மட்டத்தில் அடையப்படும்.

இப்போது தேசிய வருமானம் 320 ஆக இருக்கும் நிலையை நோக்குவோம். இந்த வருமான மட்டத்தில் பொருளாதாரத்தில் மொத்தச் செலவு 300 ஆகக் காணப்படுகிறது. 20 என்றளவுக்கு பொருட்கள் விற்பனையாகாது தேங்கிக் கிடக்கும். இந்த நிலையை நிறுவனங்கள் விரும்பமாட்டாது. எனவே உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளும். இதனால் தேசிய வருமானம் வீழ்ச்சியடைந்து சமநிலை மீண்டும் 240 என்ற வருமான மட்டத்தில் அடையப்படும்.

தேசிய வருமானச் சமநிலை மட்டத்தை வரைபடத்திலும் காட்டலாம்.




வரை படத்தின் படியும் 240 என்ற வருமான மட்டத்தில் செலவும் 240 ஆக அமைந்து சமநிலைத் தேசிய வருமான மட்டமாக அமைகின்றது. e என்ற புள்ளியில் E=Y ஆக அமைகின்றது. எனவே Y=C+I ஆக் தேசிய வருமாச் சமநிலை இடம் பெறுகின்றது.

இப்போது எளிய பொருளாதாரம் ஒன்றின் சமநிலைத் தேசிய வருமானத்தை உட்பாய்ச்சல்கள் = வெளிப்பாய்ச்சல்கள் என்ற இரண்டாவது நிபந்தனையின் கீழ் நோக்குவோம். இந்த எளிய பொருளாதாரத்தில் இடம் பெறும் உட்பாய்ச்சல்களின் பெறுமதி வெளிப்பாய்ச்சல்களின் பெறுமதிக்குச் சமனாக அமைந்து தேசிய வருமானமானது சமநிலை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் அட்டவணை மூலம் இதனைக் காட்டலாம்.

| தேசிய வருமானம் Y | திட்டமிட்ட சேமிப்பு S | திட்டமிட்ட முதலீடு I |
|---|---|---|
| 0 | -30 | 30 |
| 40 | -20 | 30 |
| 80 | -10 | 30 |
| 120 | 0 | 30 |
| 160 | 10 | 30 |
| 200 | 20 | 30 |
| 240 | 30 | 30 |
| 280 | 40 | 30 |
| 320 | 50 | 30 |
| 360 | 60 | 30 |


இங்கு S=I என்பதாக அமைகின்றது. 240 என்ற வருமான மட்டத்தில் உட்பாய்ச்சலான முதலீடும், வெளிப்பாய்ச்சலான சேமிப்பும் ஒன்றுக் கொன்று சமமாக அமைவதனால் 240 என்பது சமநிலை வருமான மட்டமாகும். அங்கு தேசிய வருமானம் சமநிலை அடைகின்றது. வேறு எந்த வருமான மட்டத்திலும் தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடைய முடியாது. காரணம் அவ்வருமான மட்டங்களில் திட்டமிட்ட சேமிப்பும் திட்டமிட்ட முதலீடும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. உதாரணமாக தேசிய வருமான மட்டம் 160 ஆக உள்ள போது திட்டமிட்ட சேமிப்பு 10 ஆகும். திட்டமிட்ட முதலீடு 30 ஆகவும் காணப்படுகின்றது. இந்த வருமான மட்டத்தில் வீட்டுத்துறை வாங்க விரும்பிய அனைத்துப் பொருட்களையும் வாங்க முடியாதிருக்கும். இந் நிலையில் அவர்கள் வருமானத்தைப் பெருக்க முயற்சி எடுப்பார்கள். நிறுவனத்துறையினரைப் பொறுத்தமட்டில் திட்டமிட்ட முதலீடு 30 ஆகக் காணப்படும். ஆனால் உண்மையான மொத்த முதலீடு 10 ஆகவே காணப்படும். இந் நிலையில் நிறுவனம் உண்மையான மொத்த முதலீட்டை 30ற்கு அதிகரிக்க விரும்பி உற்பத்தியைப் பெருக்க முயற்சிக்கும். இது தேசிய வருமான மட்டத்தை அதிகரிக்கும். இப்போது 320 என்ற வருமான மட்ட்த்தை எடுப்போம். அங்கு திட்டமிட்ட சேமிப்பு, திட்டமிட்ட முதலீட்டை விட அதிகமாகக் காணப்படுகின்றது. நிறுவனத்துறை தாம் உற்பத்தி செய்த அனைத்தையும் விற்கமுடியாதிருக்கும். அதனால் இருப்பு அதிகரிக்கும். எனவே நிறுவனம் உற்பத்தியை குறைத்து இருப்புக்களை குறைக்க முயலும் போது தேசிய வருமானம் குறையத் தொடங்கும்.

இவ்வாறு திட்டமிட்ட சேமிப்பும் திட்டமிட்ட முதலீடும் வேறுபடும் போது தேசிய வருமானமானது சமநிலையில் காணப்படாது. இந்நிலையில் வீட்டுத்துறை, நிறுவனத்துறை என்பவற்றின் செயற்பாடுகள் சமநிலைத் தேசிய வருமானத்தை அடையும் வரை இடம் பெற தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடையும். இங்கு 240 என்ற வருமான மட்டத்தில் சேமிப்பும் முதலீடும் சமநிலை அடைகின்றது.


வருமான சுற்றோட்ட வரைபடம் மூலமும் உட்பாய்ச்சல் = வெளிப்பாய்ச்சல் என்ற அடிப்படையில் தேசிய வருமான சமநிலையைக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் என்பன சமநிலையடைந்து தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடைவதை வரைபட ரீதியாகவும் காட்டலாம்.




இங்கு தேசிய வருமான மட்டம் 240 ஆகக் காணப்படுகின்ற போது S=I ஆகும். சேமிப்பு முதலீட்டுக் கோடுகள் இரண்டும் ஒன்றையொன்று வெட்டும் புள்ளியில் சமநிலைத் தேசிய வருமான மட்டம் காட்டப்படுகிறது.


## அரசாங்கத் தலையீடு:

இதுவரை எளிய பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமான சமநிலை பற்றி பார்த்தோம். இனி அரசாங்கத் தலையீடு காணப்படும் ஒரு பொருளாதாரத்தில் தேசிய வருமான சமநிலை எப்படி அமைகிறது என்று பார்ப்போம். எளிய பொருளாதாரம் ஒன்றில் அரச தலையீடு இடம்பெறும் போது வீட்டுத் துறையினருக்கு அரச சேவைகள் கிடைக்கின்றன. இச்சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கத்துக்கு செலவு ஏற்படுகின்றது. இச்செலவுகளை ஈடுசெய்ய அரசு வரி விதிக்கின்றது. வீட்டுத் துறையினரும் நிறுவனத் துறையினரும் வரியினைச் செலுத்துகின்றனர். அதே சமயம் இச்சேவைகளை வழங்குவதற்காக வீட்டுத்துறையினரிடம் இருந்து காரணிச் சேவைகளையும், நிறுவனத்துறையினரிடமிருந்து பொருட்கள் சேவைகளையும் அரசு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்கிறது. இந்நிலையில் பொருளாதாரத்தில் தேசிய வருமானம் சமநிலையடைவதை தேசிய வருமானம் = தேசிய செலவு என்ற நிபந்தனையின் கீழ் நோக்குவோம். இப்போது அப்பொருளாதாரத்தின் புதிய மொத்த செலவீட்டுத் தொழிற்பாடானது பின்வருமாறு மாற்றமடைகிறது. E=C+I+G-T. இங்கு பொருளாதாரத்தில் விரும்பப்படுகின்ற மொத்த செலவீடானது விரும்பப்படும் நுகர்வு, விரும்பப்படும் முதலீடு, விரும்பப்படும் அரசாங்கச் செலவீடு என்பவற்றின் கூட்டுத்தொகையாக அமைகிறது. இவ்வாறான மொத்த செலவீடானது பொருளாதாரத்தில் இடம் பெற்ற உண்மையான வெளியீட்டுக்குச் சமனாக அமைகின்றபோது அங்கு தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடைகிறது. பின்வரும் வரைபடம் இதனைக் காட்டும்.




இங்கு Y=C+I+G-T ஆகும். மேலும் e என்ற புள்ளியில் பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தியும் (வருமானமும்) செலவீடும் சமப்படுகிறது. தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடைகிறது.


அரசாங்கத் தலையீட்டைக் கொண்ட பொருளாதாரத்தின் தேசிய வருமான சமநிலையை மொத்த உட்பாய்ச்சல்கள் = மொத்த வெளிப்பாய்ச்சல்கள் என்ற அடிப்படையில் வரைபடம் மூலம் காட்டலாம். இங்கு உட்பாய்ச்சல்களாக முதலீடு, அரசாங்கச் செலவு என்பன இடம்பெறுகின்றன. ஆகவே மொத்த உட்பாய்ச்சல்கள் I+G அக அமைகிறது. அதேபோல வெளிப்பாய்ச்சல்களாக சேமிப்பும் வரியும் காணப்படுகின்றன. ஆகவே மொத்த வெளிப்பாய்ச்சல் S+T என்பதாக அமைகிறது. எனவே இங்கு I+G=S+T ஆக அமையும் போது அங்கு தேசிய வருமானம் சமநிலை மட்டத்தில் காணப்படும். வரைபடமூலம் இதனைக் காட்டலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு S+T=I+G உட்பாய்ச்சல்களும், வெளிப்பாய்ச்சல்களும் சமப்படுவதன் அடிப்படையில் தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடைவதை வருமான சுற்றோட்ட வரைபடம் மூலமும் விளக்கலாம்.





எனவே S+T=I+G ஆகும்.

இவ்வாறு அரசாங்கத்துறை காணப்படும் பொருளாதாரமொன்றில் மொத்த உட்பாய்ச்சல்கள் மொத்த வெளிப்பாய்ச்சல்களுக்கு சமமாக அமையும்போது தேசிய வருமானம் சமநிலையில் காணப்படும்.

## வெளிநாட்டுத் துறை

இனி பொருளாதாரத்தில் வெளிநாட்டுத்துறையைச் சேர்த்துக் கொள்வோம். எனவே ஏற்றுமதிகள், இறக்குமதிகள் இடம்பெறுகின்றன. இப்போது தேசிய வருமான சமநிலை எவ்வாறு இடம்பெறும் என்பதை தேசிய வருமானம் = தேசியச் செலவு என்ற நிபந்தனையின் கீழ் நோக்குவோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இங்கு Y=C+I+G-T+X-M ஆகும். இங்கு ye என்ற வருமான மட்டத்தில் தேசிய வருமானமும் செலவும் சமப்பட்டுக் காணப்படுவதால் அதுவே தேசிய வருமான சமநிலை மட்டமாகும்.

மொத்த உட்பாய்ச்சல் = மொத்த வெளிப்பாய்ச்சல் என்ற அடிப்படையில் நோக்கும் போது பின்வரும் வரைபடம் மூலம் அவ்விரண்டும் சமப்படுவதைக் காணலாம்.




இங்கு I+G+X=S+T+M ஆகும். இங்கும் ye என்ற வருமான மட்டத்தில் மொத்த வெளிப்பாய்ச்சல்களும், மொத்த உட்பாய்ச்சல்களும் சமப்படுவதனால் அங்கு சமநிலைத் தேசிய வருமானம் காணப்படுகிறது.

திறந்த பொருளாதாரத்தின் உட்பாய்ச்சல்களும், வெளிப்பாய்ச்சல்களும் சமப்படுவதன் அடிப்படையில் தேசிய வருமானம் சமநிலை மட்டத்தை அடைவதை வருமான சுற்றோட்டப் படத்தின் மூலமும் காட்டலாம்.




எனவே வெளிநாட்டுத்துறையையும் சேர்த்துக் கொண்ட திறந்த பொருளாதாரமொன்றில் I+G+X=S+T+M என்பதாக உட்பாய்ச்சல்களும், வெளிப்பாய்ச்சல்களும் அமைகின்ற போது அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தின் தேசிய வருமானம் சமநிலை மட்டத்தில் காணப்படும்.

இவ்வாறு எளிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் என்பவற்றில் தேசிய வருமானச் சமநிலையை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

## கணித ரீதியிலான விளக்கம்

ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானச் சமநிலையை கணித ரீதியிலும் காட்டலாம். அதாவது சமநிலை மட்ட தேசிய வருமானத்தை கணித ரீதியிலும் கண்டு கொள்ளலாம்.

தேசிய வருமானம் சமநிலை மட்டத்தில் இருப்பதற்கான நிபந்தனை வருமாறு.

$$Y = C + I$$

Y = தேசிய வருமானம்

C = நுகர்வு

I = முதலீடு

எனவே Y=C+I என்பது மொத்த வருமானம் மொத்தச் செலவீட்டுக்குச் சமம் என்பதைக் காட்டுகின்றது.

C என்ற நுகர்வின் தொழிற்பாட்டினை பின்வருமாறு எழுதலாம்.

$$C = a + by$$

a= வருமானம் பூச்சியமாக உள்ள போது காணப்படும் நுகர்வு.

b= எல்லை நுகர்வு நாட்டம்.

அதாவது $\frac{\Delta C}{\Delta Y}$

Y= வருமானம்.

சில சந்தர்ப்பங்களில் நுகர்வுத் தொழிற்பாடு

C= bY ஆகவும் அமையலாம்.

ஆரம்பத்தில் உதாரணமாகத் தரப்பட்ட வருமான செலவு அட்டவணையில் இருந்து பின்வருமாறு ஒரு நுகர்வு தொழிற்பாட்டினை நாம் அமைக்கலாம்.

| Y | C |
|---|---|
| 0 | 30 |
| 40 | 60 |

இதன்படி

$$a = 30$$

$$b = \frac{\Delta C}{\Delta Y} = \frac{30}{40} = \frac{3}{4}$$ அல்லது 0.75.

இவற்றிலிருந்து ஒரு நுகர்வுத் தொழிற்பாட்டினை நாம் அமைத்துக் கொள்ளலாம்.

$$\boxed{C = 30 + 3/4\,Y}$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட இப்பொருளாதாரத்தில் I = 30 ஆக அமைந்திருந்தது. எனவே சமநிலை வருமான மட்டத்தை பின்வருமாறு கண்டு கொள்ளலாம்.

$$Y = C + I$$
$$Y = a + bY + I$$
$$Y = 30 + 3/4\,Y + 30$$

$$Y - 3/4\,Y = 60$$
$$Y(1 - 3/4) = 60$$
$$Y = \frac{60}{1 - 3/4}$$
$$Y = 240$$

ஒரு மூடப்பட்ட எளிய பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம் மேற்காட்டியவாறு கணித ரீதியில் கண்டறியப்படும். ஆனால் பொருளாதாரத்தில் அரசாங்கத் தலையீடு இடம் பெறுகின்ற போது அங்கு அரசாங்கச் செலவு, வரி என்பன இடம்பெறுகின்றன. சமநிலைத் தேசிய வருமானத்தைக் கணிக்கும் போது இவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு பொருளாதாரத்தில் வரி விதிக்கப்படும் போது அது இரண்டு முறைகளில் விதிக்கப்படலாம்.

அ) வருமானத்துடன் தொடர்பற்ற விதத்தில் வரியினை விதித்தல். அதாவது எல்லா வருமான மட்டங்களிலும் குறித்த ஒரு அளவான வரி விதிக்கப்படுதல். இந்த நிலையில் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை பின்வருமாறு கணித ரீதியில் கணிப்பிடலாம். உதாரணமாக விதிக்கப்படும் வரி எல்லா வருமான மட்டங்களிலும் 10 என்பதாக அமைகின்றது என எடுப்போம். G = 20 எனவும் எடுப்போம். G என்பது அரசாங்கச் செலவைக் குறிக்கின்றது.

$$Y = a + b(Y - T) + I + G$$
$$Y = 30 + 3/4\,(Y - 10) + 30 + 20$$
$$Y = 30 + 3/4\,Y - 7.5 + 30 + 20$$
$$Y - 3/4\,Y = 72.5$$
$$Y(1 - 3/4) = 72.5$$
$$Y = \frac{72.5}{1 - 3/4}$$
$$Y = 290$$

ஆ) வரியானது வருமானத்துடன் தொடர்பான வகையிலும் விதிக்கப்படலாம். அதாவது வருமானம் அதிகரிக்க வரி செலுத்தும் அளவும் அதிகரித்துச் செல்கின்றது. உதாரணமாக தனிநபரின் வருமானத்தில் 2% வரியாக அறவிடப்படுகிறது. இப்போது சமநிலைத் தேசிய வருமான மட்டம் பின்வருமாறு அமையும்.

$$Y = a + b\,(Y - tY) + I + G$$
$$Y = 30 + 3/4\,(Y - 0.2Y) + 30 + 20$$
$$Y = 30 + (0.75Y - 0.15Y) + 30 + 20$$
$$Y = 30 + 0.6Y + 30 + 20$$
$$Y - 0.6Y = 80$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$Y(1 - 0.6) = 80$$

$$Y = \frac{80}{1 - 0.6}$$

$$Y = 200$$

வீதாசார அடிப்படையில் வரி விதிக்கப்படும் போது பெருக்கி பின்வருமாறு அமைகின்றது.

$$K = \frac{1}{1 - b + bt}$$

எனவே சமநிலை தேசிய வருமானம்

$$Y = \frac{1}{1 - b + bt} \cdot a + I + G$$

எமது உதாரணத்தின்படி

$$Y = \frac{1}{1 - 0.75 + 0.15} \cdot 30 + 30 + 20$$

$$Y = \frac{80}{1 - 0.6}$$

$$Y = 200$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் காணப்படும் பொருளியல் கருத்துக்கள்.

திருவள்ளுவரின் இறவாப் புகழ் படைத்த அற நூலாகிய திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலைக்கொண்டு. எப்பாலாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அறமும், பொருளும், காதலும் எவ்வினத்தவருக்கும், எந்நாட்டவருக்கும், எக்காலத்தவருக்கும் பொதுவானவையாகும்.

அவற்றுள் மிக முக்கியமாக பொருளாதார அறிவியல் தோன்றும் முன்னரே பல அரிய பொருளாதாரக் கருத்துக்களை பொருளாதார அறிஞர்களுக்கு வழங்கியுள்ளார் வள்ளுவர். இதிலிருந்து பொருளியல் என்பது இன்று ஒரு தனிப் பெருந்துறையாகவும், வளர்ந்து வரும் ஒரு துறையாகவும் காணப்படுகின்ற அதே வேளை, மனித சமூகம் தோன்றிய காலந்தொட்டே பொருளியலும் மனிதனை தனது செல்வாக்கிற்கு உட்படுத்தி வந்துள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனால் இது ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விரிவுபடுத்தியதாகவும், நவீன காலத்திற்கேற்ற அணுகு முறைகளை தன்னுள் இணைத்துக் கொண்டதாகவும் பொருளியல் நடவடிக்கைகளும், ஆய்வுகளும் காணப்படுகிறது.

இவ்வகையில் திருக்குறளிலுள்ள முப்பால்களிலே ஒரு பாலான பொருட்பாலே பொருளியல் கருத்துக்கள் அதிகம் காணப்படுகின்ற பகுதியாக விளங்குகின்றது. காரணம் பொருளியல் என்பது ஆக்க சாதனங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் சேவைகளுடன் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் கொண்டதாக உள்ளது. இதே போன்று மனித வாழ்க்கையும் இப்பொருட்கள் சேவைகளுடன் நெருக்கமான உறவினைக் கொண்டதாக உள்ளது. இத்தகைய ஒரு நோக்கிலேயே திருவள்ளுவரின் திருக்குறளிலுள்ள பொருட்பாலும் பொருளியலுடன் அதிகம் ஒற்றுமைப்படுகிறது. இந்நிலையில் அன்றும் சரி, இன்றும் சரி, எதிர்காலத்திலும் சரி பொருளியல் ஆய்வுகள் அவசியமானதாக உள்ளதால், திருவள்ளுவரின் ஏனைய இரண்டு பால்களையும் தவிர்த்து, அன்று பொருட்பாலிலே வள்ளுவர் கூறிய பொருளியல் கருத்துக்கள் சிலவற்றை சுருக்கமாக நோக்குவோம்.

## (1) அரசாங்கமும் பொருளாதாரமும் :

முதலில் எந்தவொரு பொருளாதார சமூகங்களிலும் பல பொருளாதார அடிப்படைப் பிரச்சனைகள் காணப்படுகிறது. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எழுவதற்கு "அருமை" என்பதே அடிப்படையாக அமைகின்றது. லயனல் றொபின்சன் தனது பொருளியலுக்கான வரைவிலக்கணத்தினை அருமையுடனேயே ஒப்பிட்டுக் காட்டுகின்றார். அதாவது எந்தவொரு பொருளாதார சமூகங்களிலும் மனித தேவைகளுடன் ஒப்பிடும் போது வளங்கள் அருமையாகவே காணப்படுமென இவர் குறிப்பிடுகின்றார். ஆனால் அதற்கு எவ்வளவு காலங்களுக்கு முன்பாகவே இந்த வளங்களைப் பற்றியும், அருமை பற்றியும், உற்பத்திச் சாதனங்களை பற்றியும் அரசியலிலுள்ள ஒரு குறளிலே வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

(385)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்றல் :-

பொருள் விளைய இயற்கை வளம் வேண்டும். அந்த இயற்கை வளத்தை செல்வமாக ஓங்க வைப்பது மனித உழைப்பு. இதன் மூலம் விளைந்ததையெல்லாம் நுகர்வு போக மறுபகுதியை சேமித்து அதனை மூலதனமாக முதலீடாக மாற்றுவதற்கு அல்லது பொருளாதார நிலையை பெருக்க முற்படும் போது இடமறிந்து, காலமறிந்து, ஒழுங்கான தெரிவை மேற்கொண்டு இடர்களுக்கு முதல் தெரிந்து அனுசரித்து நடப்பவனே ஒழுங்கான ஆழ்வினை உடையவனாவான் என்கிறார்.

இதனை பிற்கால பொருளாதார அறிஞர்களின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் இயற்கை வளம் என்பது நிலம் என்கின்ற உற்பத்திக் காரணியையும், மனித உழைப்பு என்பது ஊழியம் என்கின்ற உற்பத்திக் காரணியினையும், மூலதனம், முதலீடு என்பன முறையே ஒரு பொருளாதாரத்தின் இருப்பு சார்ந்த கருதுகோளையும், பாச்சல் சார்ந்த கருதுகோள்களையும், ஆள்வினை உடையவன் என்பது முயற்ச்சியாண்மை என்கின்ற உற்பத்திக் காரணியையுமே குறித்து நிற்கிறது.

எனவே திருவள்ளுவரும் இதற்கு இணைந்த வகையிலே இவ்வாறு நான்கு உற்பத்திக் காரணிகளையும் ஒருங்கே உற்பத்தியில் ஒன்றிணைக்கும் போது பொருளாதார நிலையில் ஒரு புதுமை பிறக்கும். அப்போது எழும் பொருளாதார வளர்ச்சி தானாகவே தொடர்ந்து ஒரு வளர்ச்சியை மட்டுமன்றி பல வளர்ச்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியையும் கொண்டு வரும் என்கிறார். ஆனால் ஒரு வித்தியாசம் இந்த முயற்சியாளனை வள்ளுவர் அரசனாகக் காட்டுகிறார்.

## ஈட்டல் :-

பொருட்கள் சேவைகளை இவ்வாறாக உற்பத்தி செய்து அதனை ஒழுங்காகத் தொகுக்க வேண்டும். ஆனால் அதனை எப்படித் தொகுப்பது என்பதற்கு வள்ளுவர் விளக்கம் ஏதும் தரவில்லை. ஆனால் பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி "ஈட்டல்" என்பது வாணிகம் செய்தலையே குறிப்பதாக அமைகின்றது. அதாவது பொருள் மிகுதியாகவுள்ள இடத்திலிருந்து குறைவாக உள்ள இடத்தில் கொண்டு சென்று விற்றுப் பொருளீட்டுவதைக் குறிக்கின்றது. இது உள்நாட்டு வர்த்தகமாகவோ, அல்லது வெளிநாட்டு வர்த்தகமாகவோ இருக்கலாம். ஆனால் ஈட்டல் என்பது ஒரு பொருளாதாரத்தில் இடம் பெறும் வணிக செயற்பாட்டையே குறிக்கிறது.

## காத்தல் :-

பொருட்களை தானாகவே உற்பத்தி செய்யலாம். அல்லது பற்றாக்குறையானவற்றை கொள்வனவு செய்யலாம். அல்லது மிகையினை விற்பனை செய்யலாம். இதற்கும் மிஞ்சிய பொருட்களை களஞ்சியப்படுத்த வேண்டிய தேவை உருவாகின்றது. அதாவது மிகையான பொருட்களைக் காக்க வேண்டிய தேவை ஒன்று எந்த பொருளாதார சமூகங்களுக்கும் இருக்கவே செய்யும். இதனை வள்ளுவரின் காலத்தில் காணப்பட்ட பண்டமாற்று என்ற பொருளாதார முறையை விடுத்து நவீன பணப் பரிவர்த்தனைப் பொருளாதார நோக்கிலே இதனை சிந்தித்தால் இங்கு "வங்கிகள்" போன்ற நிதி நிறுவனங்களின் தேவை ஒன்று வேண்டப்படுகிறது. இங்கே தான் "சேமிப்பு" என்பது முக்கியமானதாக கருதப்படுகின்றது. அதாவது நிகழ்கால வருமானத்தில் முழுவதையும் பயன்படுத்தாமல் எதிர்கால பயன்பாட்டையும் கவனத்தில் கொள்ளவேண்டிய நிபந்தனையையும் வள்ளுவர் முன்பே கவனத்தில் கொண்டுள்ளார்.

## வகுத்தல் :-

பொருட்கள் சேவைகள் ஆக்கப்படுவதும், ஈட்டப்படுவதும், காக்கப்படுவதும் அதன் பயனை அனுபவிப்பதற்குத்தான். எனவே எந்த முறையில் இந்தப் பயனை மக்கள் அனுபவிப்பது என்ற பிரச்சனை எழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்தல் என்ற பதத்தை பொருளியலாளர்களின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுடன் ஒப்பிட்டு நோக்கினால் என்ன பொருளை உற்பத்தி செய்வது? அல்லது அதனை எந்தளவு உற்பத்தி செய்வது? அதனை எவ்வாறு உற்பத்தி செய்வது? அதனை யாருக்காக உற்பத்தி செய்வது? என்பதனையே வள்ளுவர் "வகுத்தல்" என்ற சொல்லின் பொருள்பட விளக்கியுள்ளார்.

ஆனால் இவ்வாறு பொருட்களையும் சேவைகளையும் இயற்றி, ஈட்டி, காத்து, அதனை பங்கிட்டுக் கொடுப்பது ஒரு அரசினுடைய கடமை என்ற "சமவுடமைப் பொருளாதார முறைமையின்" பண்புகளை வள்ளுவர் இந்தத் திருக்குறளின் மூலம் விளக்கியுள்ளதனை உணர முடிகின்றது.

## (2) வரவு - செலவு

வரவு, செலவு நடவடிக்கைகள் என்பது ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கும், ஒவ்வொரு தனிநபர்களுக்கும் முக்கியமானது. இவ்வகையில் ஒரு நாட்டின் அரசாங்கத்தின் சார்பில் அந் நாட்டின் நிதியமைச்சர் எதிர்வரும் நிதியாண்டிற்கான வரவுகள், மற்றும் செலவுகள் பற்றிய விபரங்களைத் திரட்டுவார். ஆனால் அரசின் வருவாய்களுக்கு ஏற்ப செலவுகள் அமைய வேண்டுமென்பதை வள்ளுவர் பின்வரும் குறளிலே வலியுறுத்துகிறார்.

"ஆகாறு அளவு இட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை

(478)

என்று கூறுகின்றார். அதாவது வரவு குறைந்தாலும் செலவு அதிகமாகா விட்டால் செல்வத்திற்கு அழிவில்லை என்கிறார். இதனை இன்றைய பொருளாதார அறிஞர்களும் ஏற்றுக் கொள்வார்கள். ஏனெனில் பொருளியலில் "சிக்கனம்" என்பது முக்கியமானதாக அமைகின்றது. இந்த சிக்கனம் செலவைச் சுருக்குவதிலேயே அமைந்திருக்கும். இதற்கு மாறான சந்தர்ப்பத்தில் பல பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனாலேயே தனிநபருக்கும், அரசாங்கத்திற்கும் வரவுகளும், செலவுகளும் இதற்கு அடிப்படையான சிக்கனமும், இன்றியமையாததாகின்றது.

ஆனால் இன்றைய அரசுகள் செலவுப்பக்கத்தையே முதலில் கவனத்தில் கொண்டு அதன் பின்னர் அதற்கேற்ற வருவாய்களையும் அல்லது நிதியீட்டத்தையும் மேற்கொள்கின்றது. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும், வரவுக்கு மீறி செலவு செய்யும் அரசு அழிவுப் பாதையை நோக்கி நடை போடுவதாக வள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல்
இல்லாகித் தோன்றாக் கெடும்"

(479)

அதாவது அளவறிந்து வாழாதவன் வாழ்வு, செல்வம் உள்ளது போல் காணப்பட்டு அழிந்து விடும் என்கிறார். அதாவது வருமானத்தை விட ஒரு அரசாங்கத்திற்கு செலவுகள் அதிகமாகக் காணப்பட்டால் அந்நாட்டில் பற்றாக்குறைப் பாதீடு ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். இதனால் இந்த பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தை நிதியீட்டம் செய்வதற்கு நாட்டில் வரித்தாக்கங்கள் கூடும். அல்லது வெளிநாட்டுக் கடன்கள் அதிகரிக்கும், பொதுப்படுகடன் சுமை அதிகரிக்கும். இதனால் வெளிநாட்டு சொத்து மட்டங்களின் அளவு குறைவடையும் என்ற பல்வேறு பிரச்சனைகள் ஒரு நாட்டுக்கு ஏற்படும் என்ற பொருளியல் அறிஞர்களின் கருத்துக்களையே வள்ளுவரும் இந்த குறளின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (3) வரிக்கொள்கை:-

ஒரு அரசாங்கம் ஒரு பொருளாதார சமூகத்தின் மீது பல்வேறு நோக்கங்களைக் கருத்தில் கொண்டு வரி விதிக்கின்றது. இத்தகைய வரிவிதிப்பானது நீதித்தன்மை, நடுநிலைத்தன்மை, சிக்கனத்தன்மை, நிச்சயத்தன்மை, தூண்டல்தன்மை, எளிமைத்தன்மை போன்ற சிறந்த வரியின் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டுமென கூறப்படுகிறது. இதனையே வள்ளுவரும் வலியுறுத்துகின்றார்.

மக்களுக்கு பெருஞ்சுமை இல்லாமல், அவர்களால் பொறுக்கக்கூடிய அளவில் அமைந்து அரசினை வளர்க்கும் வகையில் மக்களுக்கெல்லாம் இன்பம் தருவதாக அமைவதே ஒரு சிறந்த நீதித்தன்மையான வரியாகும். எனவே ஒரு அரசனுக்கு நீதித்தன்மையான வரிமுறைமையொன்று அவசியமென்பதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு"

(552)

அதாவது குடிமக்களைத் துன்புறுத்தி அவர்களின் மனம் நோக அச்சுறுத்தி வருமானத்திற்காக வரிவாங்கும் ஒரு கொடுங்கோல் அரசன் இரவில் தனிவழியே செல்வோரிடம் வேலைக்காட்டி அச்சுறுத்தி வழிப்பறி செய்யும் கள்வனை ஒத்தவனாக கருதினார். இதனையே இன்றைய பொருளியல் அறிஞர்களும் மக்களின் அவரவர் வருமான மட்டத்திற்கு ஏற்ப அல்லது வரி செலுத்தும் ஆற்றலுக்கேற்ற நீதித்தன்மையான ஒரு வரிக்கொள்கையினையே சிறந்த வரியின் தன்மையாக ஆதரிக்கின்றனர். இதனையே வள்ளுவரும் கூறியுள்ளார்.

## (4) நாட்டின் அமைப்பு (வருமானப் பரம்பல்)

ஒரு நாட்டிலே பல்வேறு வகையான மக்கள் காணப்படுவர். அதாவது வெவ்வேறுபட்ட வருமான மட்டங்களைக் கொண்ட மக்கள் குழுக்கள் காணப்படுவதே இயல்பானது. இதற்கேற்பவே அவர்களது பொருளாதார செயற்பாடுகளும் அந்நாட்டின் அரசாங்கத்தினது நடவடிக்கைகளும் அமைந்து காணப்படும் என்பதை வள்ளுவர் "நாடு" என்னும் அதிகாரத்திலுள்ள ஒரு திருக்குறளிலே பின்வருமாறு கூறுகின்றார்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

(731)

அதாவது உழவர்கள், அறிஞர்கள், செல்வர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்கள் பிரிவினரும் கூடி வாழ்வதே சிறந்த நாடு என்று வள்ளுவர் இதன் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

## (5) பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்:-

வறுமை என்பது எந்த மூலை முடுக்கிலும்" இல்லாமல் எல்லோரும் செல்வர்களாகவே விளங்கும் நாடே நல்ல நாடு என்றும் நல்ல நாட்டில் இருக்காதவை மிக்க பசி, தீராத நோய், அழிக்கும் பகை என்பன என்பதை பின்வருமாறு வள்ளுவர் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

(734)

அதாவது பசி, பிணி, பகையில்லாமல், அமைதியுடன் வாழ்வதே சிறந்த நாடு என்கிறார் வள்ளுவர். இதன்படி இங்குள்ள "சிறந்த நாடு" என்ற பதமானது "அபிவிருத்தி அடைந்த நாடு" என்பதனையே குறிப்பதாக உள்ளது எனலாம். எனவே மேற்காட்டிய அனைத்து பிரச்சனைகளிலுமிருந்து விடுபட்டு சகல பொருளாதார, சமூக செயற்பாடுகளிலும் முன்னணியில் உள்ள நாட்டினையே "அபிவிருத்தி அடைந்த நாடு" என குறிப்பிடுகின்றனர். பொருளியல் அறிஞர்கள் இதன் அடிப்படையிலேயே வள்ளுவரது கருத்தும் அமைந்துள்ளது. இவ்வகையில் மேற்படி திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது வறுமை காரணமாக மக்கள் தமது வாழ்க்கைச் செலவினங்களையும் மற்றும் அவர்களது அடிப்படை வசதிகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் பசியினால், பிணியினால் வாழ்கின்ற மக்கள் பிரிவினர் ஒரு நாட்டில் இருக்கின்ற வரையிலும் யுத்தத்திற்காக அதிகளவான நிதிகளை செலவு செய்கின்ற பாதுகாப்பு செலவினம் அதிகரித்துக் காணப்படுகின்றமையும் ஏனைய கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை சமூக நலன் வசதிகளை வழங்கமுடியாமல் இருக்கின்ற நிலைமையும் நல்ல நாட்டுக்கு அதாவது அபிவிருத்திப் பாதையில் செல்லும் நாட்டுக்கு, பொருத்தமில்லாதது என்பதை வள்ளுவர் முன்கூட்டியே கூறியுள்ளார் எனலாம்.

## (6) பிறநாட்டு உதவி :-

பல்வேறு வகையான காரணங்களால் நாடுகள் பல பிறநாட்டு உதவியுடன் தமது பொருளாதார நிலையினை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதனைக் காணலாம். இது வெளிநாட்டின் கடனாகவோ, நன்கொடையாகவோ, நேரடி முதலீடாகவோ அமையலாம். ஆனால் வள்ளுவரோ ஏனைய நாட்டை எதிர்பாராமல் தன்நிறைவு கொண்ட நாடுதான் "வளமான நாடு" என்று கருதுகிறார். இதனை பின்வருமாறு கூறுகிறார்.

"நாடென்ப நாடா வளத்தன, நாடல்ல
நடவளம் தரும் நாடு"

(739)

மேலுள்ள குறளின் மூலம் வள்ளுவர் இயற்கை வளம் நிறைந்த நாடுகளே சிறந்த நாடுகளென்றும் முயன்று தேடும் செல்வமுள்ள நாடுகள் நாடுகளல்ல என்று, பிறநாட்டு உதவிகளால் ஏற்றப்படுகின்ற தீய விளைவுகளை முன்கூட்டியே வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

## (7) பணம் (பொருள்) :-

இன்றைய பொருளாதாரத்தில் சகல கொடுக்கல் வாங்கல் தேவைகளுக்கும் பரிமாற்று ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்ற பணம் வள்ளுவரின் திருக்குறளிலும் பயன்படுத்தப்படுகின்றது. பணம் எதுவிதமான வருமானத்தையும் தராத நிலையிலும் பணத்தை மக்கள் சேகரித்து வைத்திருப்பதற்குக் காரணம் பணமானது சகல விதமான தேவைகளுக்கும் பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றமையினாலே ஆகும். இதனை பின்வரும் குறளிலே வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

"பொருள் அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"

(751)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி மதிப்பில்லாதவர்களையும் மதிக்கத்தக்கவர்களாகச் செய்யும் சிறப்புடையது பொருள். ஆகவே அந்தப் பொருளை விட ஈட்டத்தகுந்த பொருள் வேறில்லை என்கிறார். இங்கு பொருள் என்பது பணத்தினையே குறிப்பதாக அமைகின்றது எனலாம். இதன்மூலம் பணத்தின் முக்கியத்துவமும், மதிப்பும், அதன் தொழிற்பாடுகளும் வள்ளுவரினால் உணர்த்தப்படுவதாக உள்ளது. உலக வாழ்வுக்கு பொருள் இன்றியமையாதது என்பதை "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று வலியுறுத்தும் வள்ளுவர் அறவழியில் நின்று பிறர் எவருக்கும் தீங்கு வராத வகையில் அந்தப் பொருளை ஈட்டவேண்டும் எனவும் பின்வரும் குறளிலே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

(754)

அதாவது அருளோடும், அன்போடும் சேர்ந்து வராத பொருளை விட்டு விட வேண்டும் எனக் கூறும் வள்ளுவர் பொருட்களை கூடிய விலையில் விற்று மிகை இலாபம் உழைத்தல், சமுதாயத்தை ஏமாற்றியும், வேலையாட்களை சுரண்டியும், தொழிலாளர்களின் வயிற்றில் அடித்தும் பொருள் தேடுவது நேர்மையான வழியில்லை என்று பொருள் ஈட்டலில் அறத்தை நன்கு வற்புறுத்துகிறார் வள்ளுவர். இதனை பின்வரும் குறளில் காணலாம்.

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"

(755)

பொருளை ஈட்டும் துறையில் தூய்மை வேண்டும் என்று அறவழியினை வள்ளுவர் வலியுறுத்துவதனை பொருளதிகாரம் முழுவதிலும் காணமுடிகிறது.

## (8) பொதுநிதியியல் கருத்துக்கள் :-

ஒரு அரசாங்கத்தின் பொருளாதார வாழ்வில் வரவும், செலவும் இரண்டு பக்கங்கள். இவ்வாறு மக்களிடமிருந்து பெற்ற வருமானங்களை மக்களுக்காகவே செலவிடப்படுகின்ற நிதியினையே "அரச நிதி" அல்லது "பொதுநிதி" என அழைக்கப்படுகிறது. இதில் ஒரு பகுதியான அரசாங்கத்தின் வருமானம் பற்றிய கருத்துக்களும் திருக்குறளிலே காணப்படுகின்றன. அரசாங்கத்தின் வருமானத்தை அல்லது நாட்டின் அரசிறையின் பகுதிகளை தொகுத்து கூறும் எண்ணம் திருவள்ளுவருக்கு இருந்திருக்க முடியாது. எனினும் நடைமுறை அரசாங்கத்தின் வருவாய்களை இனங்கண்டு கொள்ளும் வகையில் பின்வரும் குறளிலே தெளிவுபடுத்தியுள்ளார்.

உறு பொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறு பொருளும் வேந்தன் பொருள்"

(756)

அதவாது உறுபொருள், உல்கு பொருள், ஒன்னார்த்தெறுபொருள் என மூன்று வருவாய்களை இனங்கண்டு வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதன்படி தானே வரும் பொருள், சுங்கப்பொருள், பகைவரிடம் கப்பமாக வாங்கும் பொருள் இவைகளே அரசனுக்குரிய பொருட்களாகும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுபொருள் (உள்நாட்டுப்பொருள்) :-

அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும் வழிகளில் பிரதானமானது வரிமூலமே ஆகும். உள்நாட்டிலிருந்தே நேர்முகமான வரி வருமானத்தின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தினையே வள்ளுவர் தானாக வந்து சேருகின்ற பொருளென்றும், உறுபொருளென்றும் குறிப்பிடுகின்றார்.

## உல்கு பொருள் :-

அரசாங்கத்தின் வரி வருமானத்தில் நேர்வரி போக மற்றய கூடுதலான வருமானம் நேரில் வரிமூலமே கிடைக்கின்றது. பிறநாட்டுப் பொருட்கள் விற்பனைக்காக உள்நாட்டுக்குள் வரும்போது அதாவது பொருட்களை இறக்குமதி செய்கின்ற போது அவை வரும் எல்லைகளில் பொருட்களின் அளவுக்கேற்ப சுங்கம் விதிக்கும் முறையை இது எமக்கு கூறுகிறது. இதுவே இறக்குமதி தீர்வையாகும். இச்சுங்கவரி அல்லது தீர்வை பொருட்களின் விலைகளோடு சேர்க்கப்பட்டு விடுவதால் அவற்றை வாங்கும் பொதுமக்களே இவ்வரியை மறைமுகமாகச் செலுத்துகின்றனர். இதனாலேயே இது மறைமுக வரியாக அமைகின்றது. இத்தகைய சுங்கவரியினையே வள்ளுவர் "உல்கு பொருள்" எனக் கூறியுள்ளார்.

## ஒன்னார்த்தெறு பொருள் :-

"தெறுபொருள்" என்பது பகைவர்களை அழிப்பதனால் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற பொருட்களை குறிக்கிறது. போரிலே பகைவர்களை தோற்கடித்து அவர்களிடமிருந்து கப்பமாக வாங்கும் பொருட்களை, அல்லது அவர்களின் உடமைகளை இது குறிக்கிறது. ஆனால் இன்றைய நடைமுறையில் இவ்வாறான ஒரு வருமானம் அரசாங்கத்திற்கு கிடைப்பதை நாம் காண முடியாது. ஆனால் நாட்டின் சட்ட திட்டங்களை மீறி குற்றம் செய்கின்ற குற்றவாளிகளும் ஒரு வகையில் அந்நாட்டுக்கு பகைவர்களாகவே கருதப்படுவர். எனவே அவர்கள் செய்த தண்டனைக்காக அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற "தண்டப்பணம்" என்பது வரியல்லா அரசிறையில் முக்கிய ஒரு பங்கினைப் பெறுகிறது. இத்தகைய ஒரு வருமானத்தினையே "ஒன்னார்த் தெறு பொருள்" என வள்ளுவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார் என்பதை நோக்கக் கூடியதாக இருப்பதுடன், அரசாங்க வருமானம் அல்லது அரசிறை மாதிரி ஒன்றினையே ஓரளவாவது வள்ளுவர் கூறி இருப்பதையும் காண முடிகிறது.

## (9) பதுக்கல் நடவடிக்கை (கறுப்புச் சந்தை) :-

வியாபாரிகள் பொருட்களை கூடிய விலையில் விற்று மிகை இலாபத்தினை உழைத்துக் கொள்வதற்காக செயற்கையாகவே பொருள் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் பொருட்களை பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுத்தி அதனை சட்ட ரீதியற்ற முறையில் கூடிய விலையில் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்வதனை நாம் காணமுடிகின்றது. இத்தகைய ஒரு பொருள் முடக்கல் நடவடிக்கையை கண்டிப்பதாக பின்வரும் குறள் அமைகிறது.

"வைத்தான் வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்து இல்"
(1001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி செல்வத்தை தேடி வைத்தவன்; அதை அனுபவிக்காவிட்டால் அவன் இறந்தவனுக்கே ஒப்பானவனாவான் என்கிறார். அதாவது பொருளைச் சேர்ப்பது சுய தேவைக்காக மட்டுமே இருக்க வேண்டும். இலாப நோக்கமோ, பிறருக்கு கொடுத்து உதவாத நோக்கமாகவோ இருக்கக் கூடாது என்பது வள்ளுவரின் கருத்து என்பது இதிலிருந்து பெறப்படுகின்றது.

## (10) விவசாயத்துறை (உழவு) :-

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படை விவசாயத்துறையிலேயே தங்கியுள்ளது. இதற்குக் காரணம், மக்கள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது உணவு: எனவே உணவை உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலை, அதற்கென ஒரு அதிகாரம் வகுத்துச் சிறப்பித்துக் கூறியுள்ளார் வள்ளுவர்.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை"
(1031)

அதாவது வேறெந்த வழிகளில் சுழன்றாலும் உலகம் முடிவில் ஏரினால் விளையும் பொருளையே எதிர்பார்த்து நிற்கிறது என்பதை உழவராலேயே உலகம் வாழ்கின்றது, ஆதலால் உழவுத் தொழிலே தலைமையான தொழில் என்கிறார். இதைவிட உழவு செய்வது உடல் வருத்தும் தொழில் என்று அதைச் செய்ய முடியாமல் வேறு வழிகளில் வாழ்க்கை நடத்துகின்றவர்களையும் காப்பாற்றுகின்றவர்கள் உழவர்களே. ஆகவே அவர்களே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் என்பதை பின்வரும் குறளிலே கூறுகின்றார்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"
(1032)

இதன்படி உழுகின்றவர்களே உலகத்தை வாழச்செய்கின்றவர்கள் என்று உழவுத்தொழிலையும், விவசாயத்துறையையும் அதனை மேற்கொள்பவர்களையும் ஒவ்வொரு குறளாக சிறப்பித்துக் கூறுகிறார். அதாவது உழுதுண்டு வாழ்பவர்களே சுதந்திரமாக வாழ்பவர்கள் மற்றவர்கள் எல்லாம் அடிமையாக வாழ்பவர்கள் என்பதை பின்வருமாறு கூறுகின்றார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"
(1033)

இவ்வாறு வேளாண்மைத் துறையை தலைமையாக வைத்துச் சிந்தனை செய்த பொருளாதார அறிஞர்களையும் வரலாற்றில் காணலாம். 18ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் தோன்றிய இயற்கைவாதிகள் விவசாயம் மட்டுமே ஆக்கமுள்ள தொழில் என்றும் ஏனையவை ஆக்கமற்றவை என்றும் பாகுபடுத்தி கூறினார்கள். உழவுத் தொழில் மட்டுமே உபரி விளைச்சலை தரக்கூடியதென்று உழவர்களைப் போற்றி வாதிட்டுள்ளனர். ஆனால் இவர்களின் கருத்துக்களுக்கும், வள்ளுவரின் கருத்துக்களுக்கும் இடையே அடிப்படையான வேறுபாடு உண்டு. அதாவது இவர்கள் பொருளியல் சம்பந்தமான கருத்துக்களை கூறிய பொருளாதார அறிஞர்கள். ஆனால் வள்ளுவரோ பொது நோக்கு சிந்தனையாளர். தமது அறநூலிலேயே அரிய பொருளியல் கருத்துக்களைக் கூறியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட வள்ளுவர் உழவு செய்யும் திறன்கள் பற்றியும், நிலத்தின் மண்ணை வேண்டியளவு உழுவதைப் பற்றியும், எருவிடுவதைப் பற்றியும், களை எடுப்பதைப் பற்றியும், நீர் பாச்சுவதைப் பற்றியும், பூச்சி புழு அண்டாதபடி பயிர் தழைத்து வளரும் வகையில் காப்பதைப் பற்றியும் தனது குறள்களிலே கூறுகிறார்.

அத்துடன் உழவுத் தொழிலின் முழுப்பயனையும் பெறவேண்டுமானால் உரியவரின் நேர்முக ஈடுபாடு வேண்டும் என வள்ளுவர் கூறுகின்றமை நிலவுடமைக்கருத்துக்களை வலியுறுத்துவதாக காணப்படுகிறது. இதிலிருந்து பெறப்படும் கருத்தை அடங்கிய குறளானது பின்வருமாறு அமையும்.

“செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
இல்லாளின் ஊடி விடும்”

(1039)

இதன்படி ஒரு உழவன் நாள்தோறும் நிலத்தைப்போய் பார்க்காமல் இருந்தால் அது அவன் மனைவியைப் போல பிணங்கி விடும் என கூறப்படுகிறது. இதிலிருந்து வள்ளுவர் கவனத்தில் கொள்கின்ற நிலவுடைமைக் கொள்கை என்பது தனியுடைமையைத்தான் என்பது நன்கு தெளிவாகின்றது. இது ஒரு இலக்கியச்சுவை கலந்த ஒரு நடையிலே தனியுடமையின் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார் வள்ளுவர்.

இவ்வாறாக அரிய பல பொருளாதாரக் கருத்துக்களை பொருளியல் அறிஞர்கள் யாவருக்கும் முன்பே கூறிச் சென்றுள்ளார் வள்ளுவர் என்பதை மேற்கூறப்பட்ட சில எடுத்துக் காட்டுகளின் மூலம் நாம் உணரக் கூடியதாக உள்ளது.

இதன்படி உயர்ந்த குடிமகனையும், இலட்சிய அரசையும், நிறைந்த வளம் கொண்ட சமுதாயத்தையும் கொண்டதாக வள்ளுவர் காணும் நாடு காணப்படுகின்றது. இதன்படி வள்ளுவர் காட்டும் பொருளாதார வாழ்வுக்கு ஓயாத உழைப்பும், தாழாண்மையும், வேளாண்மையும், அன்பும், அருளும், அமைதியும், குடிகொண்ட அரசியல் வாழ்வு என்பன வள்ளுவர் காட்டிய மேற்படி பொருளாதார வாழ்வின் உயர்வுக்கு இன்றியமையாதனவையாக காணப்படுகிறது எனலாம்.

**தங்கராஜா - திவ்வியராஜ்**
**பொருளியல் சிறப்பு**
**3ம் வருடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. அன்றூ
விரிவுரையாளர்
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# குழுச் செயற்பாடு

நிறுவன இலக்குகளை அடைவதில் குழுச் செயற்பாடு எப்போதும் வெற்றியளிக்கின்றதா?

## 1. குழுச் செயற்பாடு ஓர் அறிமுகம்:

முகாமைத்துவ கோட்பாடுகளில் குழுக்களை அமைத்து குழுமுறை ஈடுபாட்டின் தோற்றத்தால் சகல நிறுவன அங்கத்தவர்களினதும் தொழில் அறிவு ஆற்றல்களையும் ஒன்றிணைத்து நிறுவன இலக்குகளை புரிந்துணர்வுடன் நிர்ணயித்து மிகவுயர்ந்த ஊக்குவிப்பு சூழலில் நிறைவேற்ற முடியும் என உத்தேசிக்கப்படுகிறது. ஒரு நிறுவனம் குழுமுறை ஈடுபாட்டின் மூலம் பெறக்கூடிய ஏனைய நன்மைகளாவன: தொழில்நுட்ப மாற்றங்களுக்கு துரித உடன்பாடு, மிக இலகுவான தொழில்பிரிவுகள், ஆற்றல்மிகு தொழில் வழங்கல் (தொழிற்கையளிப்பு), வேலை ஒப்படைத்தலில் அதிக நெகிழ்ச்சி, இலக்குகளுக்கும் பெறுமானங்களுக்குமிடையிலான பொதுவான இணக்கப்பாடு பிரச்சினைகளுக்கான ஆக்கபூர்வமான அணுகுமுறை, பிரச்சினைகளை தீர்ப்பதில் புதிய முறையினை கையாளல், அதிகரித்த தொடர்பாடல், சிறந்த தீர்மானங்கள், பிரச்சினைகளுக்கான முன் எச்சரிக்கை என்பவையாகும். ஒரு நிறுவனம் குழுச் செயற்பாட்டால் அவ்வகையான பயன்களை பெறக்கூடியதாக இருந்த போதிலும் குழு ஈடுபாட்டில் இயல்பாகவுள்ள பின்னடைவுகள் முற்குறிப்பிட்ட நற்பயன்களை பின் இழுக்கச் செய்யும்.

உதாரணமாக குழுச்செயற்பாடு கூடிய நேரத்தை தரும் அதே வேளை வழமையான வேலைக்கு போதிய நேரத்தைக் கொடுக்காமல் இருக்கலாம். அல்லது சில வேளைகளில் குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஒழுங்கற்றதாகவும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கலாம்.

இதன் விளைவாக முகாமையானது நிறுவன இலக்குகளிலும் குழு கட்டமைத்தல் செய்முறையின் கலாசாரத்திலும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டியிருக்கிறது.

## 2. குழுக்களும் அதன் தொழிற்பாடுகளும்:

ஒரு நிறுவனத்தில் முறை சார்ந்த முறை, முறை சாரா முறை என இருவகையான குழுக்களை இலகுவில் அடையாளங் காண முடியும்.

முறை சார்ந்த குழுக்கள் என்பவை ஒரு நிறுவன முகாமையால் அதன் இலக்குகளை அடைவதற்கு சில குறிப்பிட்ட செயற்பாடுகளை அல்லது இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஏற்படுத்தப்படுகின்றன. சில நிறுவனங்கள் உயர்மட்ட கொள்கைகள் மூலம் குழுக்களை அமைத்து நிறுவன நலன்களை அடையாளங் கண்டு இலக்குகளை அமைக்கும் அதே வேளை ஏனையவை சிறு அபிவிருத்திக் குழுக்களுடன் ஆரம்பிக்கின்றன. ஒரு குழுவின் பொதுவான தன்மையானது தூண்டுதல் நிறுவனத்தின் பரந்த கொள்கை முயற்சியாக அல்லது ஒரு திணைக்கள செயற்பாட்டு வலுவாக ஏற்படமுடியும். ஒரு குழுவானது அது அடையக்கூடிய இலக்கையும் குறிப்பிட்ட நோக்கத்தையும் அடையாளங் கண்ட பின்பே ஏற்படுத்தப்பட வேண்டும். ஆய்வாளர்கள் நிறுவனத் தொழிற்பாடு, தனிப்பட்ட தொழிற்பாடு என இருவகையான தொழிற்பாடுகளை முறைசார் குழுக்களில் அடையாளங் கண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவன ரீதியான செயற்பாடுகள் அடிப்படையில் சிக்கலானதும் தனிநபரின் ஆற்றல்களுக்கு அப்பால் பட்டதுமாகும். இது ஒன்றிணைந்த தனித்துவனமான செயற்பாடுகளின் ஊடாக தீர்வுகளையும் புதிய எண்ணக் கருத்துக்களையும் உருவாக்குகிறது. தனிநபர் செயற்பாடுகள் தனிநபர் தேவைக்கான தொடர்பு, அபிவிருத்தி, தனிநபர் சுய கௌரவத்தை உறுதி செய்தலும் அதிகரித்தலும் அடையாள உணர்வு சமூகத் தன்மை என்பவற்றை திருப்திப்படுத்துவதுடன் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான பிரச்சினை தீர்வுக்கான வழிமுறைகளையும் வழங்குகின்றது.

## 3. குழுச்செயற்பாடுகளின் அடிப்படைகள்:

ஒரு குழு உருவாக்கலின் ஆரம்ப படிமுறை ஆராயப்பட வேண்டிய பிரச்சினை அல்லது விடயத்தின் அடிப்படையில் குழுவிற்கான இலக்கை வரையறுத்தலாகும். இச் செயன்முறையில் குழுவிற்கான கால எல்லையை வரையறுத்தல் இடைக்கால படிமுறைகள் மற்றும் முக்கியமான வினாக்கள் என்பவற்றிற்கு விடையளிக்கப்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் குழுவே தனது இலக்கை நிர்ணயித்து விடும். குழுவானது தனது சொந்த இலக்கை ஏற்படுத்தும் பொழுது ஆரம்ப இலக்கை வடிவமைக்கும் குழு அல்லது வழிநடத்தும் குழு நிர்ணயித்தால் எடுக்கும் காலத்தை விட அக்குழு தனது செயற்திட்டத்தை ஆரம்பிப்பதில் கூடிய காலம் எடுக்கும்.

குறித்த செயற்பாட்டை அல்லது குறித்த விடயங்களை கையாள்வதற்கு குழு உருவாக்கப்படும் பொழுது அதற்கு தெளிவான அதிகார எல்லை கொடுக்கப்பட வேண்டும். மேலும் அது சுயமாக இயங்கவேண்டிய எல்லைகள் தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## 4. குழுக்கள் எப்போதும் வெற்றியளிக்கின்றனவா?

உளகலாவிய ரீதியில் நிறுவனங்களின் சூழல் செயற்பாடு வெற்றியளித்த கதைகளை பல உதாரணங்கள் மூலம் குறிப்பிடலாம். இது நிறுவனங்களின் ஊழியர்கள் ஆக்கமும் அதிகாரமும் கொண்ட வேலைகளை கையாள்வதற்கு துணை நிற்கின்றது. இது நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கின்றது, ஊழியர்களை ஊக்கப்படுத்துகிறது, வேலையை பங்களிப்பதில் வினைத்திறனாக உள்ளது. ஈடுபாடுடையதாக இருத்தல், சிறந்த தீர்மானங்களை கொடுத்தல் பிரச்சினைக்கான அறிகுறிகளை அடையாளங் காண்கிறது. நாம் குழு மற்றும் குழுச்செயற்பாடுகள் பற்றி பல வெற்றிக் கதைகளை கண்ட போதிலும் அநேக தோல்விகள் பற்றியும் எழுதப்பட்டுள்ளது. இதில் அநேக விமர்சனங்கள் நியாயமானவையாகும். நீண்ட கால நோக்கற்ற தன்மை போதியளவு பணம், நேரம் என்பன புதியதாக அமையாத தன்மை, குறைவான பயிற்சி, குறைவான வழிநடத்தல் உட்கைபூசல்கள் என்பன பொதுவான குழுச்செயற்பாடு தோல்விக்கான காரணங்களாக உள்ளன.

## 5. ஓர் வெற்றிகரமான குழுவை உருவாக்க எது செல்வாக்கு செலுத்துகிறது:

ஓர் குழுவிடம் இருந்து உச்ச ஈடுபாட்டை பெறுவதற்கு உயர் முகாமை குழுவானது அதன் சொந்த நோக்கை விளங்கிக் கொள்வதற்கு போதியளவு வழிவகைகளை வழங்க வேண்டும். இது தனி ஒருவரின் வேலை அல்லது குழுவாக செயற்பட ஊழியர்களுக்கு தனித்துவமான முறையில் பங்களிக்க வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக ஒரு குழு அதன் தனித்தன்மையையும் உரிமையையும் பெறுகிறது. வெற்றிகரமான குழுக்கள் உயர் முகாமையினால் வழிநடத்தப்படுகின்றது. மேலும் செயற் பாட்டுடனான நோக்கத்துடனும் நிறுவன தந்திரோபாயங்கள் முன்னுரிமைகள் என்பவற்றிலும் இலக்குகள் வேரூன்றி இருக்கின்றன. குழுக்கள் நிறுவன கூட்டு நோக்கை அறிந்திருக்க வேண்டிய தேவையும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு அதனுடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு குழு பல தொழிற்பாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் போது பாரம்பரிய அறிக்கையிடல் முறையில் செயற்படமாட்டாது. எனவே உயர்முகாமையானது குழுக்களுக்குரிய வேலையில் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளுடன் தொடர்புடைய தகவல்களை பெறுகிறார்கள் என்பதனை உறுதி செய்ய வேண்டும். தனிநபர்களின் செயற்பாட்டு நோக்கு மற்றும் இலக்கு உருவாக்கல் என்பவற்றை விரிக்கும் குழு அட்டவணையானது நோக்க அடிப்படையிலான குழு உருவாக்கலுக்கான மிக திறனான ஓர் கருவியாகும்.

## 6. குழு தோல்விகளை தவிர்ப்பதற்கான நடைமுறைகள்:

மேற்கூறியது போன்று குழுக்களும், குழுச்செயற்பாடுகளும் நிறுவன நோக்கை அடைவதில் தவறுவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. ஒரு குழுவின் தோல்விக்கு யார் குற்றம் சாட்டப்பட வேண்டும். இது கையாளும் அல்லது தயார்படுத்தலில் உள்ள குறைபாடல் அல்லது முகாமையாளர்களின் குழு உருவாக்கல் செய்முறையிலுள்ள குறைபாடா அல்லது குழுக்களின் உட்கை முரண்பாடுகளா? அல்லது குழுக்களின் தானாக அமையப்பெற்ற இயற்கையாக உள்ள பிரச்சினைகளா? என்பவையாகும்.

இது ஒரு வேறுபட்ட அணுகுமுறைகளில் நோக்கப்பட முடியும். உயர்முகாமையானது அவர்களின் நிறுவனத்திற்கான குழுவின் கட்டமைப்புகளில் அக்கறை எடுக்க வேண்டிய அதே வேளை குழுக்கள் அவர்களுடைய பிரச்சினைகளுக்கும் குறைபாடுகளுக்கும் பொறுப்பெடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

குழு உருவாக்கலின் ஆரம்பத்தில் அவ்வாறான குழுக்களை உருவாக்குவதற்கான தனது சொந்த குறிக்கோள்களை முகாமைத்துவம் ஏற்படுத்தி அவற்றை குழு அங்கத்தவர்கள் விளங்கிக் கொள்ளச் செய்தல் வேண்டும். அதற்காக குறித்த குறிக்கோள்கள் அல்லது தந்திரோபாயங்கள் மற்றும் சிபார்சுகள் உட்பட குழு ஏற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும். முக்கிய தொழிற்பாடுகளை அவர்கள் விபரிக்கலாம். பின்னர் முகாமைத்துவமானது, நேர நிரலினைக்காட்டி எல்லைகள், வளங்கள் மற்றும் குழுக்களினால் எதிர் பார்க்கப்படும் விளைவுகளை அடையாளங் காணல் வேண்டும். குழுக்கட்டடைப்பானது வடிவமைக்கப்பட்டவுடன் முகாமைத்துவமானது குழுவினால் எதிர்பார்க்கப்படும் மற்றும் தொடர்பாடல் அறிக்கையிடல் தடவையின் வகையினை அடையாளங் காணல் வேண்டும். ஒரு குழுவிலுள்ள அங்கத்தவர்களுக்கு வெவ்வேறு விதமான வேலைப் பணிகள் காணப்படலாம். ஆனால் முரண்பாடுகளை தவிர்த்தல் மற்றும் துரித வேலை தரம் நியமம் என்பவற்றை பராமரித்தல் போன்றன முக்கியமான தேவைகளாகும்.

எல்லோருக்கும் ஒரே வகையான செயற்பாட்டு நியமனங்களை பிரயோகித்தால் சிறந்ததாகும். அது குழு அங்கத்தவர்களுக்கிடையே பரஸ்பர மரியாதையை ஏற்படுத்தும். குழு தோல்வியை தவிர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட இன்னுமொரு அணுகுமுறையானது எதிர்கால தோல்விகளுக்கான திட்டமிடலை மேற்கொள்வதாகும். அவ்வாறான நிலைமையில் ஒரு குழுவானது நிகழத்தக்க திட்டத்தை விருத்தி செய்யலாம்.

முதல் முயற்சியில் குழுக்களானது பாரிய அளவு திட்டங்களை நோக்கங்களை தவிர்க்குமாயின் அவை பாரிய தோல்விகளின் விளைவுகளை குறைக்க முடியும். மாறாக ஒரே தடவையில் பல திட்டங்களின் வேலைகள் சில பிரச்சினைகளை கொண்டு வரும்.

குழுக்கள் உருவாக்கப்படும்போது சில வேலை விதிகள் மாறலாம். அத்துடன் சில பேர் அம்மாற்றத்தினை எதிர்க்கலாம். ஆனால் அம்மாற்றங்களை சிறிய பகுதிகளாக்கி அவற்றை படிப்படியாக அறிமுகப்படுத்த இப்பிரச்சினையை தீர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களில் சிறந்த தொழிலாளர்கள் பிழையான தொழில்களில் இருக்கலாம். இது அக்குழுவின் செயற்பாட்டினைப் பாதிக்கலாம். அவ்வாறான விடயங்களை வேறாகவும் சிறப்பாகவும் கையாளப்பட வேண்டும். அவ்வகையான தொழிலாளர்களுக்கு பயனுள்ளதும் சவால் நிறைந்ததுமான தொழில்கள் அழிக்கப்படலாம். அவர்கள் விசேட செயற்திட்டங்களில் ஈடுபடுத்தப்படலாம். அல்லது குழுத்தலைவர்களாக நியமிக்கப்படலாம்.

ஒரு குழுவில் மிகைநிரப்புடைய அல்லது கீழுழைப்புடைய தொழிலாளர்கள் காணப்படலாம். கீழுழைப்புடைய ஊழியர்கள் அவர்களது அறிவுசார் தகுதிக்கு கீழே வேலைசெய்வார்கள். அல்லது அத்தொழிலுக்காக பயிற்றப்படுவர். அக்குழுக்கள் அவர்களிது வேலையினை குழுக்களில் பொறுப்பு வாய்ந்த பாத்திரங்களை அவர்களுக்கு கையளிப்பதன் மூலம் விரிவாக்கலாம். அல்லது வளப்படுத்தலாம். மிகை உழைப்பினை கொண்ட ஊழியர்கள் குறைவான திறன்கள் பயிற்சியின்மை காரணமாக தாங்கள் கொண்டிருக்கும் தொழிலுக்கு உண்மையாக தகுதியற்றவர்களாக காணப்படுவர். தொழிலை நிறைவேற்றுவதற்கு அவ்வாறான தொழிலாளர்கள் குழுச் சகாக்களினால் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம். இல்லையேல் குழுவினை உருவாக்குவோர் அவர்கள் கையாளக்கூடிய வேலையை காண வேண்டும். அல்லது அவற்றை குழுவிடம் மீளளித்தல் வேண்டும். அடுத்த தெரிவு அவ் ஊழியர்களை வேலை நீக்கம் செய்தலாகும்.

குழு அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் இன்னுமொரு பிரச்சினை அவர்கள் சிறந்த தனிப்பட்ட திறன்களுடன் வேலைக்கு வந்தாலும் குழு அங்கத்தவர்களுடனும் அதன் சூழலுடனும் ஒத்துழைப்பது அவர்களுக்கு கடினமாக இருப்பதாகும். குழுக்கள் உயர்ந்த வெளியீட்டுக்காக உருவாக்கப்பட்டாலும் உற்பத்தித் திறன் மற்றும் தரம் என்பவற்றின் உத்தம மட்டமானது குழு அங்கத்தவர்களின் பிரச்சினை தீர்ப்பதில் பங்குபற்றல் ஊடாகவே பராமரிக்கப்பட முடியும். அதற்காக உயர்மட்ட முகாமைத்துவமானது தொடர்பாடல் வேலைமுறைகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கு பொறுப்பாக இருப்பதுடன் அங்கத்தவர்களிடையே குழு ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல் வேண்டும்.

## முடிவுரை:

மேலே நோக்கப்பட்ட ஆய்வானது ஒரு ஸ்தாபனத்தின் குழுச் செயற்பாடுகளின் மூலமும் உச்ச மட்ட பயனை பெறுவதற்கு தாபன இலக்குடன் பொருந்தக் கூடிய குழுக்களை அமைப்பதுடன் அது தொழிலாளர்களை ஊக்குவிக்கவும் வேண்டும் என கொள்ளப்படுகின்றது. இங்கு மேல்மட்ட முகாமையானது (Top Management) குழுக்களின் தவறுகளில் சிக்கி அதன் தோல்விகளுக்கு காரணமாக இருக்காமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். இதனை தவிர்ப்பதற்கு முகாமையாளர்கள் குறுக்குச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் (Cross Tunctional) இதன்மூலம் குழுவின் நோக்குகள் வரையறுத்து குழுச்சூழலில் செயற்பட குழு அங்கத்தவர்களுக்கு பயிற்சி அளித்தல், குழு நிறைவேற்று மீளாய்வு செயற்திட்டத்தினை ஏற்படுத்துதல், தொழிலாளர்களுக்கிடையிலான தொடர்பாடல் தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்வதுடன் நிதி அடிப்படையில் குழுக்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கலாம்.

இன் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்திலும் குழு அங்கத்தவர்களுக்கு சிறப்பான வேலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் தாபனத்தின் இலக்கினை இலகுவாகவும் சிறப்பாகவும் அடைய முடியும் என்பது வெளிப்படையே. இதனை Wacoal Corporation of Japan என்னும் நிறுவனத்தின் தலைவரான Koichi Tuskamoto என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

- *'One Step by 100 Persons is better than 100 steps by one person"*

"ஒருவரால் நூறு அடிஎடுத்து வைப்பதனை விட நூறுபேரால் ஒரு அடி எடுத்து வைப்பது மேல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## References:


1. Stoner, James A.F. Freeman, Edward R. Gilbert Jr. Deniel R, **Management** (6th ed, Prentice Hell Inc., 1995) p.p. 497 - 518

2. Deborah Harrington - Mackin, **Management Essentials** (1st ed, The Asian Source Media Group, 1994) p.p. 163 - 217

3. Lawrence Holpp, Robert Phillips 'Its Own Worst Enemy", **World Executive Digest** (The Asian Source of Media Group, June 1996) p.p. 54 - 55

4. Robert Kreitner, Angles Kinicki, **Organizational Behaviour** (Irwin Inc Homewood, I llinois, 1989)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PERSONALITY AND SPEAKING

**It** is said that "A Man who is handsome and smart, nice in everyway and with a smiling face, is always happy". These are not personality but appearances of the person. Personality on the other hand is the manner with which an individual reacts and interacts with others.

This concept of personality is determined by hereditary, environmental and social interactions.Personality and leadership are inter-related. A person who has a good personality will be a good leader, a good manager, a good administrator and a winner in life.

An extremely important factor influencing personality is speaking. Speaking is an art in our personal lives and in an organisation.It is a fact that we do not need a language to think or conceive an idea. But when it comes to a matter of expressing or exchanging views, we do need a language.

Speaking is a vehicle of expressing one's thoughts. The purpose of speech is to communicate or exchange ideas or notions from one to another. Without this important function, ideas remain within the originator. Speech plays a very important role in human communication. It is the tool to build relationship. It is a form of getting to know the various people who come into our lives, in sharing their feelings and emotions. It plays a vital role in business and trade.

That the tone of speech in man is a very vital facator cannot be over looked. Tone is the sound of the voiee. Tone expresses the feeling, power on authority of a speaker on a particular subject.

Tone of voice plays a very important part in the lite of a manager. When he/she expresses his/her dissatisfaction in a harsh tone to an employee, he is made either to quit the job or to retort. As against this a soft tone is a pleasant form that is likely to produce better results and encourage co-operation.

Tone of voice reflects interest, enthusiasm, love for a subject, lack of concern, fear, anger,dislike and ignorance.

The other important factor is accent. Accent will expose one's country of origin, community, cultural background and tradition. Accent is the way your place stress on a word. This too has a great impact on speaking.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sense is more than everything else in speaking.

The subject taken up by the speaker should be substantial, impressive, reasonable and logical. Failure to contain these aspects will result in creating a poor image on the speaker.

Rhetoric attracts everyone. A good cup of tea served in a presentable vessel tastes better than the same tea served in an unpresentable cup. So is true of speaking. Influencing the listener mostly depends on the rhetoric ability of a person.

Business, in its entity, demands personality and effective speaking to prosper.

The selection of a person for a job or for a particular purpose depends mostly on his personality. The impression made on the interviewer by the interviewee will go a very long way towards his selection. The first impression one gives to another is long lasting.

Here speech plays a very important part on both the interviewee and the interviewer. The questioning ability of the interviewer should be such that it brings forth answers as would be required by him to ascertain whether the interviewee is fit for the job. Here again, tone and accent play a vital role.

In every aspect of life, particularly in business organisations, as far as interaction among human beings is concerned, speech becomes indispensable.

It is wise to remember the 5 golden "Cs" in speaking.

## 1) Courtesy:

Courtesy in speech is respect and consideration for others. The way you address a person or a gathering attracts their attention towards you. To help the stranger, to share the joy with others, to give confort and consideration to others courtesy should be mixed with speech.

Congratulating a person in an effective and pleasant tone is an example of courtesy.

## 2) Correctness:

Correctness is accuracy. One is bound to make a statement without error in structure, grammar, effective vocabulary and the application of the appropriate words are other important function of speech. It should not be forgotten that the idea in the mind of the speaker should be penetratingly powerful so as to keep the listener glued to you.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is also important that the speaker should not be boring. To get over this, a mixture of jest with facts becomes important.

When you are not certain about a particular matter in the course of your speech, it is prudent for you to say. "I think so." Or " I believe so". This will infuse confidence on you.

## 3) Clearness:

What you deliver to the listener has to be categorical in an absolutely clear voice. Vocabulary, grammar and the correct usage of the words are vital factors. When you are too verbose, clarity is bound to loose tract.

## 4) Conciseness:

The general rule in writing and speaking is to be concise. The speaker must confine himself to a particular point at one time and insist upon that point until he completes what he wants to say. Thereafter, he must go on to the other point and insist on that particular point till the completion of his statement. "This before you speak" is an age old maxim. This golden rule should not be forgotten by the speaker.

## 5) Completeness:

A statement has to be complete. An incomplete statement leaves the listener to form impressions of his own, thereby, causing the speaker to be defeated in his goal. Just as everything has been started well, everything has to be completed well. The listener will then besatisfied.

Speech, above all, is a gift of the Lord. To this, man has added a wise saying:

If you in wisdom way should walk,
Five things remember with care,
Of whom you talk,
To whom you talk,
What , and when and where.

By: Miss Bharathy Sandrasegaram

3rd yr. Com. & Mgt,

E.U.S.L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கமும் அரசிறையின் தாக்கமும்

## அறிமுகம் :

பல்வேறு நாடுகளினதும் அரசாங்கங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடுகின்ற தன்மை அதிகரித்து வருவதனைக் காணலாம். கலப்புப் பொருளாதாரம் ஒன்றினை பின்பற்றுகின்ற நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு மட்டங்களிலும் அரசின் தலையீடு அவசியம் என உணரப்பட்டுள்ளது. இத்தகைய தலையீடுகள் அவ்வரசுகளின் அரசிறைக் கொள்கை ஒன்றின் ஊடாகவே நடைபெறுகின்றன. கலப்புப் பொருளாதார அமைப்பினைக் கொண்ட நாடுகள் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி முறையான சாதன ஒழுங்குபடுத்தல், பொருளாதார உறுதி, வருமானப்பங்கீடு குறித்து அரச தலையீட்டினை மேற்கொள்கின்றன. இக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக குறிப்பிட்ட நாடுகளின் அரசுகள் வருமானம் ஒன்றினைத் திரட்டிக் கொள்வது வேண்டப்படுவதொன்றாகும். அவ்வாறு அரசுகள் திரட்டிக்கொள்ளுகின்ற வருமானமானது நாட்டின் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதும் கவனத்திற் கொள்ள வேண்டியதொரு விடயமாகும். அரசு வருமானம் என்றால் என்ன? எத்தகைய வழிமுறைகளில் வருமானத் திரட்டல் நடைபெறுகிறது. அத்தகைய வருமானத் திரட்டலானது ஏனைய பொருளாதார அம்சங்களில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதனையே இக்கட்டுரை சுருக்கமாக ஆய்வு செய்ய முற்படுகின்றது.

## அரசிறை (அரச வருமானங்கள்) :

ஒரு நாட்டினது குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கான செலவுகளையும், அத்தகைய செலவுகளை நிதிப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் கண்டறியும் நிதி தொடர்பான திட்டமே அந் நாட்டினது வரவு செலவுத் திட்டம். (Budget) எனப்படுகிறது. வரவு செலவுத் திட்டத்தினூடாக ஏற்படுகின்ற செலவினங்களை நிதிப்படுத்துவதற்காக திரட்டிக் கொள்ளப்படும் வருமானங்கள் "அரசிறை" (Government Revence) ஆகும். அரசாங்கத்திற்கு இரண்டு பிரதான மூலங்களான வரிமூல வருமானங்கள், வரியல்லா மூல வருமானங்கள் என்பவற்றிலிருந்து அரச வருமானம் கிடைக்கின்றது. எனினும் சர்வதேச நாணய நிதியத்தினது வரவு செலவு திட்ட புள்ளிவிபர நடைமுறைகளுக்கு ஏற்ப வெளிநாட்டு நன்கொடைகளையும் அரசிறையின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ள முடியும் எனச் சொல்லப்படுகிறது. பொதுவாக நன்கொடைகள் வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறையிலான நிதிப்படுத்தும் மூலமாக கொள்ளப்பட்ட போதிலும், மீளச் செலுத்தப்படாத நன்கொடைகள் அரச வருமானங்களுடன் இணைத்துக் காட்டப்படுகின்றன.

அரச வருமானத்திற்கும், அரச வரவுகளுக்கும் இடையே வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. குறிப்பிட்ட காலப்பரப்பில் அரசு ஒன்று ஒழுங்காகத் திரட்டக் கூடியதும் மீளச் செலத்தப்படாத தொகைகளுமே அரச வருமானங்களாகும். மாறாக வரவு செவுத்திட்டம் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்யும் தொகையே அரச வரவுகள் எனப்படும் அதாவது அரசின் வருமானங்களுடன் நிதியீட்டத்தொகையினை இணைத்துப் பெறப்படுவதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச வரவுகள் ஆகும். சமநிலை வரவு செலவுத் திட்டம் காணப்படும் நிலையில் மாத்திரமே அரச வருமானங்களுக்குச் சமமாக அரச வரவுகள் அமைந்திருக்கும்.

அரசிறையில் மிகப் பிரதான பங்கினைப் பெறுபவை வரிமூல வருமானங்கள். (Tax Revence) வரியல்லா மூல வருமானங்கள் (Non. Tax Revence) என்பவையாகும். எனினும் ஒப்பிடத்தக்க வகையில் நாடுகளின் அரசிறைப் போக்கில் வரிமூல வருமானங்களின் பங்களிப்பே கணிசமானதாகும். இலங்கையினது அரசிறை அமைப்பில் 89 சதவீதமான பங்கினை வரிமூல வருமானங்கள் பிரதிபலிக்கின்றன. 11% சத வீதத்தினை வரியல்லா வருமானங்கள் பிரதிபலிக்கின்றன. எல்லா நாடுகளினதும் அரசிறைப் போக்கில் வரிமூல வருமானங்களே பிரதான வருமான மூலமாகவும் கொள்ளப்படுகிறது.

வரிமூல வருமானங்கள் நேர்வரிகள், (Direct Tax) நேரில் வரிகள் (Indirect Tax) என பிரதானமான இரண்டு வகைக்குட்படுத்தப்படுகின்றன. அரசாங்கம் விதிக்கும் வரியொன்றின் சுமையினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இன்னொருவர் மீது திணிக்கவோ மாற்றி விடவோ இயலாத வரிகள் நேர்வரிகள் எனப்படுகின்றன. வருமான வரி, வியாபாரப் புரழ்வு வரி, உரிமைக் கட்டணங்கள் நேர்வரிகளாகக் கருதப்படும். மாறாக அரசு ஒன்று வதிக்கும் வரியின் சுமையினை முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ இன்னுமொரு நபர் மீது திணித்துவிட முடியுமெனின் அத்தகைய வரிகள் மறைமுக வரிகளாக கருதப்படும். குறிப்பாக பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்படும் வரிகள், மதுவரி, முத்திரைக் கட்டணங்கள் ஆகியவை மறைமுகவரிகளாகும். நேர்வரியினைப் பொறுத்து வரி செலுத்துவோருக்கும், வரி வசூலிப்போருக்கும் இடையே நேரடித் தொடர்பு காணப்படுகிறது.

வரியல்லா வருமானங்கள் அரசிறை அமைப்பில் மிகக்குறைவான பங்களிப்பினையே பிரதிபலிக்கின்றன. சொத்துக்களில் இருந்தான வருமானங்கள் இலாபங்கள், ஏனைய வரியல்லா வருமானங்கள் இதனுள்ளடக்கப்படுகின்றன. பொதுவாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அம்சங்கள், இலங்கையின் அரசிறையில் அடங்குகின்ற பிரிவுகளாகக் காட்டப்படுகிறது.

## A. வரி அரசிறை

1. வருமான வரிகள்
2. சொத்துக்கள் மீதான வரி
3. மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி
4. உள்நாட்டுப் பெறுகைகள் மீதான வரி
5. பொதுவிற்பனை, மொத்த விற்பனை மீதான வரி
6. பாதுகாப்பு வரி
7. உரிமைக் கட்டணங்கள்
8. பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரி.

## B. வரி அல்லாத அரசிறை:

1. சொத்து வருமானங்கள்
    1. மத்தியவங்கி இலாபங்கள்
    2. வட்டி வருவாய்கள்
    3. வர்த்தக முயற்சிகளின் மிகை
    4. கட்டணங்கள் விதிப்புக் கட்டணங்கள்
    5. ஏனைய வரியல்லா வருமானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாட்டினதும் அரசுகள் ஒவ்வொன்றும், அரசிறைக் குறிக்கோள்களான **(a)** வளங்களை ஒன்று திரட்டுதல், **(b)** நாட்டினது வேலையளவினையும் பொருளாதார வளர்ச்சியினையும் துரிதப்படுத்துதல், **(c)** பொருளாதார உறுதிப்பாடு, **(d)** வருமான சமபங்கீடு என்பவற்றினை அடைந்து கொள்ள எத்தனிக்கும் போது அவற்றுக்கான செலவீடுகளை ஈடு செய்யும் விதத்தில் வருமானம் ஒன்றினை திரட்டிக் கொள்ள முற்படுகின்றன. குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்து பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியினை போதிய முதலீட்டினை எதிர்பார்க்கும் நிலையில் குறைவிருத்தி நாடுகளின் பண்பாகக் காணப்படும் குறைந்த சேமிப்பு அளவானது முதலீட்டு அதிகரிப்புக்கு தடையாக அமைகின்றது. இதன் காரணமாகவே குறைவிருத்தி நாடுகள் பற்றாக்குறையான வரவு செலவுத்திட்டத்தினை (Dificit Budget) ஒன்றினை முன்மொழிந்து பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்த முனைகின்றன. குறைவிருத்தி நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் குறை நிலையில் காணப்படுவதனால் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் வகையில் கூடிய செலவினை அந்நாடுகளின் அரசுகள் மேற்கொள்கின்றன. இத்தகைய பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தில் ஏற்படும் பாதகத்தினை குறைக்கும் முகமாக அரசிறைத் திரட்டலும், நிதிப்படுத்தும். நாட்டில் பணவீக்க நிலமைகளை ஏற்படுத்துகின்றது.

பணவீக்கம் (Infilation) என்பது பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு காரணமாக விலை மட்டத்தில் ஏற்பட்டுச் செல்லும் தொடர்ச்சியானதொரு அதிகரிப்பு நிலையினை குறித்து நிற்கின்றது. அதாவது குறிப்பிட்டதொரு காலப்பகுதியினுள் பொது விலை மட்டம் தொடர்ச்சியாக அதிகரிப்பதையும், அதே வேளை பணத்தினது கொள்வனவு சக்தி குறைந்து வருவதனையும் குறிப்பிடுகிறது. பணவீக்கம் பற்றி பல்வேறு பொருளியலாளர்கள் வேறுபட்ட விளக்கங்களை முன்வைத்திருந்த போதும், பணவீக்கம் ஏற்படுகின்ற பின்னணியினைக் கொண்டு பணவீக்கத்தினை கேள்வித் தூண்டுதல் பணவீக்கம், செலவுத் தூண்டுதல் பணவீக்கம், அமைப்பு ரீதியான பணவீக்கம், துறைசார் பணவீக்கம், கலப்பு பணவீக்கம் என வரையறுக்கலாம்.

அரசுகள் தமது செலவினங்களை ஈடு செய்வதற்கான வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் பிரதான மூலமாக வரி விதிப்பினைக் கொண்டுள்ளன. வரி மூலம் வருமானம் பெறப்படுகின்ற போது ஒரு நிலையில் அரசிறையினைப் பெற்றுக் கொண்ட போதும் இன்னொரு நிலையில் சாதன ஒழுங்குபடுத்தலையும் மேற் கொள் உதவுகின்றது. எனினும் வரிமூலம் பெறப்படுகின்ற வருமானத்தினை அரசு செலவிடும்போது சாதன ஒழுங்குபடுத்தல் திசை திருப்பப்படுகிறது. சாதன ஒழுங்குபடுத்தலுக்காக அரசு மேற்கொள்ளும் செலவினமானது சாதன உடமையாளர்களுக்கு (வீட்டுத் துறை) காரணி வருமானமாகச் சென்றடையும். இச் செயற்பாடு அவர்களின் செலவிடத்தக்க வருமானத்தினை அதிகரிக்கச் செய்து மொத்தக் கேள்வியினை (Aggricate Demend) உயர்த்துகிறது. மொத்த நிரம்பலில் (Aggricate Supply) மாற்றம் ஏற்படாத நிலையில் மொத்தக் கேள்வி அதிகரிப்பானது விலை மட்டத்தினை உயர்த்துகிறது. இதனால் பொருளாதாரமானது கேள்வித் தூண்டுதல் மூலமான பணவீக்கத்தினை அனுபவிக்கலாம். அத்தோடு மிகைக் கேள்வி காரணமாக விலைமட்டம் அதிகரிக்கின்ற நிலையில் மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படும் நிலை காரணமாக தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத்தரத்தினை பேணும் நோக்கில் கூலி அதிகரிப்பினை வேண்டி நிற்பர். அந்நிலையில் கூலி அதிகரிப்பு ஏற்படுகிறது எனக் கொண்டால் அது செலவு தூண்டுதல் பணவீக்க நிலமைக்கு வழி விடும் எனலாம். இன்னுமொரு நிலையில் இத்தகைய பணவீக்க நிலமைகளின் உருவாக்கம், குறைவிருத்தி நாடுகளைப்பொறுத்து வேலையின்மையினையும், வருமான சமமின்மையினையும் ஏற்படுத்துகின்றதொரு காரணியாகவும் அமையலாம்.

சாதன ஒழுங்குபடுத்தல் என்பதற்கு மாறாக, வருமானம் திரட்டுதல் என்ற நோக்கத்தில் வரி விதித்தலானதும் பொருளாதார நிலமைகளுக்கு பாதகமானதே. வருமானம் திரட்டுதல் நோக்குடன் நேரில் வரிகள், பொருட்கள் சேவைகள் மீதான மேலதிக கட்டணங்கள் பணவீக்க நிலமைகளை ஏற்படுத்தும் நேரில் வரிகள் விதிக்கப்படுகின்ற சூழ்நிலையில் அல்லது கட்டணங்கள் அறவிடப்படுகின்றபோது உற்பத்தியாளர்கள் உயர் சமநிலையை அனுபவிக்கின்றனர். அத்தகைய உயர் வரிச்சுமையினை உற்பத்தியாளர்கள் பொருட்களின் சேவைகளின் விலையினை உயர்த்துவதன் மூலமாக முழுமையாகவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பகுதியாகவோ நுகர்வோர் மீது செலுத்தி விடுகின்றனர். எனவே நேரில் வரிகள், அல்லது பொருட்கள் சேவைகள் மீதான மேலதிக கட்டணங்கள் அறவிடப்படுகின்ற நிலமையானது பணவீக்க நிலமைகளை ஏற்படுத்துகிறது.

மேலும், நேர்வரிகள் அறவிடப்படுகின்ற போதும் உற்பத்தியாளர்களின் வருமானத்தின் மீது வரி அறவிடப்படுகின்றது. உற்பத்தியாளர்கள் மீது இத்தகைய வரி அறவிடுதல் சேமிப்பு முதலீடு என்பவற்றின் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. வருமான வரி விதிப்பானது செலவிடத்தக்க வருமானத்தினை வீழ்ச்சியடையச் செய்து சேமிப்பு அளவினையும் குறைக்கும். இந்நிலையில் நாட்டில் தனியார் முதலீட்டின் அளவு குறைக்கப்படுகின்றது. தனியார் முதலீடுகள் குறைவடைகின்ற நிலையில் முதலீட்டு இடைவெளியினை ஈடுசெய்யும் வகையில் பொது முதலீடு அதிகரிக்கப்படுதல் வேண்டும். பொது முதலீட்டினை அரசு மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதால் அரச செலவினமானது அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறு பொது முதலீடு கருதி அரச செலவினம் அதிகரிப்பானது செலவுத் தூண்டுதல் மூலமான பணவீக்க நிலமைகளுக்கு வழி அமைத்துக் கொடுக்கிறது.

நாட்டினது அரசிறையினைத் திரட்டிக் கொள்ளும் நோக்குடனும், கலப்புக் கொள்கை என்ற அடிப்படையிலும் ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. ஏற்றுமதித் தீர்வை என்பது உள்நாட்டுப் பொருட்கள் சேவைகளை இன்னுமொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் போது அறவிடப்படும் வரியாகும். ஏற்றுமதித் தீர்வை விதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் உள்நாட்டுப் பொருட்களுக்கான ஏற்றுமதி விலை அதிகரிக்கப்படுகின்றது. இச் செயற்பாடு நாட்டின் ஏற்றுமதி வருமானத்தினை வீழ்ச்சியடையச் செய்யும். இதே போல் இறக்குமதித் தீர்வை என்பது குறிப்பிட்டதொரு நாடு ஏனைய நாடுகளில் இருந்து பொருட்கள் சேவைகளை இறக்குமதி செய்யும் போது அறவிடப்படும் வரியினைக் கருதுகின்றது. இறக்குமதித் தீர்வை அறவிடப்படும் நிலையில் அது இறக்குமதிச் செலவினை அதிகரிக்கச் செய்கிறது. குறைவிருத்தி நாடுகள் இவ்வாறான தங்களுக்கு உட்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிக்கப்படுவது சென்மதி நிலுவை பாதகத் தன்மைக்கு ஒரு காப்புக் கொள்கையாக கொள்ளப்படலாம். அதாவது இறக்குமதிப் பண்டங்களின் விலை அதிகரிக்குமிடத்து உள்நாட்டில் அப்பொருட்களுக்கான கேள்வி குறைக்கப்படுகின்றது என்றும் இச் செயற்பாடு உள்நாட்டுப் பொருட்களின் கேள்வியினைத் தூண்டி உற்பத்தி அளவினை அதிகரிக்கச் செய்கிறது. இதன் பொருளாதார வளர்ச்சியினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கருதப்படுகிறது. எனினும் இறக்குமதி தீர்வை அதிகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இறக்குமதிச் செலவும் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளும் உள்ளன. பொதுவாக குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்து இறக்குமதிப் பொருட்கள் கூடியளவிற்கு முதலீட்டுப் பொருட்களாகவும், மூலப்பொருட்களாகவுமே காணப்படுகின்றது. இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்படுகின்ற நிலையில் முதலீட்டுப் பொருட்களினதும், மூலப்பொருட்களினதும் விலை அதிகரிப்பானது உள்நாட்டில் உற்பத்திச் செலவின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தி அதனை அதிகரிக்கச் செய்கிறது. இதன் காரணமாக உற்பத்தியளவு குறைவடைகின்றமை பொருளாதார வளர்ச்சி என்ற நோக்கில் பாதகமாக அமையும் எனலாம். அதற்கும் மேலாக, உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்பு உள்நாட்டுப் பொருட்கள் சேவைகளின் விலையினை அதிகரிக்கச் செய்து பணவீக்க நிலமைகளுக்கு வழியமைத்துக் கொடுக்கிறது. மேலும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்றுமதியளவு குறைவடைந்து செல்லும் நிலமையும், இறக்குமதி அளவு அதிகரிக்கின்ற நிலமையும் நீக்குவதற்காக அரசுகள் இறக்குமதி அமைப்பினை மாற்றுவதற்கான நடவடிக்கை என்ற வகையில் இறக்குமதித் தீர்வையினை அதிகரிக்கலாம். இறக்குமதியளவினை குறைக்கும் நோக்கமாக அதிகரிக்கப்படும் இறக்குமதித்தீர்வை மேற்கூறிய வகையான பாதகத் தன்மைக்கு காரணமாகிறது.

குறைவிருத்தி நாடுகளின் வருமான சமமின்மை என்பது பொதுவானதொரு பிரச்சனையாகும். வருமான சமமின்மை என்பது நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பகுதி குறிப்பிட்ட சிறு தொகையினரைச் சென்றடைவதனைக் குறிக்கிறது. அரசிறை ஒன்றினைத் திரட்டிக் கொள்ளும் நோக்குடனும், வருமான சம பங்கீட்டினை மேற் கொள்ளும் நோக்குடனும் வருமானம் மீதான வரிவிதிப்பு இடம் பெறுகிறது. இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவிதிப்பு சேமிப்பு நாட்டத்தினை குறைப்பதுடன், முதலீட்டு செயற்பாட்டினையும் குறைக்கிறது. பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி நோக்கில் இவ்வாறான வரி விதிப்பு விரும்பப்படுவதில்லை. குறைவிருத்தி நாடுகளில் இத்தகைய வரிகள் வதிக்கப்படுகின்ற நிலையில் கூடிய வருமானம் பெறுவோர் இவ்வரி செலுத்துதலில் இருந்து தப்பித்துக் கொள்ளுகின்றனர். எனவே வருமான சமபங்கீட்டினையும் ஏ படுத்துவது கடின மானதொன்றாகவே காணப்படுகிறது எனலாம்.

## முடிவுரை :

எவ்வாறு எனினும் அரசிறை நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்குடன் வருமானங்கள் அரசு பெற்றுக் கொண்ட போதிலும் அது பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததொன்றாகவே காணப்படுகிறது. எனினும் இத்தகைய விளைவுகளை குறைக்கும் வகையில் இன்று அரசுகள் பல்வேறு மாற்று வழிக்களைக் கையாண்டு வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். உசிதமான முறையில் வரிக்கொள்கை ஒன்றினைக் கடைப்பிடித்தலோ, வரிமுறைகள் சீர்படுத்துவதுடனோ, வரிச்சலுகைகள் வழங்குவதன் மூலமாகவோ அரசிறைக் குறிக்கோளை அரசுகள் அடைய எத்தனிக்கின்றன.

**சரவணமுத்து ஜெயராஜ்**
**பொருளியல் துறை**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலத்திரனியல் காசுக் கொடுப்பனவு முறை:- (E - CASH)

**இலத்திரனியல் காசுக் கொடுப்பனவு முறை உலகச் சந்தையை ஆக்கிரமித்து கொண்டிருக்கிறது.**

ஒவ்வொரு நிமிடத்திலும் ஒவ்வொரு நாளும் பல மில்லியன் பணக் கொடுப்பனவுகள் உலகெங்கிலும் நிகழ்கின்றன. இவ் உலகளாவிய கொடுப்பனவுச் சந்தையினுள்

(1) காசுக் கொடுப்பனவுகள் 90 %

(2) கடன் அட்டை உட்பட 10 % ஏனைய கொடுப்பனவுமுறைகளும் உள்ளன என அனுமானிக்கப்பட்டுள்ளது.

காசுக் கொடுப்பனவுமுறை உலகளாவிய கொடுப்பனவுச் சந்தையில் பெரும்பங்கினை வகிக்கின்றது. ஏனெனில் இது;

(1) உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுவது

(11) பெறுமானத்தை உடனடியாகவும் பதிவற்ற முறையிலும் இடமாற்றுவதுமாகவுள்ள ஒரேயொரு சாதனமாகவுள்ளது.

### 1) உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படல்:

நுகர்வோருக்கு காசானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவுள்ளது. ஏனெனில் அது இலங்கையில் ஒரு பத்திரிகை வாங்குவதற்கும் சரி சிங்கப்பூரில் சப்பாத்து வாங்குவதற்கும் சரி அல்லது இலண்டனின் கார் வாடகை செலுத்துவதற்கும் சரி அனைத்து இடங்களிலும் வரவேற்கப்படுவதாகவுள்ளது. ஆகவே காசானது சமமாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்.

### 11) உடனடியானதும் பதிவு அற்ற முறையிலும் பெறுமானத்தை இடமாற்றும் தன்மை:

நுகர்வோருக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் உடனடியாக பணத்தை பௌதீக மாற்றம் செய்வதற்கு காசு மாத்திரமே ஒரு ஊடகமாகவுள்ளது. ஏனைய கொடுப்பனவு முறைகளுக்கு சில தீர்ப்பனவு முறைகள் அவசியமாகவுள்ளன. அவ்வாறான முறைகள் தனிப்பட்டவர்களுக்கு சாத்தியமல்லாதவையாகவும் சிறிய சில்லறை வியாபாரிகளுக்கு சிற்றளவு பெறுமான கொடுப்பனவுகளுக்கு நடைமுறைச் சாத்தியமற்றவையாகவும் விலையுயர்ந்த சிக்கனமற்ற முறையாகவும் காணப்படுகின்றது.

### இலத்திரனியல் காசு:-

நுகர்வோர் சார்பான விடயங்கள் தொடர்பாக உலக தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுக் கொடுப்பனவு முறையினையும மாற்ற வேண்டிய தேவை ஏற்படுகின்றது. கடன் அட்டைகள், வரவு அட்டைகள் மற்றும் ஸ்மாட் அட்டைகள் போன்ற காகிதமற்ற காசுகள் இலத்திரனியல் காசுக் கொடுப்பனவினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

இலத்திரனியல் காசுவினை கண்ணால் பார்க்கவோ தொட்டுணரவோ முடியாது. அது காசுக்குரிய பண்புகள் அனைத்தையும் கொண்டிருக்கும். அதே சமயம் மேலதிக நெகிழ்வுத் தன்மையும் சேர்ந்துள்ளது. அது கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் வசதி என்பனவாகும். ஏனெனில் ஈகாசு செயற்பாட்டு முறையானது இலத்திரனியலாக்கப்பட்டதும் மரபு ரீதியான தாள்காசுகளையும் குற்றிகளையும் முன்னேற்றமடையச் செய்யும் பெறுமதியான புதிய அம்சங்களையும் கொண்டுள்ளது.

பல நாடுகளில், நுகர்வோர் தங்கள் வசதிக்காக அட்டை அடிப்படையிலமைந்த காசுப் பதிலீடுகளைப் பின்பற்றுகின்றனர். கடன் அட்டைகள், காசு அட்டைகள், தொலைபேசி அட்டைகள் என்பன கொண்டு சுமப்பதற்கு இலகுவானதாகவும், பெருந்தொகையான சில்லறைக் காசுத் தொகைகளுக்கான தேவையினை நீக்குவதாகவும் கொடுக்கல் வாங்கல்களை வேகமாக்குவதாகவும் உள்ளன.

இலத்திரனியல் காசுமுறை செயற்படத் தொடங்கியதும் பின்வரும் நலன்கள் இலத்திரனியல் காசுக் கொடுப்பனவினைப் பயன்படுத்துவோருக்கு கிடைக்கத்தக்கவையாகவிருக்கும்.

(1) உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படுதல்
(2) முன் சுமை ஏற்றிக் கொள்ளத்தக்க வசதி
(3) பதிவு அற்ற ஒப்பு (ஏற்பு)
(4) உடனடியான பண இடமாற்றம்
(5) நபர் - நபருக்கான கொடுப்பனவு
(6) பல நாணய முறைமை

பின்வரும் மரபு ரீதியான காசினை முன்னேற்றும் அம்சங்கள் இலத்திரனியல் ஈகாசு கொடுப்பனவு முறையில் உள்ளடங்கியுள்ளது.

1) தொலைபேசி மூலமே இலத்திரனியல் காசினை இட மாற்றுதல்
2) "இலத்திரனியல் கூற்று/அறிக்கையினை" பெறுவதற்கான வசதி
3) அதிகாரமளிக்கப்படாத அடைவுகளை தடுப்பதற்கு இலத்திரனியல் காசினை பூட்டிவைத்தலுக்கான (பாதுகாத்தலுக்கான) திறன்

### இலத்திரனியல் காசுக் கொடுப்பனவு முறையின் கீழ் பின்வரும் சாதனங்கள் ஒன்றாகத் தொழிற்படுகின்றன.

(1) வோலட் (பொக்கட் அளவான எலக்ரோனிக் பை)
(2) மீதி வாசிப்பாளர் (திறப்பு வளைய அளவிலான அட்டை வாசிப்பாளர்) வாசிக்கும் கருவி
(3) தொலைபேசி (அட்டை வாசிப்பாளர் திரையுடன் கூடிய தொலைபேசி)
(4) சில்லறை வியாபாரி கணணி மாற்றி (ஈகாசுவின் ஏற்பிற்கான அலகு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவ்வாறு இலத்திரனியல் காசுக் கொடுப்பனவு முறை தொழிற்படுகின்றது.

ஓரு வங்கி / ஒரு நிதி நிறுவனமானது தனது வாடிக்கையாளர்களுக்கு களஞ்சியப்படுத்தப்பட்ட பெறுமதி அட்டைகளையும் பைகளையும் வழங்கும். வாடிக்கையாளர்கள் தொலைவங்கியிடல் முறைமையினூடாக தங்களது தொலைபேசிகளுக்கு அல்லது ATM ஒன்றிலுள்ள அட்டைகளுக்கு தங்களது கணக்குகளிலிருந்து பெறுமதியை மாற்றிக் கொள்ளலாம். அத் தொலைபேசியும் இந் நோக்கத்திற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டதாகும்.

இலத்திரனியல் பண அட்டையானது ATM அட்டையைப் போல் / ஒரு கடன் அட்டையினைப் போலும் தொழிற்படலாம்.
அட்டையை வைத்திருப்போர் தங்கள் கணக்குகளை தொலைவங்கியிடல் முறைமையின் கீழ் பேணிக் கொள்வதன் காரணமாக அவர்கள் ATM இயந்திரம் உள்ள இடத்திற்கு செல்ல வேண்டியதில்லை. கொள்வனவு செய்யும் போது வாடிக்கையாளர் அவர்களது அட்டைகளை EDC வியாபாரியின் இலத்திரனியல் தரவு பிடிப்பு மாற்றியினூடாக செலுத்துவார்கள். கொடுக்கல், வாங்கலை உறுதிப்படுத்துவதற்கு எவ்விதமான கடன் பரிசோதனைகளோ, கையெழுத்தோ தேவையில்லை. ஆக PIN இலக்கம் மாத்திரம் தேவைப்படும். அட்டையிலிருந்து நேரடியாக நிதித் தொகை கழிக்கப்பட்டு விற்பனையாளரின் கணணி மூலம் மாற்றீடு மாற்றப்படும். வியாபாரிகள் கொடுக்கல், வாங்கல்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தமது நிதிகளை இவ்முறைமையினூடாக / தொலைவங்கியிடல் முறைமை மூலமாக தமது வங்கிக் கணக்குகளுக்கு மாற்றிக் கொள்ளலாம்.

## வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் நன்மைகள்

**(அ) வசதி**

(1) கொடுப்பனவுகள் விரைவாகவும் இலகுவாகவும் மேற்கொள்ளல்
(11) கடன் அட்டைபோல் எவ்வித அங்கீகாரமோ / கையெழுத்தோ அவசியமில்லை
(111) அட்டைகள் ATM இலிருந்து தொலைபேசியில் மீள் நிரப்பப்படலாம்.

**(ஆ) நெகிழுந்தன்மை**

(1) சிறிய மற்றும் பாரிய கொள்வனவுக்கு
(11) கொடுப்பனவுகள் நபரிடமிருந்து இன்னொரு நபரிற்கு
(111) தொலைபேசி மூலம் தூரத்திலிருந்து மேற்கொள்ளப்படலாம்.

**(இ) கட்டுப்பாடு**

(1) எந்த கொள்வனவுத் தொகைக்கும் சரியான கொடுப்பனவு
(11) மீதிகள் பரிசோதிக்கப்படலாம்
(111) கொடுக்கல் வாங்கலின் பதிவு கிடைக்கத்தக்கதாகவிருக்கும்

**(ஈ) பாதுகாப்பு**

(1) “பூட்டி வைத்தல்” தொழிற்பாடு பணத்தைப் பாதுகாப்பதுடன் கொடுக்கல் வாங்கலையும் இரகசியமாக வைத்திருக்கவும் உதவுகிறது.
(11) “பூட்டு குறியீட்டிலக்கம்” மாற்றப்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில்லறை வியாபாரிகளுக்கு ஏற்படும் நன்மைகள்

(அ) விற்பனைப் புள்ளியில் கூடிய வினைத்திறன்
(ஆ) குறைந்த ஆரம்பச் செலவுகள்
(இ) சந்தைப்படுத்தல் வசதி
(ஈ) மேலதிக பாதுகாப்பு

இலத்திரனியல் காசினை வைத்திருப்பவர்களுக்கு பின்வரும் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

- இலத்திரனியல் காசினை ஒரு துப்பரவானதும் வசதியானதுமான பிளாஸ்ரிக் அட்டையில் கொண்டு செல்ல.
- வீட்டிலிருந்தே வசதியாக இலத்திரனியல் ஈகாசினை உடனடியாகப் பெற்றுக் கொள்ள
- மீதிகளை கணக்குப் பார்க்காமல் சரியான கொடுப்பனவுகளை உடனடியாக செலுத்த
- முன்னைய கொடுக்கல் வாங்கல்களில் பதிவேடுகளை பரிசோதிக்க
- ஒரே அட்டையில் பல்வேறு நாணயங்களை கொண்டு செல்ல
- இலத்திரனியல் காசியினை உலகெங்கிலும் அனுப்பலாம்.
- இலத்திரனியல் காசானது புதியவொரு உலகளாவிய கொடுப்பனவு முறைக்கான உந்துதல்களாக அளிக்கின்றது. அக்கொடுப்பனவு முறைக்குள்

(1) இலத்திரனியல் காசு அட்டைகள் வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் உடனடியாக கிடைக்கத்தக்கவையாகும்

(11) இலத்திரனியல் காசு வைத்திருப்போர் எந்த நேரத்திலும் எந்த இடத்திற்கும் ATM இல் / வீட்டிலிருந்து தமது காசியினை அனுப்பவும் பெறவும் முடியும்.

(111) தாள் காசு குற்றியும் தற்போது செய்வது போல் இலத்திரனியல் காசும் வாடிக்கையாளர், வங்கி, வியாபாரிகள் போன்றோரிடம் சாதாரணமாக புழங்கும்.

சுப்பிரமணியம் பாலேந்திரன் B.COM. (Hons )
விரிவுரையாளர்
வணிக முகாமைத்துவபீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The startegic Impact of the Internet in a Given Industry

A.Jesuthasan. Bse (Eng)

## 1.Introduction

The goal of any business strategy is to achieve a competitive advantage within the company`s industry. The following article analyzes how the Internet can influence a company`s competitive advantage and to what extent it should be taken into account when planning to implement corporate strategies.

When considering the Internet as a possible distribution channel, it is necessary to look in to the future and ask how this network may change our industry over the next two or three years. It is not sufficient to consider the possible advantages; it is also of prime importance to assess the possible damage our competitive advange could suffer if other businesses of the line of activity.

### 1.1 The Internet

Before carrying out such an analysis, we must first define clearly what the Internet is: a mere information channel or a complete distribution channel? In oder to set about this task, we must relize that the Internet is merely a phyical medium that provides a base for certain services. It is how interesting these services prove to be that will indicate the true value of the network. The main services are e-mai l, newsgroups, and the Web. The possibilities offered by each are very different, as are the rules governing them.

E-mail allows fast, inexpensive, and asynchronous communications. (It is not necessary for the two people communicating to do so at the same time.) In this regard, it has merits that the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

telephone (synchronous), the fax (expensive), and the postal sevice (slow) all lack. It is personal and, therefore, dicrete (provided that nobody with sufficient means tries to intercept it ). The main problem of using it in commercial ons is lack of security: Security protocol is still not sufficiently widespread.

News groups are a form of receiving information on specific subjects that interst us and of disseminating information aimed at particular pepole who may be interested in it. Their merit lies in the fact that the information is unresticted and is screened by the major communications corporations. While the newsgroups provide an interesting source of information for indus tries, their use does not cover commercial purposes for ethical reasons of the network.

Finally, there is the World Wide Web has broken through the barriers of the not-so-friendly Internet and has made it a user- friendly tool. It has transformed an information network into a real information channel that is open not only to hackers and people with a special interest in information, but to the people in general, is buyers. In short, it has changed the anti - commercial Internet into a commercial network that will eventually become distribution channel.

Information (communication) channel or distribution ? Where does the difference lie? It is perhaps easier to explain the difference using an example. Newspapers and television are communication channels. They enable messages to be put across to the public but do not allow communication transaction to take place. A distribution channel necessarily provides sellers with a means of information potential to customers about their supply of products and enables customers to make their purchases ( order and payment). The delivery of physical goods or services is not included in the distribution channel. (A travel agency informs and sells but is not involved in the provision of services.) A distribution channel can be strengthened by means of advertising through communication channels ( media).

Only a combination of the Web and e-mail can provide us with a full distribution channel. The Web is used to inform clients, and e-mail to place orders. To simplify the process, e-mail can be generated directly form the Web.

It should be pointed out that , as will see later, the Web does not neet to became a distribution channel for it to influence companies` competitive advantage.

## 2. Possible strategic impact of the Web

Although this article deals primarily with the strategic impact of the Web, its conclusion may be applied to any other widely used network that is sasily accessible. The network is analyzed from two perspectives: as a distribution channel and as a source of information that may affect competitive advantage.

### 2.1 The Web as a distribution channel

When we speak of the current Web, it sould be pointed out that this is quit different form the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Web that will exist in two or three year`s time.

**For our part, we would hope that time-**

- Security protocol enabling (at least ) electronic transactions based on existing credit cards will have become widespread.

- The Web will be used widely as a tool for puchasing and seeking suppliers;

The conclusions of this article are based on these two principles. A delay in the commercial implementation of the Web could give rise to a general disillusionment and cooling-off of public interest. It is, therefore, important to take advantage of current enthusiasm to reach the greatest number of users.

**As a distribution channel., the Web may be characterized as follows:**

- It is a new channel that is not controlled by companies any industry.

- Distribution costs are low.

- Its impact is limited (for the time being). Predictions are made , but its true impact is not really known.

- It enables fast distribution of information products.

- The cost of changing prices or even commercialized products is very low, thus enabling a relatively quick product rotation.

## 2.1.1 Possibility of controlling the distribution channel

The fact that the Web is not a controlled channel means that it is an access point for new companies. As a normal distribution channel, it cannot be controlled unless the companies in the industry succeed in focusing in focusing customers` attention on specific pages (a virtual market from which companies outside the market would be excluded). This could have two negative consequences:

- The companies in control could give into the temptation of granting information facilities to their customers, thus reducing cost, and be forced to increase their own competitive needs ( which could lead to a general loss in profits).

- Depending on the laws of the country of publication at which the market is aimed, companies wishing to enter the virtual market could report the consortium and oblige it to publish their information, too. This hitch may be over come by publishing the pages in a computer situated physically in a different country from the one the virtual market is aimed at. (This would be transparent for the end user.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One of the main characteristics of a ditribution channel is that is should reach potential customers. How intersting the web is as a channel depends on whether or not potential ( or real) customers are connected. For the time being, sufficient number of potential clients only from very specific industries are connected ( microcomputing hardware and software, universities, etc.). It is therefore, currently a limited channel regarding the number of clients having access to it and markets that could be interested in seeking clients that are already connected.

Nevertheless, there are a number of products and services that are especially well-adapted to distribution through the Internet. These products-which in many cases would even force customers to get hooked to the Net-have one or several of the following characteristics:

- They are fit only for a few specialized customers around the world.
- Technical information and price are more important than persuasion in order to secure sales.
- They are aimed at Internet`s current population ( upper class entrepreneurs).
- They are information products.
- They are a contact service between parties in a very specific product or service.
- They are very specific products that are hard to find and that the customer is forced to buy (such as spare parts for nonwidely used machinery).

Thes types of procducts may be found in many different industries may decide to use the Wef as a distribution channel only for products that are especially suitable It may also take advantage of the fact that customers will visit their Webs on account of the interst aroused by these special items to include other products that are less adapted to this media.

Hower, an industry that controls the existing distribution channels may well not be interested in creating a new distribution channel it does not dominate =, as this would mean opening itself up to new competitors.

Members of an industry with many distribution channels who seek new way of competing-provided they are not concerned about letting new competitors in-approach the Web as an alternative method of distribution.

In other cases, it willbe new competitors who try to gain control of part of the market by creating a new channel . If they are successful their competitors in the in the industry will be obliged to react in an attempt to maintain their share of the market.

It should not be forgotten that access to a distribution channel is just one of the factors that can



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pervent new competitors form entering a market. In addition to this, candidates must overcome the switching cost and other factors that hinder their entry.

## 2.2 Flexibility and swift change

Another interesting feature of the Web is that the information it offers may be changed very quickly, and this change reaches clients or buyers immediately. This is particularly important for industries in which competition is based on major advertsing campaigns to promote new products with a very short life cycle,and the shorter the cycle the greater the advantage.

Quick product change to adapt to the markct not only ensures a specific competitive advantage, but also enables it to be maintained.

### 2.2.1Cost

To some extent, the distribution of goods aimed at the public in general through the Web reminds us of catalogue sales. There are certain similarities:

- Neither of the two requires physical shops with window displays, staff, stock, etc. The merchandise is served directly from the warehouse.
- Both offer detailed information on the goods the customer may buy, one through a catalogue and the other by means of a Web page that might include a photo graph of the article.

**We should however mention the differences:**

- The catalogue sales company only has access to customers already in possession of the catalogue, while-at least in theory-other potential customers (unknown to the com pany) can reach it through the network.
- The Web may cantain huge quantities of technical information that it is neither feasible nor recommended to include in a commerical catalogue.

The two systems are prefectly compatible. The catalogue sales company can publish its catalogue on the Web and use its existing structure to receive and send orders and for billing purposes, etc.

The interesting is that both are low - cost distribution channels. Access to the Web does not require a large investment. There is no need to own a server, as third parties retail this service at reasonable prices. if considerable information is handled and this is frequently updated, the cost of buying a server and connection to the net work are soon recouped.

To be cost effective, a Web - based distribution channel should use existing corporate structures.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3. The Web as a source of information that could influence competitive advantage

Let us imagine for a moment that a consumer association compiles a database on Washing machines, allowing prices, quality, and even complaints received by the association (as information on after - sales service) to be compared easily. Let us also suppose that this database is regularly updated, its existence is known, and access to it is easy - there are even terminals at washing machine sales outlets.

Direct comparison of prices, and service received from an independent organization at the moment of decision making can significantly affect the way potential buyers behave. The influence can even be stronger than a positive experience (the previous washing machine). This is because customers have all the information they need., and the switching cost is therefore very low.

Direct comparison would force washing machine suppliers to wage war on one another, not so much on the basis of marketing but rather centering on price, quality, and service.

When customers possess a large amount of comparative information, suppliers are forced to make a greater effort. In general, the suppliers ' power decreases, obliging them to lower prices and improve quality and service.

This leads us to consider the fact that a large proportion of our commerical system is based on customer's lacking information on their options. There is a tendency to work with a series of suppliers that provide more or less satisfactory service. The customer will only make the effort to look for a new supplier if the level of satisfaction drops significantly (in other words, there is a switching cost).

This Kind of information - based systems would make it easier for new suppliers to enter the market. Since the distribution channels are "fair" a supplier with attractive prices and good service could enter the market very quickly.

A possible conclusion would be that it is essential to control how information is distributed. It is important to give as much information as possible to potential clients, but it is also in our interest to ensure that this information cannot be used to give customers greater power and thus bring about a war in the market.

## 2.4 Changing competitive balance within the industy

It is impossible to carry out a global analysis on how the Internet can help companies to improve their competitive position within their industry. Each market is different and requires a specific analysis. Studies should often go beyond purely technical critetia.

Let us take the case of travel agencies, for example. In theory, if in a year`s time everybody that is connected to the Internet will be able to reserve their air and rail tickets and book their holidays through the Net, we might assume that the future of travel agencies could be at risk. We sould go futher and consider who makes reservations in the company and how it is done. This task is normally part of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

secretaries. A secretary that needs a ticket has two option: to call the agency and let them to do all the work and send the tickets; or to learn to use the Internet reservation sysyem, find the fights, study the connection, pay for the ticket; and organize how it is to be sent. Personally, I would prefer that my secretary called the agency and used the time she would have spent on the Internet in some other way.

Having direct access to services is not always an added value. Only those services that really add value to their use have a chance of succeeding in media such as the Internet.

A study on the competitive of the Internet in a particular industry include all the factors that influence the distribution channel we wish to modify or operate in.

The Internet must not be considered as a global distribution channel for the industry. Each product or set of products should be studied separately.

## 3.Conclusion

The decision to enter the Web at the corporate level cannot be made by the computing department of a company. It should be carefully assessed by the general management. The latter should go beyond the technical details and focus on how the Web, as a new distbution channel, may affect competitive balance in the industry, both at present and in the next two or three years.

If we consider that the Internet may become an important channel, albeit in the future, it is essential to act swiftly. Otherwise, we may well find ourselves at a time when the Internet has become central to market development within the specific industry.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசுப் பாய்ச்சல் கூற்று

# இலங்கை கணக்கீட்டு நியமம் - 9

**நோக்கம் :-**

* காசு அல்லது காசுப்பிரதியீடுகளில் (CASH AND CASH EQUIVALENTS)

* வரலாற்று ரீதியாக ஏற்பட்ட மாற்ற தகவல்களை

* காசுப்பாய்ச்சல் கூற்று ஒன்றினூடாக

* விடயங்களை
    * தொழிற்பாட்டு நடவடிக்கைகள்
    * முதலீட்டு நடவடிக்கைகள்
    * நிதியிடல் நடவடிக்கைகள் எனும் தலைப்புக்களின் கீழ் வெளிப்படுத்தல்

**வீச்சும் பிரயோகம்**

* அனைத்து முயற்சியாண்மைகளுக்கும் பிரயோகிக்கலாம்.

* நிதி அறிக்கைகளில் காசுப்பாய்வு கூற்று ஓர் முக்கிய அங்கமாக இடம்பெறும்.

* ஒவ்வொரு கணக்கியல் காலத்திற்கும் இக்கூற்று தயார் செய்யப்பட வேண்டும்.

* குழுவினது நிதி அறிக்கை குழுவினதும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

* காப்புறுதி கம்பனிகளைப் பொறுத்தவரை அவற்றிற்கெனப் பகரக்கூடிய காசோட்டங்களை மாத்திரம் உள்ளடக்கலாம்.

**காசுப்பாய்ச்சல் கூற்றின் முக்கியத்துவம்:**

* குறிப்பிட்ட நிறுவனம் எங்ஙனம் காசு, காசு சமப்படுத்துகைகளை பெற்றுக் கொள்கின்றது எனவும் அவற்றை எவ்விடயங்களுக்குப் பயன்படுத்துகின்றது எனவும் அறிந்து கொள்ளுதல்.

* தொழிற்பாட்டு மூலதன முக்கியத்துவம்.

**காசுப்பாய்ச்சல் கூற்றின் நன்மைகள் :**

* நிதி ஆய்வுக்கான ஓர் ஊடகமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* காசு உருவாக்கத்தில் நிறுவனத்தின் திறமையினை மதிப்பிடலாம்.

* இது பல்தரப்பட்ட கணக்கீட்டு பிரயோகங்களை தவிர்க்கிறது.

* எதிர்கால காசோட்ட காலம், தொகை போன்றவற்றை நிட்சயப்படுத்தும் குறிகாட்டியாக அமைகின்றது.

* எதிர்கால காசோட்டங்களின் நிகழ்கால பெறுமதிகளை அறிந்து கொள்ளும் மாதிரிகளை (Mod els) விருத்தி செய்ய உதவுகின்றது.

* இலாபத்தன்மைக்கும் தேறிய காசோட்டத்திற்குமிடையேயான தொடர்பை பரீட்சிக்க முடிகின்றது.

## வரைவிலக்கணங்கள் :

1. காசு

கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள வைப்பும் காசு எனப்படும்.
காசு = காசுக் கையிருப்பு + வங்கி மீதி

2. காசு சமப்படுத்துகைகள் / காசு பிரதியீடுகள் **(Cash equivalents)**

மூன்று மாதத்திலும் குறைந்த முதிர்வுடைய, முதிர்வில் தேறும் தொகை நிட்சயமாக தீர்மானிக்கக்கூடிய, தேறும் தொகை பெறுமதி மாற்ற அபாயங்களுக்கு உட்படாத, குறுங்கால, அதி திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் காசு சமப்படுத்துகைகள் எனப்படும்.

(உ + ம்) அழைப்பு பணம்
திறைசேரி உண்டியல் (3மாதம்)
தற்காலிக வங்கி மேலதிக பற்று

3. காசோட்டம்

காசினதும் காசுப்பிரதியீடுகளினதும் உள்ளோட்டமும், வெளியோட்டமும் காசோட்டம் எனப்படும்.

4. தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

நிறுவனத்திற்குப் பிரதான வருவாயை ஈட்டித்தரும் நடவடிக்கைகள் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் எனப்படும்.

(உ + ம்)
* சரக்கு விற்பனை / சேவை வழங்கல் வருமானம்.
* இறை, கட்டணம், தரகுப் பெறுவனவுகள்.
* சரக்குகளுக்கான கொடுப்பனவுகள்.
* தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகள்.
* வரி (மற்றைய தலைப்புக்களில் அடங்காத)
* ஒப்பந்தங்களின் மீதான (வியாபார நோக்குடைய) கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முதலீட்டு நடவடிக்கைகள்

நீண்ட கால சொத்துக்களினதும் பெறுகைகளும் அகற்றங்களும் காசு சமப்படுத்துகைகளில் உள்ளடங்கமுடியாத முதலீடுகள் இவையாகும்.

(உ + ம்)

* நீண்டகால சொத்துக்கள் மீது செலுத்தப்பட்ட காசு.
* நீண்டகால சொத்துக்களினதும் விற்பனை வரும்படி
* பங்குகள் அல்லது கடன் பத்திர கொள்வனவுகள்.
* மேற்படி பங்கு அல்லது கடன்பத்திர விற்பனை வரும்படி.
* காசு முற்பணம் அல்லது கடன் செலுத்தம்.
* மேற்படி விடயத்தினை மீளப் பெறல்.

6. நிதியீட்ட நடவடிக்கைகள்

நிறுவனத்தினது உரிமை மூலதனத்திலும் கடன் மூலதனத்திலும் மாற்றத்தை கொண்டு வரத்தக்க நடவடிக்கைகள் நிதியீட்ட நடவடிக்கைகள் எனப்படும்.

(உ + ம்)

* பங்கு வழங்கல் / தொகுதிக் கடன் வழங்கல் (வட்டத்துடன்)
* பங்கு மீட்டல் / தொகுதிக்கடன் மீட்டல்.
* நீண்ட கால கடன் பெறலும் திரும்பக் கொடுத்தலும்.
* நிதிக் குத்தகைகளின் மீதான தவணைக் கொடுப்பனவு.

தொழிற்பாட்டு நடவடிக்கைகளை அறிக்கையிட பின்வரும் இருமுறைகள் பின்பற்றப்படலாம்.

1. நேர் முறை
   SLAS - 9 இதற்கே முன்னுரிமை வழங்குகின்றது.
2. நேரில் முறை.

**நேர்முறை :**

இதன் கீழ் பிரதான காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் வெளிப்படுத்தப்படும்.

(உ + ம்) தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் உதாரணங்களை நோக்குக. அத்துடன் இதனை விளங்கிக் கொள்ள பின்வரும் மாதிரியினை நோக்குக.

## தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் காசோட்டம்.

| | | |
|---|---|---|
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற காசு | | xxxx |
| வழங்குனருக்கும் ஊழியருக்கும் கொடுத்த காசு | | (xxx) |
| தொழிற்பாட்டின் மூலம் உருவான காசு. | | xxxx |
| வட்டி கொடுத்தது | xx | |
| வருமான வரி கொடுத்தது | xx | |
| உற்பத்தி ஒப்பந்த செலுத்தம் | xx | (xxx) |
| தொழிற்பாட்டின் மூலம் தேறிய காசு. | | xx |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில்முறை :

இம்முறையின் கீழ் தேறிய இலாபமானது பின்வரும் விடயங்களின் நிமித்தம் செம்மையாக்கப்படும்.

* இருப்பிலும் வருமதிகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள்.
* காசற்ற விடயங்கள்.
  (உ + ம்) தேய்வு, ஏற்பாடுகள், பிற்போட்டவரி.
* அட்டுறுக்கள்
* தேறாத அன்னிய நாணய முறைகள் / நட்டங்கள்.

இம்முறைக்கு SLAS - 9 முன்னுரிமை வழங்கவில்லை.

நேர்முறையில் காசுப் பாய்ச்சல் கூற்றை தயார் செய்ய பின்வரும் மாதிரி மாணவர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

குறிப்பு :

நிதி அறிக்கைகளில் அசாதாரண விடயங்கள் சாதாரண விடயங்களிலிருந்து வேறாக காட்டப்பட வேண்டுமென்பது கணக்கீட்டு நியமங்களின் வலியுறுத்து. எனவே காசுப்பாய்ச்சல் கூற்றிலும் கூட எந்த தலைப்பின் கீழும் அசாதாரண விடயங்கள் நிகழலாம். அவை அத்தலைப்பின் கீழ் வேறாக காண்பிக்கப்பட வேண்டும். இங்கு தொழிற்பாட்டு நடவடிக்கையின் கீழ் இவ்விடயம் இடம் பெறுவதாக நான் கருதியுள்ளேன். (உதாரணங்களுக்கு இவ்விடயம் தொடர்பான கணக்கீட்டு நியமத்தினை நோக்குக)

நிறுவனத்தின் பெயர்
(ஆண்டு) நிதியாண்டிற்கான,
<u>காசுப்பாய்</u>ச்சல் கூற்று.

| 1) தொழிற்பாட்டு நடவடிக்கையின் காசோட்டம் | | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற காசு | | xxxxx | |
| வழங்குனர்களுக்கு செலுத்திய காசு | (xxx) | | |
| தொழிலாளருக்கு செலுத்திய காசு | (xxx) | (xxx) | |
| தொழிற்பாட்டின் மூலம் தெண்டிய காசு | | xxxx | |
| வட்டி செலுத்தம் | (xxx) | | |
| வரி செலுத்தம் | (xxx) | (xxx) | |
| சாதாரண தொழிற்பாட்டின் மூலம் தெண்டிய காசு. | | xxxx | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதாரண விடயம் (குறிப்பு)

| | | | |
|---|---|---|---|
| பெற்றகாசு | ××× | | |
| கொடுத்தகாசு | (××) | ×× | |
| தேறிய காசு தொழிற்பாட்டின் மூலம் தெண்டியது. | | ×××× | → ×××× |

2) முதலீட்டு நடவடிக்கையின் காசோட்டம்:

| | | | |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (×××) | | |
| நிலையான சொத்துக்களின் விற்பனை வரும்படி | ××× | | |
| பெற்ற வட்டி | ×× | | |
| பெற்ற பங்கிலாபம் | ×× | | |
| முதலீட்டில் பயன்படுத்திய காசு (××) / தெண்டிய காசு | ×××× | → | ×××× |

3) நிதியிடல் நடவடிக்கையின் காசோட்டம்

| | | |
|---|---|---|
| பங்கு வழங்கல் வரும்படி | ××× | |
| பெற்ற கடன் (நீண்டகாலம்) | ××× | |
| பங்கு / தொகுதி கடன் மீட்டல் | (×××) | |
| நிதிக்குத்தகை தவணைக்கட்டணம் | (××) | |
| வங்கிலாப செலுத்தம் | (××) | |
| நிதியிடல் பயன்படுத்திய காசு | (×××) | (×××) |
| காசிலும் காசு சமப்படுத்துகைகளிலுமான தேறிய அதிகரிப்பு / (குறைவு) | | ×× |
| காசு, காசு சமப்படுத்துகை ஆரம்ப மீதி (குறிப்பு - 2) | | ××× |
| காசு, காசு சமப்படுத்துகை இறுதி மீதி (குறிப்பு - 2) | | ××× |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு - 2.

காசு, காசு சமப்படுத்துகைகள்

| | ஆரம்பமீதி | இறுதி மீதி |
|---|---|---|
| காசு மீதி | ×× | ×× |
| வங்கி மீதி | ×× | ×× |
| வருமதி உண்டியல்கள் (3மாதம் / உட்பட்ட) | ×× | |
| குறுங்கால முதலீடு (3மாதம் / உட்பட்ட) | ×× | ×× |
| | ××× | ××× |
| வங்கி மேலதிக பற்று (3மாதம் / உட்பட்ட) | (××) | (××) |
| சென்மதி உண்டியல் (3மாதம் / உட்பட்ட) | (××) | (××) |
| | ××× | ××× |

1. இரு ஐந்தொகைகள் தரப்படுமென்பதால் கணிப்பிடுதல் இலகுவானது.

2. மாணவர்கள் காசு, காசு சமப்படுத்துகை என்றால் என்ன என்பதை பூரணமாக அறிந்திருக்க வேண்டும்.

**N . NAGENDRAKUMAR**
**LECTURER**
**DEPT. OF. ACC AND FINANCIAL MANAGEMENT**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நேரடி முதலீடும் 3ம் மண்டல நாடுகளில் அதன் தாக்கமும்:

மா. ஸ்ரீ சரவணபவா
பொருளியல் கற்கை இறுதி வருடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்.

## அறிமுகம் :

கடந்த கால உலக பொருளாதார வரலாற்றை நோக்கும்போது அதில் காணக்கூடிய சிறப்பான அம்சம் உலகில் உள்ள எந்த ஒரு நாட்டின் பொருளாதாரமும் தனித்து இயங்க முடியாது உள்ளது. அந்த அளவிற்கு நாடுகள் ஒன்றில் ஒன்று தங்கி இருப்பதாகும். இதன் விளைவாக பொருளாதாரங்களை உலக நாடுகள் திறந்து விடுவதன் மூலம் தாராளமயப்படுத்தல் (Libaralizalion) உலக மயமாக்கல் (Globalizalion) போன்ற பொருளாதார பொறிமுறைகள் இன்று மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இச்செயற்பாடுகள் மூலம் நாடுகளிடையே வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல் மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

2ம் உலக மகாயுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் உலக பொருளாதாரமானது நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்பட்டது. ஆனால் அண்மைய காலத்தில் நாடுகளின் பொருளாதாரமானது பெரும் சந்தை நோக்கிய நகர்வாக காணப்படுகிறது. இந்த நிலையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தின் உறுதித் தன்மையை தளர்த்துகிறது. இதன் காரணமாக இந் நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகளிடம் மூலதனத்தை பெற கையேந்தி நிற்கின்றன. இந்த வகையில் மூலதனத்தைப் பெறும் வழிகளுள் ஒன்றாக வெளிநாட்டு நேரடி முதலீடு காணப்படுகிறது. இதனை பெற்றுக் கொள்ளும் 3ம் மண்டல நாடுகள் உலக மயமாக்கல் எனும் பொருளாதார செயற்பாட்டை ஏற்படுத்துகிறது!. உலக மயமாக்கலின் முக்கிய வழிமுறைகளில் ஒன்று ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு நேரடி முதலீட்டின் வேகமான பாச்சல் ஆகும்.

வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது "ஒரு நாட்டில் பிறிதொரு நாட்டின் தனியார் அல்லது கம்பனிகள் அல்லது பல்தேசியக் கம்பனிகள் என்பன இலாப நோக்கம் கருதி மேற்கொள்ளும் முதலீடுகளாகும்". இம் முதலீடு செய்யும் தனியார் அல்லது கம்பனிகள் அல்ல்து பல்தேசியக் கம்பனிகள் நிதி, முகாமைத்துவம், தொழில்நுட்பம், வர்த்தகக்குறி மற்றும் ஏனைய வளங்களையும் மற்றைய நாட்டிற்கு மாற்றீடு செய்வதாகும். பல்தேசியக் கம்பனிகள் மூலம் மேற்கொள்ளப்படும் முதலீடு நிதி முதலீடாகவும் (Port Folio Investment) இருக்கலாம். நிதி முதலீடு என்பது வெளிநாட்டவர்கள் அல்லது பல்தேசியக் கம்பனிகள் உள்நாட்டு ஆவணங்கள் வர்த்தக நிறுவனங்களின் பங்குகள் போன்ற நிதிச் சொத்துக்களில் பணத்தை முதலீடு செய்வதைக் குறிக்கிறது. ஆனால் இவை சினேக நாடுகளில் (Host Countries) விரும்பப்படுவது இல்லை. ஏனெனில் இது ஒரு சொத்து வியாபார செயற்பாடாக (Asset Trade Only) காணப்படுவதால் ஆகும்.

## 3ம் மண்டல நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தாக்கம் :

உலக பொருளாதார வரலாற்றில் உலக நாடுகளிடையே வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாச்சலானது 1980களில் இருந்து வழமைக்கு மாறாக மிக வேகமாக பாரியளவில் அதிகரித்துக் கொண்டு வருகிறது. 1996ம் ஆண்டின் உலக முதலீட்டு அறிக்கையாண்டின்படி ஐக்கிய நாடுகள் வலியுறுத்துவது யாதெனில் "நேரடி வெளிநாட்டு முதலீடு அண்மைக் காலத்தில் மிக வேகமாக அதிகரித்து வந்துள்ளது" என்பதாகும். "1980களின் கடைசி 3 ஆண்டுகளில் இடம்பெற்ற நேரடி வெளிநாட்டு முதலீடு (1980ன் டொலர்களில் மதிப்பிடும்போது) ஆண்டொன்றுக்கு 10.000 கோடி டொலருக்கும் மேற்பட்டதாக இருந்து வந்துள்ளது. 1970களின் தசாப்தத்தின் முதல் மூன்றாண்டுகளில் காணப்பட்ட மட்டத்திலும் பார்க்க இது பத்து மடங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பாகும்." என 1991ம் ஆண்டு முதலீட்டு அறிக்கை கூறுகிறது. இச்செயற்பாடு தேசிய பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட ஒரு பொருளாதாரத்தில் ஒரு முக்கிய காரணியாக காணப்படுகிறது.

வெளிநாட்டின் நேரடி முதலீட்டின் உட்பாச்சல் அபிவிருத்தியடைந்து வரும் 3ம் மண்டல நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 3ம் மண்டல நாடுகளில் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை கைத்தொழில் மயமாக்கல் ஆகும். கைத்தொழில் மயமாக்கத்தினை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக வெளிநாட்டு நேரடி முதலீடு காணப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் புதிய கைத்தொழில் மய நாடுகளான (Newly Industrial Countries -(Nics) தாய்வான், கொங்கொங், தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் அனுபவம் வெளிக்காட்டுகிறது. புதிய கைத்தொழில் மய நாடுகளாக உருவாக விரும்பும் வளர்முக நாடுகளுக்கு ஒரே ஒரு பிரயோக ரீதியான தெரிவு வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட சில துறைகளின் முதலீட்டினை ஊக்குவித்தனூடாக தனியார் வெளிநாட்டு கதியை கலந்திருக்க வேண்டிய அவசியத்தை கிழக்காசிய அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

3ம் மண்டல நாடுகளில் உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டு நடவடிக்கையை மேற்கொள்வது ஒரு முக்கிய பிரச்சனையாக காணப்படுகிறது. உதாரணமாக இலங்கையை எடுத்து நோக்கினால் மொத்த முதலீட்டு செயற்பாட்டில் 35% த்தினை மட்டுமே உள்ளூர் முதலீட்டின் மூலம் பெறமுடிகிறது. ஏனைய 3ம் மண்டல நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்நிலைமையில் ஏனைய முதலீட்டு தேவையை வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலமே ஈடுசெய்ய வேண்டி உள்ளது.

மேற்கூறிய முதலீட்டுப் பற்றாக்குறை இம்மூன்றாம் மண்டல நாடுகளில் பல்வேறு பிரச்சனைகளை தோற்றுவிக்கிறது. அவையாவன அமைப்பு ரீதியான பிரச்சனை நோக்கின் சென்மதி நிலுவைப் பிரச்சினையைக் குறிப்பிடலாம். சென்மதி நிலவையில் மூலதனத்துறைக் கணக்கில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பங்கு ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இம்முதலீட்டின் அளவு அதிகரிக்கும் போது அது ஏற்றுமதி அளவிலும் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தி (வெளிநாட்டு முதலீடு உள்வரும் போது அது இறக்குமதியை அதிகரித்தாலும் ஏற்றுமதி மூலம் பெறும் நன்மை அதிகம்) வர்த்தக ரீதியிலும் ஒரு சாதக தாக்கத்தை அதிகரிப்பதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடானது அன்னிய செலாவணி இருப்புகளோடு சேர்ந்து அடிப்படை நிலுவைப் பற்றாக்குறையை குறைவடையச் செய்வதன் மூலம் சென்மதி நிலுவைப் பிரச்சனைக்கு தீர்வாக அமைகிறது.

உடனடிப் பிரச்சனையை எடுத்து நோக்கும் போது அது வறுமை நிலைமையையே குறித்து நிற்கிறது. இலங்கை போன்ற ஒரு மூன்றாம் மண்டல நாட்டில் 50%ற்கும் மேற்பட்டோர் வறுமை நிலையில் வாழ்கிறார்கள். இந்த நிலை சேமிப்பு மட்டத்தினை கீழ் நிலைக்கு கொண்டு செல்கிறது. இலங்கையில் சேமிப்பு மட்டத்தினை கீழ் நிலைக்கு கொண்டு செல்கிறது. இலங்கையில் சேமிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15%ற்கும் குறைவாக காணப்படுகிறது இது. குறைவருமான, நடுத்தர வருமான, உயர் வருமான நாடுகளின் சராசரி விகிதத்திலும் பார்க்க குறைவாக இருந்து வருவதுடன் கிழக்காசிய நாடுகளின் சாராசரி அளவின் அரைவாசிப்பகுதியிலும் பார்க்க குறைவாக உள்ளது. சிங்கப்பூரில் 51% மாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நிலமை மூலதனப்பற்றாக்குறையை 3ம் மண்டல நாடுகளில் ஏற்படுத்துகிறது. மூலதனத்தைப் பெறவேண்டுமானால் கடன்களைப் பெறுதல் வெளிநாட்டு உதவியைப் பெறல் வெளிநாட்டு நேரடி முதலீட்டினைப் பெறுதல் எனும் உபாயங்களைப் பின்பற்ற வேண்டும். முதல் இரண்டு உபாயங்களும் எப்பொழுதும் சாத்தியமானதல்ல. இந்த வகையில் வெளிநாட்டு நேரடி முதலீடே 3ம் மண்டல நாடுகளுக்கு சாத்தியமானதொரு மூலதனத்தை பெறும் உபாயமாக காணப்படுகிறது.

3ம் உலக நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியின் முன்னேற்றப்படிகளைப் பேணுவதற்கும் இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கும் உதவுகிறது. அத்துடன் வெளிநாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடி முதலீட்டுடன் தனது சொந்த முதலீட்டையும் பயன்படுத்துவதில் இது பயன் மிக்கதாக காணப்படுகிறது. புதிய வர்த்தக தாபனங்களை தாபிப்பதும் அதன் மூலமாக பொருளாதார அபிவிருத்தியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு 3ம் மண்டல நாடுகளில் நிலவும் தொழில் பற்றாக்குறையை வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலமே இலகுபடுத்த உதவும்.

இவ்வாறே வெளிநாட்டு நேரடி முதலீடு இம்மூன்றாம் மண்டல நாடுகளுக்கு மூலதனத்தை வழங்குவது மட்டுமன்றி புதிய தொழில்நுட்பம், நிர்வாகம், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம், தொழில் நிபுணத்துவம் இதற்கும் மேலாக சர்வதேச சந்தைகளுடன் இணைப்பு, புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் உள்ளூர் பொருளாதாரங்களுடன் இணைப்பின் மூலம் பெறும் நன்மைகள் என்பனவும் அதிகரிக்கும். இம்முதலீடு 3ம் மண்டல நாடுகளின் பொருளாதாரத்தை ஒரு அபிவிருத்திப் பொருளாதாரமாக மாற்ற உதவும்.

3ம் மண்டல நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடானது பல சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் அதே வேளையில் பல்தேசியக் கம்பனியின் ஆதிக்கத்திற்கு இந்த 3ம் மண்டல நாடுகள் உட்படும் என்பது மறுக்க முடியாது. அதாவது முதலீடு செய்யும் நாடுகள் இம்மூன்றாம் மண்டல நாடுகளின் மீது ஒரு நவ காலனித்துவ தன்மையை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக இந்நாடுகளின் அரசியல், பொருளாதார திட்டமிடல்கள், கொள்கை வகுத்தல் என்பன பல்தேசியக் கம்பனியின் ஆதிக்கத்தின் கீழ் மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். எவ்வாறெனினும் 3ம் மண்டல நாடுகளில் இவ் வெளிநாட்டு நேரடி முதலீடு ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்றே கூறமுடிகிறது.

## இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடு :

இலங்கையின் பொருள் உற்பத்திக் கைத்தொழில்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 1930களில் ஒரு சில பாரிய சர்வதேசக் கம்பனிகள் இங்கு துணை நிறுவனங்களை நிறுவிக் கொண்டதனை அடுத்து வரத் தொடங்கின. அத்தகைய முதலீடுகள் சுதந்திரத்திற்குப் பின்னரும் கூட தொடர்ச்சியாக (ஆனால்) வரையறுக்கப்பட்ட ஓர் அளவில் இடம் பெற்று வந்தன. இம்முதலீடுகளின் பாச்சல் 1948 தொடக்கம் அரசியல் சூழ்நிலை மற்றும் கொள்கைப் பிரகடணங்கள் என்பவற்றிற்கு ஏற்ற விதத்தில் குறிப்பிடக்கூடிய தளம்பல்களைக் காட்டி வந்துள்ளது.

வெளிநாட்டு நேரடி முதலீடு இலங்கையில் குறிப்பாக ஏற்றுமதி சார் கைத்தொழில் கொள்கையின் முக்கியமான ஒரு கொள்கையாகவும் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிதியிடலில் 1960ம் ஆண்டு முதல் பங்களிப்பு செய்து வருகிறது. இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் கீழ் அந்நிய முதலீடுகள் வரவேற்கப்பட்டாலும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான அவசர தேவையாக அன்னிய முதலீடு கருதப்படவில்லை.

1977ன் பின்னர் அதிகாரத்தில் இருந்த அரசாங்கம் பொருளாதாரத்தினை திறந்து விடுவதன் மூலம் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இது உலக நாடுகளின் அனுபவம் மூலம் அன்னிய நேரடி முதலீட்டை கவரும் ஒரு பொறிமுறையாக கொள்ளப்பட்டதாகும். இக்கொள்கையின் மூலம் ஏற்றுமதிகள் கைத்தொழில் கொள்கையின் கீழ் நேரடி முதலீட்டிற்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. தீர்வைகள், வரிவிதிப்புக்கள் என்பவற்றில் சில மாற்றங்கள் மற்றும், ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இணைந்த வகையில் அந்நிய முதலீட்டை கவரும் ஒரு சாதனமாகவும், அவற்றின் நிர்வாக ரீதியான தேவைகளை வழங்குவதற்கும் முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை நிறுவுவதற்கும் அரசாங்கம் முன்வந்தது. பாரிய முதலீட்டை கவருவதற்கும் அதன் மூலம் ஏற்படக்கூடிய அரசியல் ரீதியான பிரச்சனைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டது. இது தொடர்பாக சேவையாற்றுவதற்கு இரண்டு அமைப்புக்கள் அமைக்கப்பட்டது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (Greater Colombo Economic Commission (GCEC) அந்நிய முதலீட்டு ஆலோசணைக்குழு (Foreign Invest-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ment Advisory Committee (FIAC) என்பன முதலீட்டு மேம்பாட்டு வலயங்களின் முகாமை, நிர்வாகம் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களாக உருவாக்கப்பட்டது. இவ்விரண்டு நிறுவனங்களும் சுதந்திர வர்த்தக வலயம் அதற்கு வெளியான நிலையங்களில் அமைக்கப்படும் வெளிநாட்டு முதலீட்டினை கண்காணிக்கும் பொருட்டு இரு தனி நிறுவனங்களாக உருவாக்கப்பட்டது. இவ் விரு அமைப்புக்களும் 1992ம் ஆண்டு வரை முதலீட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது. 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் பாராளுமன்ற திருத்தத்தின் மூலம் இரு சபைகளும் திருத்தப்பட்டு முதலீட்டுச் சபை (Board of Investment (BOI) எனும் அமைப்பு நிறுவப்பட்டு இன்றுவரை முதலீட்டு நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொண்டு வருவதனைக் காணமுடிகிறது.

## முடிவுரை

வெளிநாட்டு நேரடி முதலீடானது பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளில் வளர்ச்சியை துரிதப்படுத்துதல் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தல், முகாமைத்துவ திறன்களை வளர்த்தல், அபிவிருத்தி செய்தல், பயிற்சியுடைய தொழிலாளர் குழாமை உருவாக்குதல், ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல், அந்நிய செலாவணி நிலமையை மேம்படுத்தல், சென்மதி நிலுவை நிலமைகளை சீர்படுத்துதல் போன்ற நிலமைகளை அடைந்து கொள்ளும் நோக்கத்தினை முன்வைத்தே 3ம் மண்டல நாடுகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதன் மூலம் இந்நாடுகள் சிறந்த பெறுபேற்றினையும் பெற்றுள்ளது. எனினும் சில மூன்றாம் மண்டல நாடுகளில் காணப்படும் அரசியல் ரீதியான, பொருளாதார ரீதியான சில ஸ்திரத்தன்மை, மற்றும் உள்நாட்டுக் கலவரம் காரணமாக சில 3ம் மண்டல நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தாக்கம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்கவும் முடியாது. எவ்வாறெனினும் பொதுவாக நோக்கும் போது 3ம் மண்டல நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடு பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் பாரிய ஒரு பங்கினை வகித்து வருகிறது எனக் கூறினால் மிகையாகாது.

## உசாத்துணை நூல்கள்


1. மார்க்கம் மார்க்கா நிறுவனம் இதழ் 2 மலர் 1 1994.
2. *MENTOR VOL.I January 1995 Part.I.*
3. பொருளியல் நோக்கு ஜூலை 1994.
4. பொருளியல் நோக்கு ஆகஸ்ட் 1992.
5. *Srilanka Journal of Management Foreign Direct Investment in Srilanka. Direction for Policy, Institute of Managemen*t. Vol. 1 No 4, October - December 1996.
6. *Economic Progress of independent Srilanka Central Bank of Srilanka (1997)*
7. பொருளியல் நோக்கு மார்ச் 1997.
8. *Interalimal trade policy.*
9. *Central Bank report 1996.*
10. *Sri Lanka Economic Journal Vol 6, No2 September 1991.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்கள் சேவைகள் வரி (GST) - ஒரு அறிமுகம்

## அறிமுகம்:-

ஒரு நாட்டின் பேரினப்பொருளாதார நடவடிக்கைகளில் இறைத்தொழிற்பாடுகள் தொடர்பாக வரிமுறைகளும், அவற்றின் செயற்பாடுகளும் தனித்துவமான இடத்தைப்பெற்றுள்ளன. தனியார் துறைப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட சந்தைத்தோல்வி காரணமாக அரச நடவடிக்கைகள் பேரினப் பொருளாதாரத் தொழிற்பாடுகளில் அதிகம் விரிவடைந்து சென்றது. சாதன ஒதுக்கீடு, சமூகத்தில் சமமற்ற நிலையை ஒழித்தல் வருமானப்பங்கீடு சமத்துவத்தைப் பேணுதல், நீதியான வருமானப் பகிர்வினையும் பொருட்கள் சேவைகளின் பங்கீட்டையும் உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தின் அதிகரித்துச் செல்லும் விதியினை நடைமுறைப்படுத்துதல், அரசாங்க வருமானங்களையும் பெறுகைகளையும் உறுதிப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் பொருட்டு அரசாங்கம் பல்வேறு கொள்கைகளையும் அதற்காக வெவ்வேறு கருவிகளையும் பயன்படுத்துகின்றது. இவ்வாறான கொள்கைகளில் ஒன்றாகவே வரிக்கொள்கை இனம் காணப்படுகின்றது. பெரும்பாலான அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அரசாங்கங்களின் பிரதான வருமானம் மூலமாக வரி வருமானங்கள் காணப்படுகின்றன. இலங்கையொரு அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரமாக இருப்பதால் அத்தகைய பின்னணியில் இலங்கையின் வரி வருமானங்களில் நேர் வரிகளைக்காட்டிலும் நேரில் வரிகளே அதிகளவு செல்வாக்கு மிக்கவையாகக் காணப்படுகின்றன. குறிப்பாக பல சமூகப்பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் மொத்தக்கேள்வியை முகாமை செய்யவும் காலத்துக்குக் காலம் பொருளாதாரத்திலும், வருமானப்பகிர்விலும் ஏற்படும் பொருளாதாரத் தளம்பல்களை போக்கவும் இவ் இரு வரிமுறைகளும் சார்பு ரீதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் வரித்துறை வரலாற்றில் காலத்துக்குக்காலம் வெவ்வேறு வகையான நேரில் வரி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வந்துள்ள போதிலும் 1964ம் ஆண்டு முதல் 1998ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதிவரை நடைமுறையில் இருந்த புரள்வு வரியும் **( Turn Over Tax - TT )** வியாபார மொத்த விற்பனைப புரள்வு வரியும் **( Business Turn Over Tax - BTT )** செல்வாக்கு மிக்கவையாகக் காணப்பட்டன. இவ்வரிமுறைகள் நடைமுறையில் செயற்பாட்டு ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் பல குறைபாடுகளைக் கொண்டிருந்தமையால் அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக 1996ம் ஆண்டு 34ம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் பொருட்கள் சேவைகள் வரி **Goods and services Tax - Gst )** என்பது அறிமுகமானது. எனினும் 1997ம் ஆண்டு நவம்பர் மாதம் 5ம் திகதி நீதியமைச்சரினால் சமர்பிக்கப்பட்ட உத்தியோக பூர்வ வரவு செலவுத்திட்ட உரையில் இவ்வரி முறை 1998ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் திகதியில் இருந்து அறிமுகமாகும் எனப்பிரகடனப்படுத்தப்பட்டது.

பொருட்கள் சேவைகள் வரியானது பெறுமதி சேர்க்கை வரியெனவும் அழைக்கப்படுகிறது. **(Value Added Tax - VAT)** பலர் இவை இரண்டும் வேறுபட்ட வரிகள் எனக்கருதிய போதிலும் இப்பெயர்கள் குறிப்பிடும் வரிகளின் பண்புகள் ஒரே மாதிரியானவையாகவே காணப்படுகின்றன. சில நாடுகளில் இவ்வரிமுறை பெறுமதிச்சேர்க்கை வரி எனவும் (உதாரணம் கனடா சிங்கப்பூர்) வேறு சில நாடுகளில் பொருட்கள் சேவைகள் வரியெனவும் (உதாரணம் - நியூசிலாந்து, இலத்தீன் அமெரிக்கா) இன்னும் சில நாடுகளில் வணிக வரி எனவும் (உதாரணம் தாய்வான்) அழைக்கப்படுகின்றது. சர்வதேச ரீதியாக 80க்கு மேற்பட்ட அபிவிருத்தி அடைந்த , அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

## பசேவ (GST) என்றால் என்ன?

பண்டங்கள் சேவைகள் வரி என்பது “பண்டங்கள் அல்லது சேவைகளின் உள்ளூர்(Domestic)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வின் மீதான வரியாகும்” இவ்வரியானது இறக்குமதியின் ஆட்புல எல்லைகளுக்குள்ளான பண்டங்கள் சேவைகளின் வழங்கல் மீதும், இலங்கைக்குள இறக்குமதியாக்கப்படும் பொருட்கள் மீதும் விதிக்கப்படும். முதலீடு செய்யப்படும். வேளைகளிலன்றி இறுதி நுகர்வில் செலுத்தப்படும் வரியாக இது அமைகிறது. பண்டங்கள் சேவைகளின் உற்பத்தி மற்றும் பகிர்வுத்தொடரின் ஒவ்வொரு நிலையிலும் சேர்க்கப்படும் ஏற்றப்பெறுமதி மீது இவ்வரி அறவிடப்படுகின்றது. பண்டங்கள் சேவைகளின் மீதான வரியினை பண்டங்கள் சேவைகளின் இறுதி நுகர்வாளரே செலுத்துகின்றனர்.

உதாரணமாக 400 ரூபா பெறுமதியான உள்ளீடு ஒன்று விளை பொருளாகும் போது 500 ரூபா பெறுமதியாகிறதெனில் பண்டங்கள் சேவைகள் வரி சேர்க்கப்பட்ட பெறுமதியான (ரூபா 500 - 400=100) 100 ரூபா மீதே விதிக்கப்படும்.

ஏற்கனவே இருந்து வந்த மொத்த விற்பனவு வரிகளுக்குப் பதிலாக பண்டங்கள் சேவைகள் வரி அறிமுகப்படுத்தப்பட்டாலும். மாகாண சபைகள் அறவிட்டு வரும் வியாபார வரிக்குப் புறம்பானதாகவே இந்த வரி அமையும். அதாவது வாங்குதல் விற்றலுக்குரிய வரியை மாகாண சபைகள் தொடர்ந்தும் அறவிடும்.

## பசேவ யின் நோக்கங்கள்:-

இது நுகர்வின் மீது மாத்திரம் செல்வாக்குச்செலுத்தும் காரணியாகக் காணப்படுவதால் ஒரு நாட்டின் சேமிப்பு மட்டத்தையோ அல்லது முதலீட்டு மட்டத்தையோ அவற்றினூடாக ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சியையோ எந்த வகையிலும் பாதிக்காது. மறுபுறத்தில் ஏற்றுமதிகளை விரைவுபடுத்தவும் விரிவாக்கவும் உதவுவதாக அமையும்.

இந்த வரிமுறையானது சந்தைத் தொழிற்பாடுகளில் ஒரு போட்டிச் சூழலை உருவாக்குவதுடன் உலக சந்தைக்குத் தேவையான பொருட்களின் ஏற்றுமதியை உற்சாகப்படுத்துவதுடன் உள்ளூர் கைத்தொழில்களையும் மேலோங்கச்செய்யும்.

## இவ்வரி எவற்றிற்கு அல்லது எப்பொழுது செலுத்தப்பட வேண்டும்?

வரி விதிப்பிபுக்குரிய செயற்பாடொன்றினைக் கொண்டு நடத்தும் ஒருவர் இலங்கைக்குள் நிரம்பல் செய்யும் பொருட்கள் சேவைகள் மீதும் இலங்கைக்குள் இறக்குமதியாகும் பொருட்கள் மீதும் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தினால் விதிக்கப்படும் வரியாகவே ஏப்பிரல் மாதம் முதல் பண்டங்கள் சேவைகள் வரி அமுலாகியுள்ளது. அதாவது,

1. இறக்குமதிப்பொருட்கள் (சுங்கத்திணைக்களத்தினால் எவ்வளவு பெறுமதியோ அவ்வளவுக்கும் வரி செலுத்தப்படல்.)
2. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்கப்படும் போது வரி செலுத்துதல்.
3. சேவைகள் பெறப்படும் போது வரி செலுத்தப்பட வேண்டும். ( உ +ம் - தரகுக்கூலி, வைத்தியசேவை, தொலைத்தொடர்புச்சேவை.)

## வாங்குதல் விற்றல் 'நடவடிக்கை மீதான பசேவ:-

மொத்த விற்பனை, சில்லறை விற்பனையில் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் தவிர, பண்டங்களின் வழங்கலானது பசே வரிக்குட்பட மாட்டாது. எனினும் அத்தகைய வழங்கல்களின் வியாபாரமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய விருப்பின் அடிப்படையில் வரி செலுத்த விருப்புடைய பதிவுபெற்ற ஆளொருவர் பசேவ செலுத்த வேண்டியவராவார். பதிவு பெறாத ஆளொருவரும் விருப்பின் பேரில் பதிவு பெற்றவராகலாம்.

## GST யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட தொழிற்பாடுகள் எவை?

இது இரண்டு வகைப்படும் அவை

1. எல்லா வகையான ஏற்றுமதிகள்; பூச்சிய வரிவீதம். அதாவது வரி அறவிடப்படமாட்டாது.
2. வரிவிலக்கப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளும் (உள்ளூர் வழங்கல்கள்) இறக்குமதிகளின் வழங்கல்களும்.

## வரி விலக்களிக்கப்பட்ட பண்டங்கள் சேவைகள் (உள்ளூர் வழங்கல்கள)

01. தெங்குப் பொருட்களும், அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், தேயிலை வாசனைத்திரவியங்கள், மீன்பிடி உற்பத்திகள் வழங்கல்.
02. வெங்காயம், மிளகாய், மரக்கறி விதைகள் வழங்கல்.
03. அரிசி, கோதுமை வழங்கல்.
04. ஏதேனும் பாண் வழங்கல்.
05. பால், பால்மா வழங்கல்.
06. கொள்கலன், போத்தல்கள் தவிர வேறு வகையில் நீர் வழங்கல்.
07. மருந்தியல் உற்பத்திப்பொருட்கள் வழங்கல்.
08. கல்வி சார் சேவைகள் வழங்கப்படல்.
09. கருவாடு, மாசி வழங்கல்.
10. சீனி, சர்க்கரை வழங்கல்.
11. கிளிங்கர். சீமெந்து இறக்குமதி.
12. றொக்பொஸ்பேற்று உரம் இறக்குமதி.
13. சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய வழங்கல்.
14. நிதிச்சேவைகளை வழங்கல்.
15. கமத்தொழிலுக்கான உழவியந்திர வழங்கல்.
16. வதிவிட வசதிகளை வழங்கல், குத்தகைக்கு விடுதல்.
17. மரத்தினை வழங்கல்.
18. சகல சுகாதார நலன் சேவைகளை வழங்கல்.
19. நியமனத்திகதி தொடக்கம் இரண்டு ஆண்டுக்கு உல்லாசப்பயணிகளுக்கு விடுதிகளை வழங்கல்.

இவ்வாறு பண்டங்கள் சேவைகள் வரிச்சட்டத்தில் முதலாம் நிரலில் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களாக 30 விடயங்கள் காணப்படுகின்றன.

## வரி விலக்களிக்கப்பட்ட இறக்குமதிகள்:-

01. தெங்குப்பொருட்களும், அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், தேயிலை, வாசனைத்திரவியங்கள், மீன்பிடி உற்பத்திகள் இறக்குமதி.
02. உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், மரக்கறி விதைகளின் இறக்குமதி.
03. அரிசி, கோதுமை, வேறு தானிய இறக்குமதி.
04. ஏதேனும் பாணின் இறக்கமதி.
05. பால், பால்மா இறக்குமதி.
06. மருந்தியல் உற்பத்திப்பொருள் இறக்குமதி.
07. புதினத்தாள், சஞ்சிகைகள் தவிர்ந்த வேறு புத்தகங்களின் இறக்குமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. கருவாடு. மாசி இறக்கும்தி.
09. சீனி , சர்க்கரை இறக்குமதி.
10. மண்ணெண்ணை, டீசல், திரவப்பெற்றோலிய வாயு இறக்குமதி.
11. கிளிங்கர், சீமெந்து இறக்குமதி.
12. பொஸ்பேற்று உரம் இறக்குமதி.
13. சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய எண்ணெய் இறக்குமதி.
14. கமத்தொழில் பயன்பாட்டு உழவியந்திர இறக்குமதி.
15. மரத்தினை இறக்குமதி செய்தல்.

முதலான 25 விடையங்களுக்கு இறக்குமதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

## பொது விலக்களிப்புக்கள்:-

எவரேனும் ஆளொருவரினால் காலாண்டொன்றில் மேற்கொள்ளப்படும் வரி விதிப்புக்குரிய வழங்கல்களின் மொத்தப்பெறுமதி ரூபா 5 இலட்சம் அல்லது ஆண்டொன்றில் ரூபா 18 இலட்சத்தை விஞ்சாத விடத்து அத்தகையவர் பசே வரி செலுத்த வேண்டியவர் அல்லர். எனினும் அவர் சுய விருப்பின் அடிப்படையில் பசே வரிக்கென தம்மைப் பதிவு செய்து கொள்ளும் உரிமையுடையவராவார்.

அதாவது ஒரு தொழில் முயற்சியாளனின் மொத்த விற்பனை அல்லது சேவை வழங்குவோன் அல்லது இறக்குமதி செய்து வினியோகிப்பவனின் மொத்த விற்பனை 5 இலட்சத்திற்கும் மேல் அதிகரித்தால் மாத்திரமே அவன் இந்த வரியைச்செலுத்தவேண்டும். ஏனையோர் செலுத்தத்தேவையில்லை. ஆனால் வரி செலுத்துவதிலிருக்கும் பல்வேறு நன்மை கருதி தொழில் முயற்சியாளன் ஒருவன் தானே முன்வந்து தன்னை வரி செலுத்துபவனாக பதிவு செய்துகொள்ள முடியும். இப்படி பதிவு செய்து கொண்ட சகலரும் வரி செலுத்த வேண்டியது கட்டாயமாகும். ஆனால் இரண்டு வருடத்தின் பின் இத்தகையவர் வரி செலுத்துவதில் இருந்து தம்மை விடுவிக்குமாறு கோரலாம். விடுவிப்பதும் விடாததும் இறை வரித்திணைக்களத்தின் தற்றுணிபுக்குட்பட்டது.

## பசே வரிக்கென பதிவு பெற வேண்டியவர் யார்?

இதில் பதிவு பெற வேண்டியவர்களாக 3 வகுதியினர் காணப்படுகின்றனர்.

01. இறக்குமதியாளரொருவர் உட்பட எவரேனும் ஆளின் வரி விதிப்புக்குரிய வழங்கல்கள்
    அ) ஏதேனும் காலாண்டொன்றில் ரூபா 5 இலட்சத்தினை விஞ்சின் அல்லது
    ஆ) இறுதி நான்கு காலாண்டுகளிலும் ரூ.18 இலட்சத்தினை விஞ்சின்.
    இ) காலாண்டொன்று ரூபா 5 இலட்சத்தினை விஞ்சும் சாத்தியம் இருப்பின்.
    ஈ) நான்கு அடுத்துவரும் காலாண்டுகள் ரூபா 18 இலட்சத்தினை விஞ்சும் சாத்தியம் இருப்பின்.
02. இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் பண்டங்களின் ஏதேனும் இறக்குமதி.
03. சுய விருப்ப அடிப்படையில் பதிவு பெறுவதற்கு விண்ணப்பிக்கும் வேறு எவரேனும் ஆள்.

## பசே வரியின் வீதம் என்ன?

பசே வரி வீதங்கள் 3 வகைப்படும். அவை

01. நியம வீதங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. சலுகை வீதங்கள்.

03. ஏற்றுமதிகளுக்கு மட்டுமான பூச்சிய வீதம்.

இலங்கையில் நியம வீதங்களாக 12 சத வீதமே அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் பிரதி நிதி அமைச்சர் 12 சத வீதமாக இவ்வரி அமையும் என அறிவித்திருந்தார். எனினும் இது தற்பொழுது 12.5 சத வீதமாக நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்றுமதி செய்யப்படும் அல்லது ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்ட பண்டங்களே பூச்சிய வரி வீத வழங்கல்களாகும். பூச்சிய வரி வீத வழங்குனர்கள் அவர்கள் செலுத்திட சகல உள்ளீட்டு வரிகளிலிருந்தும் விலக்குப்பெற உரித்துடையவர் ஆவர்.

## வரி விளக்க விலைப்பட்டியலின் அவசியம்:-

வரி விளக்க விலைப்பட்டியலொன்று பசேவ நோக்கங்களுக்காக தேவைப்படும் பதிவு பெற்றவர்களிடையே வழங்கப்பட்டதும், பெறப்பட்டதுமான பண்டங்கள் மற்றும் சேவைகளின் முக்கிய பதிவொன்றாகும். சகல பதிவு பெற்ற ஆட்களினதும் உள்ளீட்டு வெளியீட்டு (விளைபொருள்) வரிகளுக்கென கணக்குக் காட்டும் அடிப்படையில் அமைந்தது.

பசேவ சட்டத்தின் கீழ் பண்டங்கள் சேவைகளைப் பெறும் ஒருவர் கோரும் உள்ளீட்டு வரி வரவினை ஆதாரப்படுத்தும் வகையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அமைந்த வரி விலைக்கப்பட்டியலொன்றினை வைத்திருத்தல் மிக அவசியமாகின்றது.

அதாவது முன்னர் மொத்த விற்பனவு வரி ஒரு நிறுவனத்தில் இடம்பெற்ற மொத்த விற்பனையின் அளவைக்கொண்டு கணிக்கப்பட்டு அறவிடப்பட்டது. ஆனால் பசேவ ஆனது உண்மையில் ஒரு நிறுவனத்திடமிருந்தோ, நபர்களின் மீதோ விதிக்கப்படவில்லை. அது முற்றிலும் நுகர்வோர் மீதே விதிக்கப்படுகின்றது. வர்த்தகர் வெறுமனே நுகர்வோரிடம் இருந்து அவற்றை வசூலித்து மீண்டும் இறை வரித் திணைக்களத்திடம் கையளிக்கும் இடையீட்டாள்னாகவே உள்ளான். எனவே நுகர்வோர் வர்த்தகரிடம் வரி செலுத்துவதற்கு வசதியாக அவன் மேற்படி வரியை அறவிடுவதற்கு தன்னைத் திணைக்களத்திடம் பதிவு செய்துள்ளானா? என்பதனை பறை சார்ற்ற வேண்டும். இதன் பொருட்டு திணைக்களம் வழங்கியுள்ள அனுமதிப்பத்திரத்தினை பகிரங்கமாக வைக்க வேண்டும். அனுமதிப்பத்திரம இல்லாதோர் **GST** ஐ வசூலிப்பது குற்றமாகும்.

பதிவுசெய்யப்பெற்றவர் ஒருவரினால் வழங்கப்படும் வரி விளக்கப்பட்டியலில் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் அவசியமாகும்.

- வழங்குனரின் பெயர்.
- வழங்குனரின் முகவரி.
- விலை விளக்கப்பட்டியலினதும் வழங்களினதும் திகதி/ திகதிகள்.
- தொடரிலக்கம்.
- பசேவ பதிவு இலக்கம்.
- பசேவ அளவு.
- வழங்கலினது விபரமும் பெறுமதியும்.
- விதிக்கப்படும் பசே வரியின் வீதமும் தொகையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தேசிய பாதுகாப்பு அறவீடு.
* வழங்கலுக்கான கருதப்பட்ட விலை.

என்பனவாகும்.

## பசேவ யும் அதன் பொருளாதாரத் தாக்கங்களும்:-

1998 ஏப்பிரல் முதலாம் திகதிக்கு முன் அமுலில் இருந்த மொத்த விற்பனை புரள்வு வரியின் பல குறைபாடுகள் காரணமாகவே பண்டங்கள் சேவைகள் வரி அமுலாக்கப்பட்டது. மொத்த விற்பனை புரள்வு வரியில் "வரிக்குவிப்பு" காணப்படுகின்றது. உற்பத்திப் பங்கீட்டு சங்கிலித்தொடரில் ஒவ்வொரு நிலையிலும் விற்பனை விலையில் விதிக்கப்படுகிறது. இதனால் உண்மை வரியானது நியமிப்பு வீதத்திலும் பார்க்க அதிகமாகவுள்ளது. இதனால் பொருட்களின் விலை மட்டம் அதிகரித்து பணவீக்கம் ஏற்படக் காரணமாகிறது. ஆனால் பசேவ ஒவ்வொரு நிலையிலும் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படுவதால் இக்குறைபாட்டினைத் தவிர்க்கிறது. அதாவது பொருட்கள் கைமாறும் போது மொத்த விற்பனை வரி பலமுறை அதிகரிக்கப்படுவது போல் பண்டங்கள் சேவைகள் வரி அமுலாக்கலின் போது ஏற்படுவதில்லை. ஒருமுறை அறவிடப்பட்டால் இரண்டாம் முறை அறவிடுவது தவிர்க்கப்படும். ஆனால் ஆரம்பத்தில் இருந்த ஒரு பொருளின மதிப்பிலும் பார்க்க பின்னர் மதிப்பு ஏற்பட்டிருந்தால் **(Value Adition)** ஏற்பட்ட மதிப்புக்கு மாத்திரம் பின்னர் வரி விதிக்கப்படும்.

பொருட்கள் சேவைகள் வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் வாடிக்கையாளர் மத்தியில் பொதுவாக எல்லாப்பொருட்களின் விலையும் உயர்ந்து அவர்களுக்கு ஒரு சுமையை ஏற்படுத்தும் என்ற கருத்து நிலவிய போதும். அது முற்றிலும் தவறாகும். ஏனெனில் **BTT, TT** நடைமுறையில் இருந்த போது அவற்றினுடைய வரி விதிப்பு வீதம் 8%, 12%, 18% என்ற அடிப்படையில் பேணப்பட்டது. ஆனால் **GST** முறையானது 12.5% என்ற ஒரு பொதுவான அளவை பேணுவதனால் ஏனைய வரிகளில் காணப்பட்ட சுமையை விட குறைந்தளவான சுமையையே இவ்வரி கொண்டுள்ளது. மேலும் பல்வேறு விதி விலக்குகளுடன் ஒப்பிடும் போது பொதுவாக வரிக்குறைப்பே உண்மையில் இடம் பெற்றுள்ளது. இதனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கணிசமான அளவு வரி இழப்பையும் எதிபார்க்கின்றது.

பசே வரி செலுத்துவதற்கான காலாண்டுக்கான மொத்த விற்பனைத் தொகை 5 இலட்சம் மட்டுமே. இது வருடத்துக்கு 18 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பு **BTT** இன் கீழ் இருந்த எல்லை ஒரு இலட்சமாக (100.000) இருந்தது. இதனால் 18 இலட்சத்துக்கு குறைவாக விற்பனை செய்வோர் வரி செலுத்தத் தேவையில்லை. எனவே முன்பு **BTT** செலுத்தியோர் இப்போது 18 இலட்சம் வரை விலக்களிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பொருட்களின் விலைகளை விரும்பினால் குறைக்கலாம். அதே போல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் வேறும் பல வரி விலக்கு அளிக்கப்பட்ட பண்ட உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள் தமது பொருட்களின் விலைகளைக் குறைக்கலாம்.

பொருட்கள் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்படும் 1998 ஏப்பிரல் முதலாம் திகதியிலிருந்து BTT வரிமுறை இல்லாமல் செய்யப்படுகின்றது. அதே சமயம் ஏற்கனவே தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது செலுத்தப்படாத எஞ்சிய வரித்தொகையைச் செலுத்துவதற்கான காலக்கெடு 31-மார்ச்-1998ல் முடிவடைந்த போதிலும் அவற்றைச் செவுலுத்துவதற்கான காலம் மேலும் 6 மாதங்கள் நீடிக்கப்பட்டது. ஆனால் இலங்கையின் அனுபவத்தில் எஞ்சியுள்ள வரிகளை வசூலிப்பதற்கான காலக்கெடு சில சமயம் 5-10 வருடங்கள் வரை இருப்பதனால் இது ஒரு புறத்தில் தயாரிப்பு தொழில் முயற்சிகளைப் பாதிப்பதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்புத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரைப் பொறுத்தவரையில் சாதகமான நிலை யாதெனில் இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தயாரிப்புத்தொழில் முயற்சியாளர்கள் காலத்துக்குக்காலம் வெவ்வேறு பெயர்களில் இறக்குமதிகளை மேற்கொள்வதன் மூலம் தமக்களிக்கப்பட்டுள்ள சலுகையை அடிப்படையாகக்கொண்டு GST வரிமுறையில் இருந்து விலக்குப்பெற முடியும். உள்ளூர் தயாரிப்பாளர்களைப்பொறுத்தவரை யில் பொருட்கள் சேவைகள் வரியானது செலவையும் இலாபத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் செலவுக்கு மாத்திரமே வரி செலுத்துகிறார்கள். இதனால் தயாரிப்புப் பொருட்களை இறக்குமதி செய்யும் வியாபாரிகளோடு உள்ளூர் உற்பத்தியாளர்களை ஒப்பிடும் போது அவர்கள் பாதிக்கப்படுவதனால் அவர்களது தொழில் முயற்சியை மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

GST வருவதற்கு முன்னர் இருந்த BTT வரிமுறையானது உள்நாட்டுத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்குத் தேவையான பொருட்கள் சேவைகளை வழங்கும் போதும் அவர்கள் தமக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்யும் போதும் அவற்றிற்கு விலக்களிக்கப்பட்டது. ஆனால் பொருட்கள் சேவைகள் வரி உள்ளூர் தயாரிப்பாளர்கள் நிரம்பல் செய்கின்ற பொருட்களுக்கும் அத்தயாரிப்பிற்குத்தேவையான சில வகையான பொருட்களை இறக்குமதி செய்கின்ற போதும் வரி விதிப்பதனால் இது சில சந்தர்ப்பங்களில் உள்ளூாக் கைத்தொழிலைப் பாதிப்படையச்செய்யும். எவ்வாறாயினும் அரசாங்கம் இவ்வாறான தயாரிப்புத்தொழில் முயற்சிகளுக்கு சில வகையான விதி விலக்குகளை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பண்டங்கள் சேவைகள் வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் உற்பத்தியாளர்கள் மத்தியில் இது உள்நாட்டுக்கைத் தொழிலைப் பாதிப்படையச் செய்யும் என்றும், உள்நாட்டுக்கைத் தொழில் முயற்சியாளருக்கு ஒரு சுமையாக அமையும் என்றும் கருதப்படுகிறது. இதில் இரண்டு நிலையான கருத்து நிலைகள் காணப்படுகின்றன.

01. சில வகையான உள்நாட்டுக்கைத் தொழில் வளர்ச்சிகளை பொருட்கள் சேவைகள் வரி பாதிப்படையச் செய்யும் என்பதும்.
02. உள்நாட்டுக்கைத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதி சார் கைத்தொழில் நிறுவனங்களுக்கு இவ்வரிமுறை ஊக்குவிப்பாக அமையும் என்பதாகும்.

மேலும் அரசியல் ரீதியாகச் சிந்திப்போர் அரசாங்கத்தினதும் அதன் நிர்வாகத்தினதும் அதிகார நிலை பற்றி எடுத்துக் காட்டுகின்றனர். அதாவது இவ்வரிமுறையை நடைமுறைப்படுத்துவதில் பக்கச் சார்பு அல்லது பாரபட்சம் பேணப்படலாம். அதாவது அரசாங்க அதிகாரத்தில் உள்ளவர்கள் தமது சார்பு நிலையைப் பயன்படுத்தி இத்தகைய வரி முறையிலிருந்து விலக்குப் பெறுவர். இதனால் அரசாங்கத்துக்கு எதிரான கட்சியிலுள்ள பல முயற்சியாளர்கள் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டாகும்.

## முடிவுரை:-

தாராளப்பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றி வரும் எமது நாட்டில் கடந்த கால அரசினால் இப்பண்டங்கள் சேவைகள் வரி பற்றி சிந்திக்கப்பட்ட போதிலும் அதனை அவர்கள் செயற்படுத்தவில்லை. தற்பொழுது ஆட்சியில் இருக்கும் அரசே இதனை அமுல் படுத்த முன்வந்தது. 1996ம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டு கடந்த 1997ம்ஆண்டு அமுலாக்கவிருந்த போதிலும் இவ்வருடம் ஏப்பிரல் மாதமே அது செயல் வடிவம் பெற்றது. ஐரோப்பிய சமூக நாடுகளும் இவ்வரியினைப் பின்பற்றி வருவதுடன் இவற்றுடன் இணைய விரும்பும் நாடுகளுக்கான தகுதியாகவும் இதனை வலியுறுத்தியுள்ளன. ஆனாலும் அமெரிக்கா, அவுஸ்திரேலிய நாடுகள் இன்னமும் பசேவ ஐ அமுலாக்கவில்லை என்பது இங்கு முக்கியமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக நமது நாட்டில் அமுலாகியுள்ள பசேவயானது நன்மையானது எனக்கூறப்பட்டுவந்தாலும் அதன் முழுமையான (உண்மையான) தாக்கங்களும் விளைவுகளும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளின் வெற்றியிலேயே தங்கியுள்ளது.

## உசாத்துணை நூல்கள்:-


01) பண்டங்கள் சேவைகள் வரிக்கான ஒரு அறிமுகம்.
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்.

02) பொருளியல் நோக்கு 1996-யூன்/ யூலை.
இலங்கையும் பொருட்கள் சேவைகள் வரியும்
பீ.குருகே - பக்கம்:27

03) வீரகேசரி - 1998 - மார்ச் - 26
அறிமுகப்படுத்தப்படவுள்ள பொருட்கள் சேவைகள்
வரி: இரா.சடகோபன்

04) வீரகேசரி - 1998 - மார்ச்
பண்டங்கள் சேவைகள் வரி
ஐ.நடேசன்

05) வீரகேசரி - 1998 - மார்ச் - 22
புதிதாக அறிமுகமாகும் பொருட்கள் சேவைகள் வரி
ந.கருணையானந்தன்

06) **The Sunday Times 1998 - March - 29**
**GST a Threat to Local Industrialists**
**H.Samarasekera.**

07) **The Sunday Times 1998. April 26**
**Gst Everythings you wanted to know**
**By: Priyantha Gamage**



**Miss.Pakkiyathurai-Arularasi**
**Economics - Special**
**3rd Year**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERNET

# நவீன தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் இன்ர நெற்

ச.பரமேஸ்வரன்
இரண்டாம் வருடம்
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

(Internet) இன்ரநெற் எனப்படுவது பல இலட்சக்கணக்கான கணனிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் அமைப்பில் இருந்து தகவல்களை (படங்கள், சித்திரங்கள், எழுத்துக்கள், வரைபுகள், வடிவில்) பரிமாற்றிக் கொள்ளும் அமைப்பாகும். இவ்வலையமைப்பிற்கு சாதாரண தொலைபேசி இணைப்புக்களே பயன்படுத்தப்படுகிறது. இவ் இன்ரநெற் ஆனது 1960 ஆம் ஆண்டளவில் அமெரிக்க இராணுவத்துறையினால் இராணுவங்களுக்கிடையிலான தொடர்பாடல்களுக்காக அமைக்கப்பட்ட (ARPA'NET) ஆர்ப்பானெற் எனும் நெற்வேக்கில் இருந்து வளர்ச்சியடைந்தது எனலாம். தற்போது இன்ரநெற் துரித கெதியிலான வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதே வேளையில் இது தனிப்பட்டவர்களுக்கோ, எந்த ஒரு நிறுவனங்களுக்கோ அல்லது எந்த ஒரு அரசிற்கோ சொந்தமானதில்லை எவரும் தமது என்று உரிமை கொண்டாட முடியாது.

பெரிய நிறுவனங்களோ பல்கலைக்கழகங்களோ தமது நிறுவனத்தினுள் உள்ள பல கணனிகளை வயர்கள் (Cable) மூலம் இணைத்து செயற்படுவதனை உள்ளக தகவல் வலைப்பின்னல் ( Local Area Network) LAN எனவும் இவ்வாறான நிறுவனங்களின் உள்ளக வலைப்பின்னல்களை ஏனைய நிறுவனங்களுடன் தொலைபேசி இணைப்பு மூலம் வலையமைப்பு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல் விசால தகவல் வலைப்பின்னல் (Wide Area Newtwork) WAN எனவும் அழைப்பர். இவ்வாறான WAN களின் இணைப்பே இன்ரநெற் (Internet) ஆகும்

## இன்ரநெற்றில் தகவல்கள் அனுப்பப்படும் முறை:-

இன்ரநெற்றின் மூலம் தகவல்கள் பரவ, கணனிகள் இந்த தகவல்களை சிறு சிறு துண்டுகளாக்குகிறது. துண்டாக்கப்பட்ட தரவுகள் (Packet) பக்கட் எனப்படும். இப் பேக்கட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனியிலிருந்து மோடம், தொலைபேசி லைன்கள் மூலம் இன்னுமோர் இடத்திலுள்ள கணனிக்கு அனுப்பப்படுகிறது. இன்ரநெற்றில் இந்த (Packet) வெவ்வேறு நெற்வேக்குகளில் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி வெவ்வேறாக பயணம் செய்கின்றன. எங்குபோய்ச் சேரவேண்டுமோ அங்கு இந்த பக்கட்டுகள் வரிசைப்படுத்தி ஒன்றாக இணைத்து தகவலாக மாற்றப்படுகிறது. கணனியில் இன்ரநெற்றிக்கு ரிசிபி/ஐபி (Transmission Control Protocol / Internet Protocol) எனும் தகவல் பரிமாற்ற முறையே பயன்படுத்தப்படுகின்றது. இந்த ரிசிபி/ஐபி மூலம் இன்ரநெற் வலையமைப்பிலுள்ள எந்தவொரு கணிப்பொறியும் மற்றொரு கணிப்பொறியுடன் தொடர்பு கொள்ள முடியும்.

## இன்ரநெற்றின் பயன்பாடுகள்:-

இன்ரநெற்றின் பயன்பாடுகளை எழுதுவதாயின் பெரிய ஒரு பட்டியலே தயாரிக்கலாம். அவற்றுள் சில முக்கிய பயன்பாட்டினைப் பார்க்கலாம்.

### 1. ஈமெயில் E – Mail (Electronic Mail) :-

இன்ரநெற் இணைப்புள்ள கணனிப்பாவனையாளர்கள் தங்களுக்கிடையிலேயான கடிதத்தொடர்பினை மேற்கொள்ள வேண்டி ஏற்படின், கணனி ஊடாகக்கடிதங்கள் ஒரு சில நிமிட நேரத்தில் உலகின் எப்பாகத்திற்கும் அனுப்ப முடியும். இவ்வாறு ஈமெயில் மூலம் கடிதப்பரிமாற்றம் செய்ய வேண்டும் எனில் அதற்கு இமெயில் விலாசம்; (E-Mail Address) தேவை. இது ''qpsc @ Sri Lanka". Net இவ்வாறான ஒரு வடிவமைப்பில் அமைந்திருக்கும் இவ்விலாசமானது நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடும். E - Mail ஆனது அஞ்சற்துறை அஞுசல் பெட்டி Post Box போன்ற. டினை உங்களுக்கு தெரிந்திருந்தால் E – Mail ன் செயற்பாட்டினை மிக எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் ஒரு அஞ்சற் பெட்டியை பெற வேண்டும் என தீர்மானித்துள்ளீர்கள் என் வைத்துக் கொள்ளின் நீங்கள் அஞுசற்துறையில் பணம் கட்டினால் அவர்களால் ஒரு அஞ்சற் பெட்டியும் அதற்கான இலக்கமும் ஒதுக்கப்படும். ஒதுக்கப்பட்ட பெட்டியில் தங்களுக்கான கடிதங்கள் தபாலகத்தினால் போடப்படும் தங்களுக்கு நேரம் கிடைக்கும் போது பெட்டியைத் திறந்து கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதே போன்று E – Mail சேவையினை பெற விரும்பின், இன்ரநெற் சேவை வழங்குனரிடம் ISP ( Internet Service Provider) பணம் கட்டி அங்கத்தவரானால் அவர்கள் கணனியில் உங்களுக்கு ஒரு தபால் பெட்டி (Mail Box) ஒதுக்குவார்கள் பெட்டிக்கான விலாசமும் தங்களுக்கு தரப்படும். அம்முகவரியினை தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு கொடுத்தால் அவர்கள் உங்கள் E – Mail Addressக்கு கடிதங்களை அனுப்பத்தொடங்குவர். ISPயினரிடம் கிடைக்கும் கடிதங்கள் உங்களுக்குரியவை உங்கள் தபால் பெட்டியில் பாதுகாப்பாக சேகரிக்கப்படும். பின்னர் நீங்கள் விரும்பிய நேரத்தில் கடிதங்களைப் பார்க்கலாம். தேவையற்றவற்றை நீக்கிவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்மைகள் :

- உலகின் எந்தவொரு பாகத்திற்கும் ஓரிரு நிமிட நேரத்தில் கடிதங்களை அனுப்பலாம் / பெறலாம்.
- எத்தனை ஆயிரம் கடிதங்களாயினும் பெட்டியில் சேகரிக்கலாம்.
- பாதுகாப்பானது (இரகசியத்தன்மை பேணக்கூடியது)

## 2. FTP FILE TRANSFER PROTOCOL (கோவை இடமாற்றல்)

FTP அமைப்பின் மூலம் ஒரு கணிப் பொறியில் இருந்து மற்றொரு கணிப்பொறிக்கு தகவல்களைப் பரிமாற்ற முடியும். இங்கு ஒரு கணனியில் இருந்து மற்றொரு கணனிக்கு கோவையில் சேர்க்கப்பட்ட தகவல்கள் முழுமையாகவே அனுப்பக் கூடிய வசதி உள்ளது.

## 3. யூஸ் நெற் நியூஸ் (Use Net News)

இவ்வமைப்பு மூலம் உலகில் நடைபெறும் அன்றாட முக்கிய நிகழ்ச்சிகளின் செய்தித் தொகுப்பினை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும். புதிய படைப்புக்கள், வெளியீடுகள் பற்றிய செய்திகளையும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

## 4. World Wide Web ( வேல்ட் வைட் வெப் ) W.W.W

இவ்வமைப்பு மூலம் ஆராட்சியாளர்கள், தொழில் நுட்பவல்லுனர்கள், வர்த்தகர்கள் மற்றும் அனைத்து துறையினரும் அவர்களது துறைபற்றிய தகவல்களை இதன் மூலம் உலகில் உள்ள அனைத்து மக்களும் பெறும் வகையில் பரப்ப முடியும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை விட இன்ரநெற்றில் மேலும் பல வசதிகள் உள்ளது. IRC (Internet Relay Chat, Multimedia Connection Facilities). போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

- இன்ரநெற் தொடர்பு ஒன்றினைப் பெற்றுக் கொள்ள எமக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகள்:-

1. மிகக் குறைந்தது 486 கணனி (கணனியின் அளவு 80486)
2. மோடம் (Modem) குறைந்தது 14.4 kps
3. தொலைபேசி இணைப்பு
4. இன்ரநெற் அக்கவுண்ட் (Internet Account)
5. தொலைத்தொடர்பு கணனித்தொகுப்பு (Communication Software Package)


மேற் கூறப்பட்டவற்றில் கணனியின் அளவு, தொலைபேசி இணைப்பு என்பனபற்றி நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். எனவே ஏனைய விடயங்களைப்பற்றி விளக்கமாக பார்க்கலாம்.

## (அ) மோடம் (Modam)

இன்ரநெற் தொடரில் மோடத்தின் பங்கு மிக முக்கியமானது. இது கணனியையும், தொலைபேசி இணைப்பையும் இணைக்கும் முக்கிய கருவியாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதாவது மேற்படி படத்தில் காட்டியவாறு மோடம் தொலைபேசி இணைப்புக்கும், கணனிக்கும் இடையே இணைக்கப்பட்டுள்ளது

உலகிலே இரண்டு வகையான சிக்னல்கள் உள்ளது. ஒன்று Digital டிஜிட்டல் (எண்ணியல்) மற்றையது Analogue அனலொக் (ஒப்புமை) இதில் கம்பியூட்டருக்கு தேவையானது Digital சிக்னல்கள் ஆனால் தொலைபேசி இணைப்புக்கள், நெற்வேக்குகள் ஆகியவற்றிற்கு Analogue சிக்னல்களே தேவை.

எனவே மோடம் ஆனது கணனியில் இருந்து வெளிப்படுகின்ற Digital சிக்னல்களை வாங்கி அதனை Analogue சிக்னல்களாக மாற்றி தொலைபேசி லைன்களுக்கு அனுப்புகிறது. இச்செயற்பாடு (Modulation) மொடியுலேசன் ஆகும். மாறாக, தொலைவேசி லைன்களில் இருந்து வரும் Analogue சிக்னல்களை அடுத்த முனையிலுள்ள மோடம் வாங்கி அதனை Digital ஆக மாற்றி கணனிக்கு வழங்குகின்றது. இச்செயற்பாடு (Demodulation) டிமொடியுலேசன் எனப்படுகின்றது. இவ்விரு செயற்பாட்டினையும் செய்வதனால் இதனை Modem என அழைக்கப்படுகிறது. Modulation எனும் சொல்லின் MO வும் Demodulation எனும் சொல்லின் Dem வும் சேர்ந்தே Modem எனும் சொல் உருவானது.

## (ஆ) தொலைத் தொடர்பு கணனித் தொகுப்பு (Communication Software Package):-

கணனியில் நாம் செய்ய வேண்டிய எந்தவொரு விதமான செயற்பாட்டிற்கும் மென்னுருப்பு தேவை. இது செயற்பாட்டின் தன்மையைப் பொறுத்து வேறுபடும். அதே போன்று தொலைத்தொடர்புக்கும் ஒரு மென்னுருப்பு தேவை. உதாரணமாக கடிதம் வரைதல், அறிக்கை எழுதுதல், போன்ற தேவைகளுக்கு WP51. Win Word போன்றவையும், கணக்கியல் தொடர்பான வேலைகளுக்கு Lotus 123, Excel போன்றவையும், தொலைத் தொடர்பிற்கு Quick link போன்றவற்றையும் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) இன்ரநெற் அக்கவுண்ட் (Internet Account):-

இன்ரநெற் வசதியை உலக அரங்கில் உள்ள வெப் தளங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள நமது கணனிக்குத் தகவல்களை வழங்க என அங்கீகரிக்கப்பட்ட ISP (Internet Service Providers) இருக்கிறார்கள் இவர்களிடம் நாம் பணம் கட்டி Account திறப்பதன் மூலமே உலகிலுள்ள தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### இலங்கையில் இச்சேவையைச் செய்யும் சில நிறுவனங்கள்:-

- Sri Lanka Telecom
- ITMIN
- Cey Com
- Lanka Internet
- Pan Net working

ஏனைய நிறுவனங்களின் Internet Account விபரம் பார்ப்பதற்கு ISP யினரை அனுகினால் பெற்றுக் கொள்ளலாம். உதாரணத்திற்கு சில விபரங்கள்.

- தமிழ் சினிமா பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ள http: // WWW . Tamil cinema.com. க்குப் போக வேண்டும்.
- ஒஸ்கார் விருதுகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள http : // WWW Oscar.com . க்குப் போக போகலாம்.

இதேபோன்று உலகின் சகல நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

இன்ரநெட்டில் பலவிதமான அதிசயிக்கக் கூடிய நன்மைகளை மனிதன் பெற்றுக்கொள்ளும் அதேவேளை சில தீய விளைவுகளும் ஏற்படுகின்றன. இவற்றில் முக்கியமாக கணனிகளின் செயற்பாடுகளைக் குழப்பக்கூடியவகையில் இன்ரநெற் ஊடாக பரவும் புழுக்களைக் (Worms) குறிப்பிடலாம். இப்புழுக்களானது Software Package களைப் பாதிக்கும் வைரசுக்களிலும் மிக வேகமாக கணனிச் செயற்பாடுகளை பாதிக்க வைக்கின்றது. இப்புழுக்களானது மூன்று வகையாக உள்ளது. வைரஸ் புரொக்கிராம்கள் வேறு ஏதாவது புரொக்கிராமுடன் சேர்ந்தே தொல்லை கொடுக்கும். ஆனால் Worms தானாகவே இயங்கும் தன்மை கொண்டவை. இனி வைரஸ் எதிர்ப்பு தொகுப்புகளுக்குப் பதிலாக புழு அழிப்பு (Worms killing) தொகுப்புக்கள் உருவாக்கப்பட்டு விற்பனையாகும்.

கணனியின் வளர்ச்சியானது நாளுக்கு நாள் போட்டிபோட்ட வண்ணம் மிக வேகமாக விருத்தியடைந்து செல்கின்றது. இதனடிப்படையில் அடுத்த முயற்சியாக 'Digital Homes' எனப்படும் செயற்பாட்டினை கண்டுபிடித்து செயற்படுத்தும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.Digital



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Homes' எனப்படுவது ஒரு வீட்டில் உள்ள சகல இலத்திரனியல் சாதனங்களும் கணனி முறையில் இயங்க வைக்கும் முயற்சி ஆகும். மிக விரைவில் இதனை எதிர்பார்க்கலாம் என நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையின்மையும் இலங்கையும் அதன் அண்மைக்கால போக்குகளும்......

மூன்றாம் மண்டல நாடுகள் அனைத்தும் தற்போது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாய் உள்ளது. அந்த வகையில் இன்நாடுகள் பல்தரப்பட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றது. அப்படி இருந்தும் இப்பிரச்சனைகள் சவாலாகவே இருந்து வருகின்றது. அவையாவன சனத்தொகை பிரச்சனை, உணவுப்பிரச்சனை வேலையில்லாப்பிரச்சனை, தங்கி வாழ்வோர் அதிகரித்துக் காணப்படல், சுகாதார பிரச்சனை, பணவீக்கம் , பணச்சுருக்கம், வறுமை, வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை பிரச்சனை போன்றவற்றை கூறினும். இவற்றுள் வேலையில்லாப்பிரச்சனை மிகவும் முக்கிய இடத்தை பெறுகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் சுதந்திரத்துக்கு முன்னரும், பின்னரும் மிகவும் பார துாரமான பிரச்சனையாக நிலவிக் கொண்டிருக்கிறது, இதனால் வேலையின்மை நிலமை பற்றி நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

வேலையின்மை என்பது குறித்த நாட்டில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தொழிலில் ஈடுபடும் வயதை உடையவர்களில் தொழிலில் ஈடுபடுத்தபடாமல் இருப்பவர்களின் எண்ணிக்கையை குறித்துக் காட்டுகின்றது. அதாவது வேலை செய்ய விருப்பமும், ஆற்றலும் உடையவர்கள் வேலையின்றி இருப்பதனையே வேலையின்மை எனலாம். இலங்கையில் இத்தொழில் வாய்ப்பின்மைக்கான வரைவிலக்கணத்தை 1982ம் ஆண்டில் தொழிலாளர் புள்ளிவிபரங்களின் 13வது சர்வதேச மகா நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தி சம்பந்தமான தன்மைகளை வெளிக்காட்டுவதாலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அந்த வகையில் வேலையின்மை, மறைமுக வேலையின்மை, கீழுழைப்பு, பருவகால வேலையின்மை, என வகைப்பட்டாலும் நான் இங்கு ஆராயமுற்படுவது திறந்த வேலையின்மை நிலையினையே. அதன்படி அண்மையாண்டில் இலங்கையின் வேலையின்மை நிலைகளை பின்வரும் புள்ளி விபரம் காட்டுகிறது.

## வேலையின்மை விகிதமும், எண்ணிக்கையும் -1960 - 1997

| ஆண்டு | ஆண்களின் விகிதம் % | பெண்களின் விகிதம் % | மொத்த வேலையின்மை விகிதம் % | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1959/ 60 | அ-மு | அ-மு | 10.5 % | 340000 |
| 1963 | ,, | ,, | 7.7 % | 264970 |
| 1968 | ,, | ,, | 13.4 % | 464200 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 1971 | ,, | ,, | 18.7 % | 839264 |
| 1973 | ,, | ,, | 18.3% | 793000 |
| 1975 | ,, | ,, | 19.7% | 984300 |
| 1978/ 79 | ,, | ,, | 14.8 % | 874000 |
| 1981/ 82 | ,, | ,, | 11.7 % | 609266 |
| 1985/ 86 | ,, | ,, | 14.1 % | 840252 |
| 1986/ 87 | ,, | ,, | 15.5 % | 966907 |
| 1990 | ,, | ,, | 16.3 % | 964331 |
| 1991 | ,, | ,, | 13.8 % | 810325 |
| 1992 | ,, | ,, | 13.3 % | 789256 |
| 1993 | 9.7 % | 21.7 % | 13.8 % | 839434 |
| 1994 | 9.7 % | 20.1 % | 12.1 % | 731215 |
| 1995 | 9.0 % | 18.7 % | 12.0 % | 739341 |
| 1996 (3ம்காலண்டு) | 8.8 % | 16.2 % | 11.6 % | 720721 |
| 1997 (1ம்காலண்டு) | 8.0 % | 16.2 % | 10.7 % | அ-மு |
| 1997 (2ம்காலண்டு) | 7.2 % | 16.3 % | 10.2 % | அ-மு |

ஆதாரம்: * THE SUNDAY TIME ( NOVEMBER 30/ 97)

* மத்தியவங்கி அறிக்கை - 1996

மேற்தரப்பட்ட அட்டவனையின் வேலையின்மையின் போக்கு முறைகள் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் 1996ம் ஆண்டின் சனத்தொகை 1831500 இதில் கிட்டத்தட்ட 62 இலட்சம் பேரைக் கொண்ட தொழில் படையையும் கொண்டுள்ளது. இதில் 55 இலட்சம் அல்லது 88% வீதமானவர்கள் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனர். அந்த வகையில் மொத்தச் சனத் தொகையில் தொழில் படை தொழிலில் பங்கேற்றுள்ள விகிதம் 48.6% ஆகும். அத்தோடு மட்டும்மன்றி 1996ம் ஆண்டின் நடுப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் நலிவடைந்ததால் தொழில் வாய்ப்பு உருவாக்கம் குறைவடைந்தது, கடந்த 5 ஆண்டுகளின் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.5% வீதம் அதிகரித்தது இதனால் 1.7% விகிதம் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்து 1% தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க ஆகக் குறைந்தது 3.5-4.0% பொருளாதார வளர்ச்சி தேவை. இதனடிப்படையில் 1996ம் ஆண்டில் 75000 புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடுகள் கூறுகிறது. இத்துடன் இன்னும் 5 ஆண்டுகளில் பொருளாதாரம் ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 90000 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குமேயானால் தொழில் இன்மை விகிதம் 11.6% என்ற தற்போதைய மட்டத்தில் இருந்து அதிகரிக்காது. எனவும், 2001ம் நூற்றாண்டில் தொழிலற்றவர்களின் முழுமையான தொகை கிட்டத்தட்ட 782000 ஆக அதிகரிக்கும் எனவும், அதே போன்று 158000 தொழில் வாய்ப்புக்களை ஆண்டு ஒன்றுக்கு உருவாக்குமானால் தொழிலின்மை வீகிதத்தை 6%வீதமாக குறைக்கலாம் எனவும் கணிப்பீடு ஒன்று கூறுகிறது.

ஆதாரம்:- 1996ம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கை இத்தொழில் இன்மைப் பிரச்சனையால் இலங்கை பொருளாதரம் எதிர் நோக்கும் விளைவுகளை ஆழமாக நோக்கினால் வேலையில்லாப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை அறியலாம். வேலையின்மையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களும், யுவதிகளும் வீட்டில் தங்கி வாழ்வோர்களாக இருப்பர். இதனால் வீட்டு வருமானம் தங்கி வாழ்வோரால் பிரிபடுவதால் வீட்டில் தலைக்குரிய வருமானம் குறையும். அது வறுமை நிலைக்கு இட்டுச் செல்வதோடு வாழ்க்கைத் தரத்தை குறைக்கும். இப்படியான சூழ்நிலையில் இளைஞர்களும் யுவதிகளும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடவும், ஒழுக்கக் கேடான நடவடிக்கைகளிலும் ஈடுபடும் அளவுக்கு இட்டுச் செல்கின்றது. அடுத்து கிராமப்புற இளைஞர்கள் யுவதிகள் வேலை தேடி நகர்ப்புறம் நகர்வதால் நகரின் சன அடர்த்தி அதிகரிக்கும், சுகாதாரம், தங்குமிடம், உணவு, பாதுகாப்பு தொடர்பான பல பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு கீழ் உழைப்பு நிலை தோன்றி திறமைகள் மழுங்கடிக்கப்படலாம். உதாரணமாக ஒரு பட்டதாரி தகுந்த வேலை கிடையாமல் சாதாரண கூலி வேலை செய்வதும், அவர் படித்த கல்வியும், அவரின் திறமையும் முடக்கப்படும் நிலைக்கு வேலையின்மை இட்டுச் செல்கின்றது. அத்தோடு மட்டுமன்றி வேலை இன்மையால் உழைக்க வேண்டியவர்கள் உழைக்காமல் இருப்பதால் உழைப்பு வீணடிக்கப்படுகிறது. இதனால் தேசிய வருமானம் குறையும் இது தலைக்குரிய வருமானத்தை குறைவடையச் செய்வதோடு அபிவிருத்திக்கு பங்கம் விளைவிக்கிறது. அத்தோடு குறைந்த வாழ்கை தர நிலை, வறுமை, கீழுழைப்பு, குறைந்த தலைக்குரிய வருமானம் என்பன இணைந்து தொடர்ந்தும் மக்களை வறுமை சக்கரத்திற்கே இட்டுச் செல்வதோடு அவ்வேலையின்மை அபிவிருத்தியின் பெறுமானத்தையும், மானிட அபிவிருத்தி குறிகாட்டியின் பெறுமானங்களையும் குறைத்து விடுகின்றன என்பதால் இன் நிலைமைகளை நீக்கி அரசாங்கங்கள் மிகவும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வகையில் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களை அடுத்து ஆராய்வோம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்கும் முகமாகவும் கட்டுப்படுத்தும் நோக்குடன் பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. அவை பெருமளவில் திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

* புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது. அதனால் 13 இலட்சத்திற்கு மேற்பட்ட வேலையற்றோர் வேலை பெற சந்தர்ப்பம் கிடைத்ததோடு சமூக பொருளாதார ரீதியாகவும் வாழ்க்கை தரங்களிலும் விருத்தி ஏற்பட வழிவகுத்துள்ளது.

* இலங்கையின் உற்பத்தித் துறைக்கான தயாரிப்புத் துறை, விவசாயத் துறை, சேவைத் துறை போன்றவற்றில் நுட்பங்களை அதிக உற்பத்தியை ஏற்படுத்தும் வகையிலும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி புதிய வேலைகள் வழங்கப்பட்டுள்ளது.

* திறந்த பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி, புதிய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பல தரப்பட்ட சலுகைகளை வழங்கி (வரிச்சலுகை, வரி விடுமுறை, பங்கு தாரர்களுக்கு வருமானவரி விலக்கு) உள் வரவழைத்து புதிய உற்பத்திச் சாலைகளை நிறுவி அதனுடாக பல்லாயிரக் கணக்கான வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

* பொருளாதாரம் திறந்து விடப்பட்ட பின்னர் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலிட்டது இதற்கு ஏற்ப இலங்கை அரசு சுதந்திர வத்தக வலயங்களை நிறுவியது. அத்தோடு அடிக்கட்டுமான அபிவிருத்திகளை ஏற்படுத்தி வழங்கியது. இதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வள ஒதுக்கீடுகள் கையாளும் விவேக முறைமைகள் என்பன இலங்கைக்கு படிப்பினைகளை வழங்கியது. இந்த வகையில் அரசும் நிறுவனங்களை உருவாக்கி தொழில் வாய்ப்புக்களை வழங்கியது. உதாரணமாக இலங்கையில் 5 சுதந்திர வர்த்தக வலயங்களை அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுநாயக்கா, பியகம, கொக்கலை, கண்டி, மிகியந்தலை போன்றவற்றை நிறுவி பல்லாயிரக்கணக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கி வழங்கியது.

* பல்லாண்டு அபிவிருத்தி திட்டங்களை உருவாக்கி பல்லாயிரக்கணக்கான வேலையில்லாதவர்களுக்கு வேலை வழங்கப்பட்டது, உதாரணமாக மகாவலி அபிவிருத்தித் திட்டம் நகர அபிவிருத்தி திட்டம், வீதி அபிவிருத்தி திட்டம், வீடமைப்புத்திட்டம் போன்றவற்றால் அபிவிருத்தியை மேற்கொள்வதோடு வேலைவாய்ப்பும் வழங்கியது குறிப்பிடதக்கது.

* திறந்த பொருளாதார கொள்கையால் கடல் கடந்த முதலீட்டாளர்களின் வருகையால் கடல் கடந்த வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 25இற்கு மேற்பட்ட வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் கிளைகளை ஆரம்பித்தது. அத்தோடு இவ் வங்கிகளின் விருத்தியும் செயல்திறனும் உள்நாட்டு வங்கிச் சேவையின் கட்டுமானங்கள் விரிவாக்கப்பட வழியமைத்தது. இதன்படி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டது. உதாரணம் கம்பியுட்டர் சேவை, இன்ரநெற் சேவை, ஏ. ரி. ஏம் **(A. T. M)**

* வேலையின்மையை குறைக்க முதலீட்டை அதிகமாய் உள்வரச் செய்யும் வகையில் பல தரப்பட்ட இஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது கொழும்பு பெரும் பாக பொருளாதார ஆணைக்குழு **(G. C. E. C** ) இது பின்னர் முதலீட்டுச்சபையாக மாற்றப்பட்டது. **( BOI )**, வெளிநாட்டு முதலீட்டு ஆலோசணைக்குழு **(FIAC)**, உள்நாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு **(LIAC)**, ஏற்றுமதி அபிவிருத்தி சபை **(EDB)**, இவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் மூலம் கூடுதலான முதலீட்டை உள் வரவழைத்து வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வழங்கியுள்ளது.

* தொழில் பேட்டைகளை நிறுவி வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் அந்த வகையில் ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவியதுடன் இதன்படி நாடெங்கிலும் 200 ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவி சுமார் 100000 வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக பூக்கொடை, வியாங்கொட, யக்கலை, துல்கிரிய, மெல்க்கோல்ட் போன்ற ஆடைத் தொழில்சாலை பேட்டைகளின் நிர்மானிப்பால் வேலைவாய்ப்பு அதிகரித்ததோடு கைத்தொழில் ஏற்றுமதியில் ஆடைத் தொழிலின் பங்களிப்பு 63% (1996) என அறியப்படுகிறது.

* முதலீட்டுச் சபைக் கைத்தொழில் நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ள மட்பாண்ட உற்பத்திகள், ஓடுகள், வெண்களிமண் உருவச்சிலைகள் உருவமைக்கப்பட்ட மட்பாண்டங்கள், பதனிடப்பட்ட சிலிக்கா, பளிங்குக்கல், படிகை கற் பாளங்கள், இரத்தினக்கல், அகழ்தல், பட்டைதீட்டல் போன்ற உலோகமல்லாத உற்பத்தி, உலோக உற்பத்தித் துறைகளில் தொழில்நுட்பமிக்க முன்னேற்றகரமான வழிமுறையின் ஊடாக இவற்றின் கட்டுமானங்களை விரிவு படுத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வழங்கியது.

* இலங்கையில் வேலையற்றோர்களுள் 5ம் வகுப்புக்கும், 10ம் வகுப்புக்கும் இடையில் கல்வி கற்றோர் கிட்டத்தட்ட 45% உள்ளனர். இவர்களுக்கு தகுந்த வகையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான தகைமைப் பயிற்சிகளை வழங்குதல், அத்தோடு சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக ஜனசவிய, சமூர்த்தித் திட்டங்கள் மூலமாக நடைமுறைப்படுத்தியுள்ளதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகளின் ஊடாக சுய தொழிலை மேற்கொள்ள நிதியுதவி, கடன்வழங்கல் திட்டங்களை அரசு முன்வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தோடு இயலுமான வரையில் வேலைவாய்ப்பின்மை நிலையை குறைக்க பல்வேறுபட்ட நடவடிக்கைக்கான முயற்சிகளை அரசு ஏற்படுத்தி வருவதாக 1996ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கை கூறுகிறது. அந்த வகையில் பின்வரும் அம்சங்களைக் கூறலாம்.

* புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமானால் உடனடியாக பொருளாதார அமைப்புச் சீராக்கம், கட்டுமான விரிவுபடுத்தல் போன்றவற்றினால் வேலைவாய்ப்பு வழங்க முயன்று வருகிறது.

* இலங்கை விவசாயத்துறையில் தங்கியிருக்கும் நாடு என்ற வகையில் உள்நாட்டு விவசாயத்துறைகள் தற்போது இருப்பதை விட கூடுதலான ஏற்றுமதி மிகைகளை கொண்டிருக்க வேண்டும் என்ற நோக்கோடு விவசாயத்துறையை அபிவிருத்தி செய்து வேலைவாய்ப்பை அதிகரிக்க முயன்றுள்ளது அரசு என மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது.

* பிரதேச ரீதியான கைத்தொழில்மயமாக்கல், விவசாய மயமாக்கல் என்ற திட்டங்களை ஏற்படுத்தி இளைஞர்களையும் யுவதிகளையும் திரட்டி வேலையில் ஈடுபடச் செய்தல் என்ற திட்டத்திற்கான முயற்சி நடைபெற்று வருகின்றது.

* பெரும் தோட்டங்களை விருத்தி செய்தலும், நுட்பம் மிக்கதாகவும், உற்பத்தியையும், ஏற்றுமதியையும், அதிகரிக்கும் வகையிலும், புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையிலும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

* விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை, போன்ற துறைகளில் கட்டுமானங்களையும், கட்டமைப்பையும் விரிவுபடுத்தி புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முயன்றுள்ளது. உதரனமாக இலங்கை போக்குவரத்து துறை (வீதிப் போக்குவரத்து, ரயில், விமானம், கப்பல்) சுகாதாரம், கல்வி, போன்ற துறைகளில் விரிவு படுத்தலூடாக புதிய வேலைவாய்ப்புக்களை வழங்க முன் வந்துள்ளது.

* இலங்கையின் சிவில் சேவைகளை விருத்தி செய்வதன் மூலம் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வேலையின்மையைக் குறைக்க முயன்று வருவதாக 1996 மத்திய வங்கி ஆண்டறிக்கை கூறுகின்றது.

* வேலைவாய்ப்புக்களை பெறக் கூடிய தொழில் கல்வி முறைகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை பெறக் கூடிய தகுதி நிலையை ஏற்படுத்த அரசு முயன்று வருவதாகவும் கூடுதலான நிதி ஒதுக்கீடும் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

* ஏற்றுமதியை நோக்கிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கையை நடைமுறைப் படுத்தி வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என்பதை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய முயற்சிகளை அரசு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என 1996ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கை கூறினாலும் ஒரு குறுகிய காலப்பகுதிகளில் இலங்கையின் குடித்தொகை அதிகரித்து வந்தாலும் அரசு அதனை தடுக்க வலுவாக முயலவில்லை மாறாக மனித வளங்களை முகாமை செய்வதன் ஊடாக அபிவிருத்தியை மேற்கொள்ளவே அரசு முயல்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் ஆக உச்ச மட்டத்தை எட்டிய பல காலகட்டங்களிலும் அரசு பல துணிகர திட்டங்களை மேற்கொண்டு வந்துள்ளமை பாரட்டுக்குரியதே. இருந்தாலும் தொகுத்து நோக்குகையில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு காரணமாக, கட்டில்லாமல் அதிகரிக்கும் சனத்தொகையும் இதனால் ஆண்டு ஒண்றுக்கு வேலையில்லாதோர் பட்டியலுக்கு 120000 பேர் இனைந்து கொள்வதும், அடுத்து இன் நாட்டில் கனியங்கள் அருமையாகவும், மக்களின் தொழில் வாய்ப்புக்கும் ஏற்ற புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க கூடிய வகையில் இவை இலங்கையில் இல்லை என்பதாலும், வேலைவாய்ப்பை பெறக் கூடிய வகையில் கல்வி அமைப்பு இன்மையில் இன் நிலை உருவாக்கத்திற்கு அடிப்படையாக உள்ளது. அத்தோடு இப்பிரச்சனை அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருப்பதோடு அரசு மிகவும் விரைவாக தீர்வு காண வேண்டிய முக்கிய பிரச்சனையாகவும் உள்ளது. இவ்விடயத்திற்கு முற்றுப்புள்ளி இடுவதும், அல்லது வளர்வதும் அரசுகளின் செயல் திறனில் தான் தங்கியுள்ளது. உண்மையில் இக் கணிப்பீடு வழு உள்ளதாக காணப்படுகிறது. அதாவது வேலையில்லாதவர்களும், வேலையின்மை விகிதமும் தற்போதைய அளவுகளை விட அதிகமாகவே இருக்கும். எவ்வாறெனில், வடக்கு, கிழக்கு பகுதியில் தற்போது நிலைவிவரும் போரின் காரணமாக இக் கணிப்பீடுகள் இடம் பெறுவதில்லை. இதனால் புள்ளிவிபரங்களில் வடக்கு, கிழக்கு நீங்கலானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு கிராமியப் பகுதியில் வாழ்வோர்கள் இக் கணிப்பில் இணைத்துக் கொள்ளப்படுவது குறைவு, இத்துடன் படைமுகாம்களில் படையினருடன் வாழும் உறவினர்கள் இக்கணிப்பில் இடம் பெறுவதில்லை, இடம் பெற்றால் மேற்போன்ற மதிப்பீடுகள் மேலும் அதிகமாகும். அத்தோடு உள்ளார்ந்த திறமையாளர்கள் குறைவளப்பயன் பாட்டில் இருப்பின் அவர்களும் வேலையற்றவர்களாகவே கருதப்படுவர் என்பது இவ் எண்ணக்கருவின் குறைபாடாகக் காணப்பட்டாலும் பரந்த ஒரு பேரண்ட பொருளியல் மட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்ட பிரச்சனை முக்கியமாக தீர்க்கப்பட வேண்டிய பொறுப்பு அபிவிருத்திப் பாதையில் செல்லும் இலங்கையின் தலையாகிய கடமையாகும்.

## உசாத்துனை நூல்கள்:


1. மத்திய வங்கி ஆண்டறிக்கை - வெளியீடு - மத்திய வங்கி - 1996- 1995.

2. இலங்கை பொருளாதாரம் மாற்றத்தை நோக்கி - **MENTOR - VO-1** கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட காலாண்டு சஞ்சிகை- **K.T.K.** தம்பையா - ஜனவரி -1995

4. அமைப்பு ரீதியான சீராக்கமும் இலங்கையின் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கமும் - பொருளியல் நோக்கு -மக்கள் வங்கி சமன் கலோகம, **N.** திருச்செல்வம்-ஜனவரி - பெப்ரவரி 1995.

5. இலங்கையின் மனித மூலவள அபிவிருத்தி - பொருளியல் நோக்கு - மக்கள் வங்கி - சுதந்த ரணசிங்க - டிசம்பர்- 1993 ஜனவரி - 1994.

6. குடித்தொகை பெருக்கமும் பொருளாதாரத்தின் மீது எடுத்து வரும் தாக்கமும் - பொருளாதார நோக்கு - மக்கள் வங்கி - இந்திரலால் டி. சில்வா, சுதர்மா பிரிய தர்சினி - நவம்பர்-1994.


7. இலங்கையின் சனத்தொகை பிரச்சனை - பொருளியலாளன் - இளம் பொருளியலாளர் சங்கம் ( யாழ்ப்பாணம் ) -கார்த்திகேசு குகபாலன் - செப்டெம்பர் 1988.



ஆக்கம்: சுப்பிரமணியம் ஹரன்
பொருளியல் சிறப்புக் கற்கை
(2ம் வருடம்)கிழக்குப் பல்கலைக் கழகம்)
வந்தாறுமூலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவுகளைத் தேடி


## இது என் குரல் அல்ல நண்பனின் குரல்

காலம் மட்டும் சென்று கொண்டிருக்கிறது
நான் அவளுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன்
அவள் எனக்காக காத்திருப்பாள்!.........
ஏன் இந்த காத்திருப்பு?
இந்தக் காத்திருப்புக்குக் கால இடைவெளிதான்
காதல் இடைவெளி என்றால்
நம் இருவருக்குமிடையில் ஏன் இந்த தாமதம்.......
இது உன் தாமதமோ என் தாமதமோ அல்ல
நம் தயக்கத்தின் தாமதம்...... பின் ஏன்........
காலம் வரட்டும் என்று பழியை
காலத்தில் சுமத்தி விட
காலம் எல்லாம் - நீ ஒரு காதல் கனி எனக்கு
கசப்போ புளிப்போ.....
உன்னை கதைத்து கடித்து சுவைக்காவிடினும்
பார்த்து சுவைக்க காலம் ஒன்றும் தடைக்கல் அல்ல எனக்கு
சில வேலிகளை எண்ணி என்னை கேலியாக்காதே
உன் நினைவுகள்
என் கனவுகள் அனைத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டும்
என் அமைதிப் படுக்கையை அழித்து விட்ட போதிலும் கூட
உன்னை ஏன் மனம் அணைத்துக் கொள்கின்றது.....
அது புரியவில்லை என்பதற்காகத்தான்
உன்னை என் மனம் ஆராய்ச்சி செய்கின்றது
என் முடிவு மட்டும் உன் முடிவுக்காக
காத்திருக்க காலம் உதவி புரியட்டும்
முடிவுகளைத் தேடிக் கொண்டு........

- யாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுச் செய்தி

கடந்த இரு வருடங்களில் எமது வெற்றிகளும் 1997/ 98 இல் பீடங்களுக்கிடையிலான போட்டிகளில் வெற்றி பெற்ற குழுக்களில் பங்கு பற்றிய மாணவர்களும்

## INTER FACULTY CHAMPIONS SHIPS

**1996 / 97 CHAMPIONS (6)**

NET BALL , CRICKET
FOOT BALL, BASKET BALL
CHESS (WOMEN) , VOLLY BALL

**RUNNER UP (1)**

CHEES (MEN)

**1997 / 98 CHAMPIONS (7)**

FOOT BALL , BATMINTON (MEN)
BASKET BALL , CHEES (MEN)
CRICKET , TABLE TENNIS (WOMEN)
NET BALL

**RUNNER UP (1)**

VOLLY BALL

## 1997 / 98
## FOOT BALL - CHAMPIONS

(1) B. KETHEESWARAN (C) (2). T. SUBASKAR (V.C) (3) B. KONESH
(4) V. VIJAYAKUMARAN (5) S. RAMESHKANNA (6) A. ARULJOTHIE
(7) S. ANTONY (8) S. SASIHARAN (9) Y. JEYACHANDRAN
(10) S. JEEVARATNAM (11) M. SUBASH (12) T. THIRESKUMAR
(13) S. RAJANATHAN (14) S. VIMAURAJAH (15) T. SUTHAN
(16) M. MATHIYALAGAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VOLLY BALL - RUNNER CUP

1) S. SASIHARAN (C)
(2) S. GANESH (V.C)
(3) S. ANTONY
(4) T. THAMPIRAJAH
(5) B. KATHEESWARAN
(6) B. KONESH
(7) T. SUBASKAR
(8) S. KUGANESAN
(9) S. SUTHARSAN
(10) Y. JEYACHANDRAN
(11) N. MANIVANNAN
(12) V. VIJAYAKUMARAN

## BASKETT BALL - CHAMPIONS

(1) M. MATHIYALAHAN (C)
(2) S. ANTONY DAS (V.C)
(3) G. JEYASEELAN
(4) S. ANTONY
(5) S. SUTHARSAN
(6) S. SATHEES
(7) E. PARAMASIVAM
(8) V. JEBANESON
(9) D. STALIN
(10) B. KONESH
(11) P. NAGULESWARAN
(12) G. GNARUBAN

## NET BALL - CHAMPION

(1) S. PREETHEE (C)
(2) J. MANOJA
(3) M. RAJANIDEVI
(4) T. SIVAJINI
(5) P.UMADEVI
(6) G. MATHUMAIYAL
(7) S. USHANTHY
(8) N. GEETHANJALI
(9) P. PATHMARAJANI
(10) S. UVARANI

## CHEES CHAMPIONS

(1) S. RAJANATHAN (C)
(2) P. THARMAPALAN
(3) K. CHANDRAKUMAR
(4) B. KOKULARAJAN(VO)
(5) P. MANIVASAKAM
(6) V. PRABAKARAN
(7) S. ANTONY
(8) T. SUTHAN

## BAT MINTON - CHAMPIONS

(1) S. ANTONY (C)
(2) G. JEYASEELAN
(3) T. RANJITH
(4) D. STALIN
(5) R. MANIVANNAN
(6) V. VIJAYAKUMAR
(7) N. NAGANATHAN
(8) K. KARUNA MOORTHY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CRICKET CHAMPIONS

(1) R. NAGULESWARAN (C)
(2) S. RAMESHKANNA
(3) A. SUTHARSHAN
(4) Y. JEYACHANDRAN
(5) T. VASANTHARAJAH
(6) M. SATHESKUMAR
(7)V. VIJAYAKUMARAN
(8) K. KARUNAMOORTHY
(9) K. GOWRISWARAN
(10) T. THIRESKUMAR
(11) A. ARULJOTHY
(12) A. JAYASITH
(13) B. KONESH
(14) T.SUTHAN
(15) T. SUBASKARAN
(16) SASIKARAN

## TABLE TENNIS CHAMPION (WOMEN)

(1) J. MANOJA (C)
(2) A. ARUNOTHINI
(3) M. JEYANTHINI
(4) S. KAVITHA
(5) V. ANITANIRMALA
(6) T. JOSOTHARA
(7) J. CHANDRABAVANI
(8) G. UDAYA.

தொகுப்பு:-

**பாலசுந்தரம் கோணேஸ்**

2ம்வருட வணிக முகாமைத்துவ பீடம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோ இறுதி வருட மாணவர்களின் முகவரிகளைத் தேடுகிறார்கள்.

## MANAGEMENT - 92 / 93

MISS. ANITANIRMALA VELNAYAGAM
40/2, PIRIVENA ROAD
MT - LAVINIA

MISS. N. THIRUNAVUKKARASU
16/10, CENTER ROAD
ORRS' HILL
TRINCOMALEE

MR. M. MATHIYALAGAN
167 TRINCO ROAD
BATTICALOA

MR. P. NAGULESWARAN
MUTHALAIKKUDHA
KOKKADDICHOLAI

MR. P. THANESWARAN
WORD NO - 2
KUCHCHAVELI
TRINCOMALEE

MR. R. NAGULESWARAN
4TH CROSS STREET
PILLYAR KOVIL VEETHY
KALLADY
BATTICALOA.

MR. S. ANTONIDAS
17/1, FIRST BAILEY CROSS ROAD
BATTICALOA.

MISS. P. JAMUNA
19, THIRUMAL STREET
TRINCOMALEE

MISS. T. YASOTHARA
C/O, M. THIAGARAJAH
K.V.P.LTD
DICKOYA.

MR. A. ARIYASUTHAN
CENTRAL ROAD
BATTICALOA.

## COMMERCE - 92 / 93

MR. A. KARUNAMOORTHY
BT/ MANKADU
CHEDDIPALAYAM

MR. TRINETE MARDBEI ANDREAS
12, NALLIAH ROAD
BATTICALOA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MR. A. PUVANAGANTHY
21D, CENTRE ROAD
ORR'S HILL
TRINCOMALEE.

MISS. T. KALADEVI
28/5, PIONEER ROAD
BATTICALOA.

MR. A. LINUS RANJAN
MUTHALIYAR ROAD
AKKARAIPATTU - 08.

MISS. KALAICHANTHY
18, UNIT 2
VAVUNIKKULAM.

MISS. G. UTHAYAKALA
114, GEORGE STREET,
TRINCOMALEE.

MRS. B. JEGANATHAN
JOTHY STORES
COMMATHURAI
CHENKALADY.

MR. J. NIRANJANAKUMAR
79, LAKE ROAD,
BATTICALOA.

MISS. V.J. MANOAJAH
290/5, INNER HARBOUR ROAD
TRINCOMALEE.

MR. P. MOHANARAJAH
SINNAPUTHUKULAM
VAVUNIYA.

MR. S. ANTONY
40, CATHEDRAL STREET
TRINCOMALEE.

## ECONOMICS SPECIAL - 92 / 93

MR. K. PRABAHARAN
MENKAMAM
KILIVEDDY
MUTUR.

MISS. K. THEVALATHA
C/O, KARTHIGESU
QUARRY ROAD
KALMUNAI.

MR. M. SRI SARAVANAPAVA
MARKET ROAD
KODDAI KALLAR - 1
KALLAR.

MR. V. VIGNASWARAN
KIRANKULAM - CENTRAL
KURUKKLMADAM.

MISS. M. MANIVILI
WARD NO: 06,
SAMPALTHIVU.

MR. S. SASIHARAN
147/12, SOTHY STREET
NOCHCHIMUNAI
BATTICALOA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Final Year

## STANDING

A. PUVANAGANTHY, T. KALADEV, S. ANTONIDAS, P. THANESWARAN,
M.'SARAVANAPAVA, P. MOHANARAJAH, M. MATHIYALAGAN, S. ANTONY
J.NIRANJANAKUMAR, S. SASIHARAN, T. ARULTHASAN,
A. KARUNAMOORTHY, A. LINUS RANJAN, V. VIGNAS WARAN,
MARDBEL ANDREAS, ANITA NIRMALAVELNAYAGAM

## SIT

J. CHANDRABAVANY, S. KALAICHANTHY, T. YASOTHARA
K. PRABAHARAN, PROF.G.C. RAJENDRAN (VICE CHANCELLOR),
MRS. JANANEE RAGURAGAVAN (DEAN FACULDY OF COM AND MGET),
R. NAKULESWARAN, P.JAPUNA, K. UTHAYAKALA, J. MANOAJAH.

## AB

M. MANIVILI, T. NIRMALA, P. NAGULESWARAN, A. ARIYASUTHAN,
K. THEVALATHA.

# 3rd Year

## 1st Row

Miss.M.KARTHIGESU, Miss.P.YHURAILINGAM,Miss.T.VELAUTHAM, Miss.P.THANGRARAJAN
Miss.S.VIJAYALUXMY, Miss.N.SAROJINI, Prof.G.F.RAJENDREM (Vice chancellor)
Mrs.JANANEE RAGURAGAVAN (Dean, Jaculdy of commerce and mangement)
Miss.A.THILAKESWARI, Miss.P.ARULARASI, Miss.V.NAGALINGAM, Miss.K.ARULVANI
Miss.R.VELMURUKU, Miss.F.B.G.SANDRASEGARAMPILLAI, Miss.S.SHANMUGARAJAH,
Miss.P.SRIRAMAKRISHNA

## 2nd Row

Mr.K.GOWRISWARAN, Mr.S.KANGATHARAN, Mr.S.KANESHAN, Mr.S.KOKILAVASAN
Mr.R.AUGASTINE SWANITHAS, Mr.T.THIVIARAJAH, Mr.M.MOHANATHAS
Mr.M.RAMESH, Mr.K.RAMESH, Mr.A.JEGATHEESAN, Mr.T.RAVICHANDARAN
.Mr.S.VARATHARAJAN, Mr.S.PRAGALATHAN, Mr.K.PRINCE MANIVASAN,
Mr.K.THANAPALASUNDARAM, Mr.P.KONALINGAM, Mr.V.GANESWARAN,
Mr.K.THANKAVADIVEL, Mr.P.SHANMUGANATHAN.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3rd Row

Mr.T.PUVANENDRAH, Mr.P.THARMAPALAN, Mr.D.S.CROOS, Mr.THAMBIRASAN, Mr.S.SIVASKARAN, Mr.A.SASEEKARAN, Mr.K.LINKESWARAN, Mr.S.RAJANATHAN, Mr.T.MATHIYALAGAN, Mr.V.KANESAMOORTHY, Mr.M.SUTHAKARAN,Mr.V.JEBANESAN, Mr.K.VILLAVAN, Mr.T.RAVEENTHIRALINGAM, Mr.R.PURAPANANTHAN, Mr.S.SUHAKARAN, Mr.K.EHALAIVAN, Mr.M.SHANMUGARAJAH.

### ABSENT

Mr.K.LAVANATHAN, Mr.V.VELRAJASEGARAM, Mr.N.JEHATHAPARAN, Mr.K.THANKAVADIVEL, Mr.T.ABDULLAH, Mr.K.PUSHPAKARAN., Mr.A.ELAVANIYAN

# 2nd Year

## 1st Row

P.SIVAKANTHAN, S.REMESHKANNAH, J.SHOBA, S.SHANTHINI, M.RAJANIDEVIS.MANJULA, T.LENUKA S.THANALUXMI, Prof. G.F.Rajendaram (Vice Chancellor), Mrs.Jananee Raguragavan, '(Dean faealdy of commeree and management, T.GANANATHARSINI, A.ARUNOTHINI, S.SUSITHA, P.UMADEVI P.AMPIGAITHARSHINI, N.SUNITHRA, P.PATHMARAJANI, K.CHANTHIRAKUMAR, S.JAYAPALAN.

## 2nd Row

R.SHAMINI, P.LATHA, N.DONITA, S.KUMUTHINI, M.GANGA, T.SOWTHAYINI, P.RANJINI, M.JAYANTHINI, J.JANANI, S.SASIVATHANI, A.ARULJOTHY, K.MOHANARAJAH, S.VIMALARAJAH, V.KARUNAKARAN, S.GARAN, K.JEGATHEESAN, V.VIJAYAKUMARAN, T.SUBASKAR, S.PARAMESHWARAN, V.PRABAHARAN, Y.RAGUNATHAN, T.VASANTHARAJAH, N.RAMESH, T.SUTHAN, N.GEETHANJALI, N.VENOTHINI S.THAYANITHY, K.SUTHARSHINI, S.KANAHAMMAH, S.KALATHEVY

## 3rd Row

M.ILANKUMARAN, K.GUNALAN, S.RAAJBABU, T.AMBIGAPATHY, S.VASITHARAN S.LINGESHWARAKUMAR, M.AMIRTHASHANKAR, E.PARAMASIVAM, N.MANIVANNAN, M.MATHIYALAKAN, T.THIRESHKUMAR, K.SHANTHIRASEGARAN, K.GNANARUBAN, A.WINTON, A.SUTHARSHAN, W.RAVISHANKAR, K.RETHNAKUMAR, B.KETHESWARAN, B.KONESH, N.JEYASUNDRAM, B.SENTHILKUMARAN, R.MANIVANNAN S.SELASTIN.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1st Year

## 1st Row (Left to Right)

S.Ushanthy, G.Jeyanithy, T.Thanujaa, K.Kunthavie, N.Suthajini, V.C.Prof.G.F.Rajendaram (Vice.chancellor),, Dean. Mrs.Janance Ragaragavan (Dean faculty of commerce and management), S.Yuvarani, T.Ganga, K.Manjulah, M.Jancy Nalini, S.Sivamalar, G.Mathumaiyal.

## 2nd Row (Boys)

K.Navaretnarajah, S.Ragulan, I.Rex Ravel, V.Premakumar, V.Thevanesan, B.Suresh, A.L.M.Fairoos, E.Elankeswaran, T.Jeyarupan, S.Vignarajah, S.Thusganthan.

## 3rd Row

M.Mahilan, R.Logeswaran, T.Chandagopan, AA.Arulrajah, I.Jeyachandran, A.Chandramohan, G.Christy Sutharsan, M.Sathikumar, S.Kuganesan, S.Sivanesarajah, T.Ollegasegaram.

## 4th Row

K.SURESH, G.RAMESHKUMAR, A.R.SEINUDEEN, S.KALITHAS, R.KANGATHARAN, N.NAGANATHAN, S.MANGALASUBASKARAN, S.JEEVARETNAM, K.KODEES WARAN, P.THAVENDRAJAH, B.NIRANJAN, G.JEYASEELAN, B.KOKULARAJAN, K.THIRUCHELVAM, K.LINGESH WARAN, K.UMASHANGAR.

## ABSENT

T.KAMALANATHAN, M.SIVANESHWARAN, A.VIMALARANI, A.MURALITHARAN, M.DENI, M.SUBAS, S.NIRANJANA, M.ARASARETNAM, JANTION NIMALESH, K.KALARANI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இதயம் கவர்ந்த அன்பான

மாணவ மணிகளே!

"ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்"

- பாடசாலை உபகரணங்களையும்,
- அழகு சாதனப் பொருட்களையும்,
- கடிகாரங்களையும்,
- எவர் சில்வர் பொருட்களையும்,
- மின்சாரப் பொருட்களையும்,
- அன்பளிப்புப் பொருட்களையும்,

இன்னும்

தரத்தில் உயர்ந்த சகல பொருட்களையும்

மலிவாக ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்

**அஜந்தா மொடல் சொப்**

பிரதான வீதி, செங்கலடி.

தொலைபேசி : 065 - 40529

**AJENTHAA MODEL SHOP**

MAIN STREET, CHENKALADY

NAME:.......................................

YEAR:.......................................

SCHOOL:...................................

அஜந்தா ரேடிங் பாட்டா, சாந்தி பொறின் லிக்கர் சொப், சாந்திஹொட்டல

பிரதானவீதி

செங்கலடி.



**இலக்கு சஞ்சிகைக்கு எமது வாழ்த்துக்கள்**

**Jothy Stores**

Main Street

Kommathurai



**DILAK TELECOM**

JOTHY AGAM

KOMMATHURAI

LOCAL & IDD.

T.P: 40181



SOFT DRINK

BICYCLE PARTS

FANCY GOOD

OTHER HOUSE HOLDS GOODS

WEEKEND NEWS PAPERS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDIO LAKE

ஸ்ருடியோ லேக்

ස්ටුඩියෝ ලේක්


**Order No:**

T.Phone:- 065 - 2740

Prop:- K.T. MOORTHY

**Undertaken:**

**Photography, Developing, Printing, Enlarging.**



**41, Munai Street**
**Batticaloa**

*With Best Wishes*

**GJ**

VISIT FOR
SOVEREIGN GOLD
JEWELLERS

**Gayaththiri Jewellery**

*Magathmaganthi Road,*
*No: 12, 1st Cross,*
*Batticaloa.*

நவீன ரெடிமேற் ஆடைகளின் தெரிவுக்கு:-

புளூலகூன்



BLUE LAGOON

*ELEPHANT PANTS, SALWARY,*
*PINA FORM* ஆகியவற்றின் முன்னோடித் தெரிவுக்கு

**புளூலகூன்**

117, திருமலை வீதி,
மட்டக்களப்பு
T.P. 065 - 23280.

**சென்ரல் புக் ஷொப்**



பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று

உங்களுக்குத் தேவையான

- சகல விதமான அப்பியாசக் கொப்பி வகைகள்
- காரியாலய உபகரணங்கள்
- கடதாசி ஆலைக் கூட்டுத் தாபனத் தயாரிப்புக்கள்
- நாவல்கள்
- கவிதைகள்

மற்றும் பல்வேறு புத்தகங்களையும்
பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய நிலையம்

**CENTRAL BOOK SHOP**

POTTUVIL ROAD
AKKARAIPATTU





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி நகை மாளிகை

இல, 15 முனை வீதி,
மட்டக்களப்பு.

No: 15, Munai Street
Batticaloa.

**Gowriy**



**Jewellery Palace**

சிறந்த சிற்பாசாரியினால் நவீன காலத்துக்கு ஏற்ப சிறந்த தங்க நகைகளை பரிசீலித்து உத்தரவாத முத்திரை 22CT பதித்து வழங்குகின்றனர்.

**T.Phone: 065 - 22838**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறி வாழ்த்துகின்றோம்........

ஆசியுரை வாழ்த்துரை தந்த உபவேந்தர், பீடாதிபதி அவர்கட்கும், சஞ்சிகை வெளியீட்டுக்கு எம்மை ஊக்கப்படுத்தி பல்வேறுபட்ட வழிகளில் ஆலோசனைகளை கூறி வெளி நபர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு, படைப்பு ஒன்றினையும் பெற்றுத் தந்து உதவிய வர்த்தகத் துறைத் தலைவர் திரு.லோகேஸ்வரன் அவர்கட்கும் மற்றும் ஏனைய விரிவுரையாளர்களுக்கும், படைப்புக்களை தந்து உதவிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதியை பெற்றுக்கொள்ள உதவிய கிழக்குப் பல்கலைக் கழக நிதியாளர், மற்றும் சிபார்சு தந்த வணிக முகாமைத்துவ பீட பெரும் பொருளாளர் திருமதி.ஜனனி ரகுராகவன் அவர்கட்கும், அட்டைப் படத்தினை நேர்த்தியான முறையில் வடிவமைத்து தந்த பகிரதன், ஜெயராஜ் விரிவுரையாளர்களுக்கும் இலக்கினை நேர்த்தியாக அசசிட்டு உதவிய மட்டக்களப்பு ஈஸ்ரன் கிறாபிக்ஸ் அச்சக முகாமையாளர் வ.ஜீவானந்தன் அவர்கட்கும், கணனிமயவாக்கத்திற்கு பல வழிகளில் உதவிபுரிந்த தி.கௌசலா, சி.சுதாஜினி அவர்கட்கும் ஏனைய ஊழியர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர் அவை சார்பாக

**இதழாசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From :*



***Letter Press & Offset Printers,***
***Publishers & Process Artists.***

# Eastern Graphics

*205/2, Bar Road,*

*Batticaloa,*

*Sri lanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org